# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 40

விலை - 40ரூபா

சுடர் 34 கதிர் 325 ஐப்பசி 03 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 20 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## 13 அம்சக் கோரிக்கைகளுக்கு என்னால் பதிலளிக்க முடியாது

### தமிழ்க் கட்சிகளுடன் மனம் விட்டு பேசத் தயார் என்கிறார் சஜித்



கொழும்பு, ஒக். 20

தமிழ்க் கட்சிகள் முன்வைத்துள்ள 13 யோசனைகள் தொடர்பில் என்னால் இப்போது பதிலளிக்க முடியாது. ஆனால் தமிழ்க் கட்சிகளுடன் 37

## 13 அம்சக் கோரிக்கைகளை அடியோடு நிராகரிக்கின்றேன்

### தமிழ்க் கட்சிகளின் ஆதரவில்லாமல் தமிழரின் வாக்குகளை அள்ளுவேன் என்கிறார் கோத்தா



கொழும்பு, ஒக். 20

தமிழ்க் கட்சிகள் முன்வைத்துள்ள 13 அம்சக் கோரிக்கைகளையும் ஒருபோதும் நிறைவேற்ற முடியாது. அவற்றை நான் அடியோடு நிராகரிக்கின்றேன். 37

### சு.க. – கோத்தா ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஒக். 20

சுதந்திரக் கட்சிக்கும், பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாயவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்திடப் பட்டது.

மேல்மாகாண அழகியல் கலை அரங்கில், சுதந்திர கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி 37

### அரச தலைவர் வேட்பாளர்களுடன்

# நாம் வலிந்து சென்று பேசமாட்டோம் ஆதரவு தேவையென்றால் வரவேண்டும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 20

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பின்னால் சென்று அவர்களுடன் பேச்சு நடத்த நாம் தயாரில்லை. எமது ஆதரவு தேவை என்றால் அவர்கள்தான் தேடி வரவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. 37

## ராணுவத் தளபதியின் தெளிவுபடுத்தல் திருப்தி

*மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 20

வேட்பாளர் ஒருவரின் பரப்புரை விளம்பரத்தில் இராணுவத்தளபதியின் படம் மற்றும் அவரது கருத்துக்கள் உள்ளடங்கியிருந்தமை குறித்து இராணுவத்தளபதியால் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஊடாக தேர்தல் ஆணையகத்துக்குத்தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அந்தத் தெளிவுப்படுத்தல் தமக்கு 37

## தேர்தல் விளம்பரத்துக்கு பொறுப்பேற்க முடியாது

*சவேந்திர சில்வா கூறுகிறார்*

கொழும்பு, ஒக். 20

தாம் முன்னர் கூறிய கருத்தை அரச தலைவர் தேர்தல் விளம்பரத்துக்காகப் பயன்படுத்தியமைக்கு தம்மால் பொறுப்பேற்க முடியாது என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கோத்தபாய ராஜபக்சவின் பரப்புரை விளம்பரத்தில் இராணுவத் தளபதியின் படம் மற்றும் கருத்து என்பன இடம்பெற்றிருந்தது. இதுகுறித்து ஐக்கிய தேசியக் கட்சி செய்த முறைப்பாட்டை அடுத்து, இவ்வாறான விளம்பரங்களை வெளியிடுவது தேர்தல் சட்ட மீறல் என்று தேர்தல்கள் 37

## சோறு சாப்பிட வேண்டுமா? துப்பாக்கிச் சூடு வேண்டுமா?

*பதில் உங்கள் கைகளில் என்கிறார் ரணில் விக்கிரமசிங்க*

கொழும்பு, ஒக். 20

சோற்றை சாப்பிட வேண்டுமா? அல்லது துப்பாக்கிச் சூடுகளை எதிர்கொள்ள வேண்டுமா என்று நவம்பர் 16ஆம் திகதி நாட்டின் வாக்காளர்கள் தீர்மானிக்க வேண்டும். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை லக்கல பகுதியில் நேற்றுச் சனிக் 37

## பலாலி – சென்னை இடையில் பயண நேரம் 50 நிமிடங்கள்

*அதிகார சபை பணிப்பாளர் தகவல்*

கொழும்பு, ஒக். 20

யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு, 50 நிமிடம் தொடக்கம் 1 மணித்தியாலமே தேவைப்படும். இவ்வாறு சிவில் வானூர்திப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நிமல சிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் 17ஆம் திகதி 37



## ஸஹ்ரானுடன் இருக்கும் காணொலி நடந்ததை விவரிக்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஒக். 20

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த ஹிஸ்புல்லாஹ், தனக்கு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்தபின் குண்டர்களை வைத்து எங்களது கட்சி ஆதரவாளர்களைத் தாக்கினார். அதனைப் பார்வையிடச் சென்ற இடமொன்றில் பயங்கரவாதி ஸஹ்ரானும் இருந்திருக்கிறான். அந்தப் பழைய காணொலியை வைத்து சிலர் அரசியல் ஆதாயம் தேடுவதற்கு முற்பட்டுள்ளனர் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாச கலந்து 37

## பலாலியில் தமிழுக்கு முதலிடம் அரச மொழிக் கொள்கை மீறல்

### தெற்கில் கொந்தளிக்கிறது மகிந்த அணி

கொழும்பு, ஒக். 20

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் பெயர் பலகைகளில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை குறித்து, கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கடும் கண்டனம் 37

## வடக்கில் 400 கிலோ கஞ்சா மீட்பு சந்தேகத்தில் பொலிஸாரும் கைது

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ்ப்பாணம் பருத்தித்துறைக் கடற்பரப்பில் 220 கிலோ கஞ்சாவும், மன்னாரில் 180 கிலோ கஞ்சாவும் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளன. மன்னாரில் கஞ்சாவை வைத்திருந்த சந்தேகத்தில் பொலிஸ் அலுவலர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைசேர இணையுங்கள்

VTA
ශ්‍රී ලංකා වෘත්තීය පුහුණු අධිකාරිය
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
Vocational Training Authority of Sri Lanka

## 2020 NVQ பாடநெறி தொடர்பாக பயிலுனர்களை இணைத்துக்கொள்ளல் ஆரம்பம்

### தேசிய தொழிற்பயிற்சி நிலையங்கள்

| | |
|---|---|
| நாராஹேன்பிட | 0112592233<br>0710318711 |
| ஒருகொடவத்தை | 0113698300<br>0710318718 |
| இரத்மலானை | 0112638850<br>0710318736 |
| மிரிஞ்ஞவில | 0472220501<br>0711212372 |
| பத்தேகம | 0912293119<br>0711039481 |
| நியாகம | 0912296445<br>0711213609 |
| தலல்ல | 0412259331<br>0711211729 |
| மட்டக்களப்பு | 0652240159<br>0710318732 |

### மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்கள்

| | |
|---|---|
| அனுராதபுரம் | 0252221400<br>0710318741 |
| பதுளை | 0572223043<br>0710318731 |
| மட்டக்களப்பு | 0652240159<br>0710318732 |
| கொழும்பு | 0112844151<br>0710318733 |
| காலி | 0912234540<br>0718136566 |
| கம்பஹா | 0332294790<br>0711361130 |
| ஹம்பந்தொட்டை | 0472241724<br>0711212541 |
| யாழ்ப்பாணம் | 0212227949<br>0710318737 |
| களுத்துறை | 0342263698<br>0710318752 |
| கண்டி | 0812387200<br>0711212013 |
| கேகாலை | 0352282565<br>0719476681 |
| குருணாகல் | 0372237436<br>0711212226 |
| மாத்தளை | 0662286683<br>0710318742 |
| மாத்தறை | 0412235950<br>0710318743 |
| மொனராகலை | 0552274775<br>0711040026 |
| நுவரெலியா | 0522223216<br>0710318745 |
| பொலன்னறுவை | 0272245442<br>0711212253 |
| புத்தளம் | 0322254110<br>0718260358 |
| இரத்தினபுரி | 0452274699<br>0710318748 |
| திருகோணமலை | 0262234517<br>0710318749 |
| அம்பாறை (சிங்களம்) | 0632223821<br>0711213199 |
| அம்பாறை (தமிழ்) | 0672251155<br>0710318729 |
| வவுனியா | 0242221617<br>0710318750 |
| கிளிநொச்சி | 0212285686<br>0777352865 |
| முல்லைத்தீவு | 0212290097<br>0713956503 |
| மன்னார் | 0710318750 |

011-7270270
011-7277888
Fax: 011-2502342
cgjp@vtasl.gov.lk
f : VTA

D.by :- upekshasanduni408@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வான
அவளுடன்

## ஒன்றாய் முன்னோக்கி

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் சகல பெண்களின் கவனத்திற்கு...

நீங்கள் ஒரு யுவதியாக, தாயாக, மனைவியாக, பாட்டியாக இருப்பீர்கள்.
இவற்றில் நீங்கள் எந்த ஸ்தானத்தில் இருப்பினும்,

**நான் உங்களுக்காக எனது கடமையினை செய்கிறேன்.**

நீங்கள் இந்த தேசத்தின் உண்மையான சக்தியாகும். நாட்டைக் கட்டியெழுப்பவும் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கும் தேவையான உயிர்நாடிகளும் நீங்களேயாகும். இந்நாட்டினை கட்டியெழுப்ப மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளின் போதும் நீங்கள் வழங்கிய பங்களிப்புகள் அதிசிறந்தவை.
தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் பல்லாயிரம் உற்பத்திகளை நீங்களே உற்பத்தி செய்கிறீர்கள்.
கணிசமான சேவைகள், பணிவிடை என்பனவற்றின் மூலகர்த்தாவும் நீங்களேயாகும்.
மகத்தான அறிவின் மூலம் இந்நாட்டிற்கு ஒளியூட்டுவதும் நீங்களே.
கலைகள் மூலம் உலகையே வசீகரித்து இந்நாட்டிற்கு உயிரூட்டுவதும் நீங்களே.
ஒரு வினாடிக்குள் பெரும் பெரும் வேலைகளை செய்து முடிப்பதும் நீங்களேயாகும்.
மொத்தத்தில் இந்த தேசத்தை அலங்கரிக்கும் கிரீடமும் நீங்களே.

இலங்கை எப்போதும் முன்னோக்கி சென்றதும் தலைநிமிர்ந்து எழுந்து நின்றதும் உங்கள் மூலமாகும். அதிலும் உங்கள் உழைப்பு மூலமாகும். உங்கள் உழைப்பு மூலமாக பலம் வாய்ந்த இலங்கையை கட்டியெழுப்புவதே எனது இலக்காகும். இந்த இலக்கினை நோக்கி உங்களையும் அன்பாய் அழைக்கிறேன். உழைப்பின் மூலமாக தலைநிமிர்ந்து வாழ முயற்சிக்கும் உங்களுக்கு எதிராக இழைக்கப்படும் சகலவிதமான அநீதிகள் மற்றும் இடைஞ்சல்களை ஒழித்து அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க, ஜனாதிபதி வேட்பாளர் என்ற வகையில் விஷேட உறுதிமொழியை உங்களுக்கு வழங்குகிறேன்.

இது இன்னொரு வெற்று வாக்குறுதியல்ல. ஒரு போதும் பொய் சொல்லாத எனது உண்மையான உறுதிமொழியாகும். பெண்களாகிய உங்களின் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் தனிப்பட்ட தேவைகளை மேம்படுத்தி, இந்த நாட்டை பலம் பொருந்திய பாதை மூலமாக முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இந்த எனது நம்பிக்கைக்கு பலம் கொடுக்கும் இலங்கை மகளிர் சாசனத்திற்கு புத்துயிர் வழங்கும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வில் உங்களையும் பதிவு செய்து கொள்ளுங்கள்.
உங்கள் உழைப்பின் மூலம் இந்த நாட்டினை பலப்படுத்துவோம்.
நாம் ஒன்றாய் முன்னோக்கி செல்வோம்.

இப்படிக்கு
உங்கள் விசுவாசமுள்ள

சஜித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகததாச விளையாட்டரங்கில் | 18 | 2019 ஒக்டோபர் 21 | மு.ப. 9:30




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறை வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் படிக்கும் இரு பெண்களுக்கு வசதியான அறையுண்டு.

831/ 34, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 1781**

## வீடு விற்பனைக்கு

அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள பரப்பு 2.குழி.4.50 காணியுடனான வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

**077 157 4707, 021 221 2277**
**077 190 9253**

## தேவை

கொக்குவில் இணுவிலுக்கு இடைப்பட்ட இடத்தில் காணி அல்லது வீடு தேவை. விலைக்கு வாங்கப்படும். தரகர் தேவையில்லை. (CS/28712) (11,17)

**077 068 6138, 075 654 2403**

## கார் விற்பனைக்கு

TATA Indica V2

**077 925 1435**

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1982 இல் பிறந்த 7 இல் செவ்வாய், 63 இல் கிரகபாவம், கேட்டை நட்சத்திரம், விருச்சிகராசி, B.Sc, M.Sc பட்டதாரியுமாகிய மணமகளுக்கு நல்ல கல்வியறிவும் அரச உத்தியோகமும் உடைய மணமகன் தேவை.

**077 803 4424, 021 320 2237**

## Prominent Home Nursing and Health Care

"நாம் உங்களது அன்புக்குரியவர்கள் மற்றும் நோயாளிகளுக்கு மதிப்புக்குரிய சேவைகளை வழங்குகின்றோம்."

வீட்டு தாதி சேவை மற்றும் சுகாதார பராமரிப்பு பற்றி பெரும்பாலான மக்கள் அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு நோய் ஏற்பட்டு அக்கறையுடன் செயற்படக்கூடிய வைத்தியப் பராமரிப்பு தேவைப்படும் போது கைகொடுப்பதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

**எம்மால் வழங்கப்படும் சேவைகள்:**

01. வீட்டு தாதியர் சேவை.
02. சிரேஸ்ட தாதியர் வசதி.
03. அழைப்பிலுள்ள வைத்தியர்.
04. உடற்பயிற்சிக்கான ஆலோசனைகள் மற்றும் சேவைகள்.
05. அரவணைப்புடன் கூடிய பராமரிப்பு.
06. தொழில்சார் சுகாதார சேவைகள்.
07. நோயாளிகளுக்கு ஏற்படுகின்ற அறிகுறிகளை வைத்து நோயின் தன்மையை மதிப்பீடு செய்வதோடு, நோயை அடையாளம் காணுதல்.
    - ✓ ஆறாத புண்கள்
    - ✓ அறுவைச்சிகிச்சையால் ஏற்பட்ட காயங்கள்
    - ✓ இரத்த ஓட்டத்தில் உள்ள தடைகள்.
    - ✓ தீக்காயங்கள்.
    - ✓ அதிர்ச்சியால் ஏற்பட்ட தாக்கங்கள்.

பதிவுக்கட்டணம் இலவசம்

**உரிய கட்டணத்திற்கு தரமான சேவையை நாம் வழங்கிவருகின்றோம்.**

தொடர்புகளுக்கு: தொ.பே.இல: **077 3700 152**
முகவரி:25/1, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம்.

## Senior Accountant/Accountant/ Assistant Accountants needed

A UK based accountancy firm is looking to recruit staffs for their back office in Jaffna.

1 x Senior accountant/ Country Manager – Must be a ACCA/CIMA qualified, experience in an audit firm is necessary, able to supervise staff, Salary – LKR120,000+ per month

1 x Accountant – Must be a finalist of ACCA/CIMA, experience in an audit firm is necessary. Salary – LKR60,000+ per month

3 x Assistant accountants – Must be a part-qualified ACCA/CIMA or a relevant degree holder, experience in an audit firm is beneficial but not necessary. Salary – LKR40,000+ per month

All applicants must;

Have excellent verbal and written communication skills in English.

Be computer literate and a competent user of MS Word, Excel, and Outlook.
Be able to work for UK timing and working days

All necessary training will be provided.

**Please send your CVs to recruitment@ace-bc.co.uk**

(CS 28732)

## வேலைவாய்ப்பு

**யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும்**

# IT நிறுவனம்

**ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.**

**தகைமை:** கணினி அறிவு மற்றும் ஆங்கிலத்தில் தேர்ச்சி

☞ உங்கள் சுயவிவரக்கோவையை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி:
mahakajangeo@gmail.com

**முடிவுதிகதி: 03.11.2019** (cs.28805) (13,17)

## கார் விற்பனைக்கு

NISSAN BLUEBIRD G11 கார் உடன் விற்பனைக்கு டுவரிஸ்ட் கார் 165,000km 2007 ஓட்டோ மெட்டிக் விலை - 32 லட்சம் பேசலாம்.

**077 350 7005**

## உங்களுடைய எதிர்காலம் இங்கே ஆரம்பமாகட்டும்

NAITA

SLGTI SRI LANKA GERMAN TRAINING INSTITUTE KILINOCHCHI



### நாங்கள் நடத்தும் பாடநெறிகள்

**01. இயந்திரத் தொழில்நுட்பம்**
- எந்திரவினைஞர் (தேசிய தொழில் தகைமை மட்டம் -4)
- தேசிய தொழில் தகைமை மட்டம் - 5ற்கான அடிப்படை கற்கைநெறி
- உற்பத்தி தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5 )

**02. மோட்டார்வாகனத் தொழில்நுட்பம்**
- மோட்டார்வாகன திருத்துனர் (தேசிய தொழில் தகைமை மட்டம் -4)
- தேசிய தொழில் தகைமை மட்டம் - 5ற்கான அடிப்படை கற்கைநெறி
- மோட்டார்வாகனத் தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5)

**03. மின்னியல் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம்**
- தையல் இயந்திர திருத்துனர் (தேசிய தொழில் தகைமை மட்டம் - 4)
- தேசிய தொழில் தகைமை மட்டம் - 5ற்கான அடிப்படை கற்கைநெறி
- இயந்திர மின்னணுவியல் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5)
- இயந்திர மின்னணுவியல் (தேசிய தொழில் தகைமை மட்டம் -6)

**04. கட்டுமானத் தொழில்நுட்பம்**
- கட்டுமான மேற்பார்வையாளர் (தேசிய தொழில் தகைமை மட்டம் -4)
- தேசிய தொழில் தகைமை மட்டம் -5ற்கான அடிப்படை கற்கைநெறி
- கட்டுமான தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5)

**05. உணவு பதனிடல் தொழில்நுட்பம்**
- தேசிய தொழில் தகைமை மட்டம் - 5ற்கான அடிப்படை கற்கைநெறி
- உணவு தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -5)
- உணவு தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை மட்டம் -6)

**06. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்**
- தேசிய தொழில் தகைமை மட்டம் - 5ற்கான அடிப்படை கற்கைநெறி
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (தேசிய தொழில் தகைமை-மட்டம் -5)
- வன்பொருள் மற்றும் வலையமைப்பு தொழில்நுட்பம் (தேசிய தொழில்-தகைமை மட்டம் -6)

விண்ணப்பங்களை நொவம்பர் 30, 2019 க்கு முன் இலங்கை-ஜெர்மன் பயிற்சி நிறுவனம், அறிவியல்நகர், கிளிநொச்சி. இயக்குநர் / முதல்வர் பெற வேண்டும்.

## இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனமானது

**அனைத்து படிப்புகளும் 2019 டிசெம்பரில் தொடங்கும்**

**விண்ணப்பங்களுக்கான இறுதி தேதி - நொவம்பர் 30, 2019**

MORE DETAILS: 021 4927799 | 070 2277980 | www.slgti.com

HOT LINE 1951 | www.naita.gov.lk | naita sri lanka | NAITA

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

## உடல் எடை குறைய வேண்டுமா?

- ◎ எடை கூடுகிறதா?
- ◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- ◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை**
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை

இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## பணியாளர்கள் உடன் தேவை

**கிளிநொச்சி, பரந்தனில் சுற்றுலாத்துறை அனுமதிபெற்ற Hotel, திருமண மண்டபம் ஒன்றுக்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன்தேவை.**

1) **சமையலாளர்** ( Chef)
   இந்தியன் உணவு வகைகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2) **பிரதான கணக்காளர்**
   ( கிளிநொச்சியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
3) **வெயிற்றர்** ( Waiter )
4) **துப்புரவுப் பணியாளர்** (CS/14278)(11,17)

**076 696 2713, 077 766 0396**


## ஐரோப்பிய நாட்டில் தொழில் புரிவதற்கான ஓர் அரிய வாய்ப்பு

- **Europe work Visa (Factory/Hotel/Electrician/Plumber/ Welder/Baker/Cooker/Driver)**
- Europe Student Visa (Belaurs) இல் உயர்கல்வி அனைத்து கட்டணங்களும் விசாவிற்கு பின்னரே 03 மாதத்தின் பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு
- **Europe visit visa - Tourist visa/UK Student Visa/ Canada Super Visa/Refused Visa**
- அனைத்து நாடுகளுக்குமான Online Visa Application/ Appoinment.
- சகல நாடுகளுக்குமான வங்கி பணவைப்பு (Bank Balance) மிகவும் கவனமான முறையில் செய்து தரப்படும்.
- Russia, Dubai, China நாட்டிற்கான Tourist Visa 03 நாட்களில் பெற்றுத் தரப்படும்.

**EDUPATH CONSULTANTS TRINCOMALEE**
0776583955 / 0772220659 / 0779075593

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## அரச தலைவர் தேர்தல் - 2019

# பொது ஆவணம் எதை சாதிக்கப்போகிறது?





ஸ்டோ ஸ்வாமி

கொழும்பிலிருந்து வெளியாகும் 'சிலோன் ருடே' என்னும் ஆங்கில நாளிதழ் கடந்த புதன்கிழமை தனது முதன்மைத் தலைப்புச் செய்தியை இவ்வாறு தீட்டியிருந்தது 'tamil Parties impose separatist conditions on Presidential candidates'. அதாவது, அரச தலைவர் வேட்பாளர்கள் மீது தமிழ்க் கட்சிகள் பிரிவினைவாத நிபந்தனைகளைச் சுமத்துகின்றன என்று மொழிப்பரிவர்த்தனை செய்யப்படக்கூடியதான அந்தச் செய்தி, எதிர்வரும் நவம்பர் தேர்தலுக்காக அண்மையில் தயாரிக்கப்பட்ட பொது ஆவணம் பற்றியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பும் தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகளை ஒன்று சேர்த்துத் தயாரித்த பொது ஆவணம் தனது இறுதி வடிவத்தை எட்டியிருக்கிறது. எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதிய தேர்தலை முன்னிட்டுப் பதின்மூன்று கோரிக்கைகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த ஆவணம் இந்த முறை தேர்தலில் போட்டியிடும் அரச தலைவர் வேட்பாளர்களிடம் முன்வைக்கப்பட்டு அவர்களின் நிலைப்பாடு பற்றிக் கோரப்படவிருக்கிறது. கடந்த செவ்வாய்க்கிழமை முழுமைப்படுத்தப்பட்ட இந்தக் கோரிக்கை ஆவணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு அப்பால் தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து கொண்டுள்ளது. வடக்கு-கிழக்கு அரசியல் பரப்பின் மற்றொரு கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்த முயற்சியின் படிமுறைகளில் பங்கேற்றிருந்த போதிலும் இறுதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருக்கவில்லை.



**பொது ஆவணத்தின் தோற்றம்**

எதிர்வரும் 16ஆம் திகதி இடம்பெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவதற்காக 41பேர் கட்டுப்பணம் செலுத்தி அதில் 35பேரின் பெயர்கள் வாக்குச்சீட்டில் இடம்பிடித்திருக்கும் நிலையில் போட்டிக்களம் பரபரப்புக்குரியதாக மாறி வருகிறது. இந்த நிலையில், எதிர்வரும் தேர்தலை எப்படிப் பயன்படுத்திக் கொண்டால் அது தமிழ் மக்களுக்கு ஆக்கபூர்வமானதாக அமையும் என்று சிந்தித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இளம் சமுதாயம் மற்றும் அதனோடு இணைந்து கொண்ட கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத் தரப்புகளும் தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைப்பதன் மூலம் எதனையாவது அடைந்துவிடுவதற்குத் தீர்மானித்திருந்தன. அந்த இணைவின் பயனாகத் தோன்றியதே இந்தப் பொது ஆவணம். தேர்தலுக்குப் பின்னால் அரச தலைவரைத் தமிழ் மக்களின் விருப்பு வெறுப்புக்களை முதன்மையாகக் கருத்திலெடுக்கும்படி கோரும் இந்தப் பொது ஆவணம் கடந்த அரச தலைவர் தேர்தலில் மேடையேற்றப்பட்ட மற்றொரு விவகாரத்தினை மனத்திரைக்குக் கொண்டுவருகின்றது.

**கடந்த தேர்தலில் திஸ்ஸ அத்தநாயக்கவின் ஆவண நாடகம்!**

அண்மையில் நடைமுறை அரசியல் பரப்பினுள் மீள நுழைந்திருக்கும் ஐ.தே.க.வின் முன்னாள் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க, 2015 ஆம் ஆண்டுத் தேர்தலுக்குச் சில நாள்களுக்கு முன்னதாக ஐ.தே.க.விலிருந்து தாவிக்குதித்து வெளியேறியவர் ஆவார். ஐக்கிய தேசியக் கட்சியால் களத்தில் இறக்கப்பட்ட தேசிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் மைத்திரிபாலவுக்கு ஆதரவு வழங்க மறுத்து மகிந்தவுடன் போய் ஒட்டிக்கொண்டவர் அவர். திஸ்ஸ அத்தநாயக்க, அப்போது ஐ.தே.க.வின் ரணில் விக்கிரமசிங்கவும் அப்போதைய வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும் நாட்டுக்குத் தீமை பயக்கும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருப்பதாகத் தெரிவித்து அது தொடர்பான ஆவணங்களை அவசரம் அவசரமாக ஊடகங்களுக்கு வழங்கியிருந்தார். ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் போலிக் கையெழுத்துக்களை இட்டுச் சோடிக்கப்பட்ட அந்தப் போலி ஆவணம், அந்தத் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான மனநிலையைத் தெற்கில் தோற்றுவிப்பதற்காகப் புனையப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாகும். அப்படி அவர் தயாரித்த போலி உடன்படிக்கை ஆவணத்தின் உள்ளடக்கத்தில், வடக்கில் தனியார் காணிகளை உள்ளடக்கிக் காணப்படும் உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்கி அந்தக் காணிகளை அதன் உரிமையாளர்களுக்கு வழங்குதல், போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் விதப்புரைகளையும் நடைமுறைப்படுத்தல், பாதீட்டில் பாதுகாப்புக்காக ஒதுக்கப்படும் பங்கீட்டில் 40 வீதத்தைக் குறைத்தல் மற்றும் வடக்கில் நிலைகொண்டுள்ள ஆயுதப்படையினரை 50 வீதத்தினால் குறைத்தல் போன்றவை திஸ்ஸ அத்தநாயக்காவினால் அல்லது அவரை இயக்கிய தரப்பினால் இயற்றி உள்ளடக்கப்பட்டிருந்தன.

**அத்தநாயக்கா கைதானார்**

2015 தேர்தலுக்கு சில வாரங்களே இருக்கும் தறுவாயில் திஸ்ஸ அத்தநாயக்க நிகழ்த்திய இந்த நாடகத்தால் தெற்கில் ஏற்படக்கூடிய பாதிப்பை உணர்ந்துகொண்ட ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன தரப்பினர், உடனடியாவே இந்த விடயத்தைச் சட்டரீதியாக அணுகியதுடன் பொலிஸிலும் முறைப்பாட்டினை மேற்கொண்டனர். அதன் தொடர்ச்சியாகக் குறித்த முறைகேட்டுக்காக திஸ்ஸ அத்தநாயக்க 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி கைது செய்யப்பட்டார். வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த திஸ்ஸ அத்தநாயக்காவை சில நாள்களில் மகிந்த ராஜபக்ச வந்து சுகம் விசாரித்துச் சென்றிருந்தார். சில வருடங்களாக இழுபட்ட இந்த வழக்கு கடந்த ஏப்ரல் மாதத்தில் தான் முடிவுக்கு வந்திருந்தது. அதுவும், குற்றஞ்சாட்டப்பட்ட திஸ்ஸ அத்தநாயக்க தரப்பு மன்னிப்புக் கோருவதாகத் தெரிவித்தார். இது போன்ற போலி ஆவண நடவடிக்கைகளில் இனி இறங்க மாட்டேன் என அவர் வாக்குறுதி தருவதாகத் தெரிவித்ததாலும், ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால தரப்பை பிரதிநிதித்துவப்படுத்திய சட்டத்தரணிகள் அதனை எதிர்க்காதபடியினாலும் இந்த விவகாரம் ஒரு முடிவுக்கு வந்திருந்தது.

தமிழ்த் தரப்புக்கள் எட்டியுள்ள பொது ஆவணம் தொடர்பான இந்ததப் பத்தியில், திஸ்ஸ அத்தநாயக்கவின் ஆவண விவகாரம் ஏன் நினைவூட்டப்படு கிறதென்றால், திஸ்ஸ அத்தநாயக்க உருவாக்கிய சட்டவிரோத ஆவணத்துக்கும் தற்போது எட்டப்பட்டிருக்கும் பொது ஆவணத்துக்கும் இடையே உள்ள ஒற்றுமையாகும்.

**பொது ஆவணத்தின் உள்ளடக்கம்**

ஐந்து தமிழ்க் கட்சிகள் சிலபல சுற்றுப் பேச்சுக்களின் பின் எட்டப்பட்டிருக்கும் இந்தப் பொது உடன்பாட்டு ஆவண உள்ளடக்கம், 2015ஆம் ஆண்டுத் தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான நிலையொன்று தெற்கில் ஏற்படுவதற்காகத் திஸ்ஸ அத்தநாயக்க ஊடாக ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட ஆவணத்தின் உள்ளடக்கத்தைப் பிரதிபலிக்கிறது. புதிய அரசமைப்பின் ஒற்றையாட்சி முறையை நிராகரித்து சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும், இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்குப் பன்னாட்டுத் தீர்ப்பாயம் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வரும் சிங்கள பௌத்தமயமாக்கல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும், அரச திணைக்களங்களுக்கூடாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும், அரச படைகள் தனியார் மற்றும் அரச காணிகளிலிருந்து வெளியேற வேண்டும், வடக்குக் கிழக்குக்கான வேலை வாய்ப்புக்களில் அவ்விரு மாகாணவாசிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் மற்றும் வடக்குக் - கிழக்குக்கான அபிவிருத்தி நிதியைக் கையாள அந்தப் பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய பொதுக்கட்டமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டும். இவை தாம் பொது ஆவணத்தின் உள்ளடக்கமும் கோரிக்கைகளும்.

**தேர்தலுக்குப் பின்னான நிலை?**

பொதுக்கோரிக்கை ஆவணம் தயார்படுத்தப்பட்டுள்ள போதிலும் கடந்த வெள்ளிக்கிழமை வரை அது எந்த வேட்பாளரிடத்திலும் கொண்டுசெல்லப்படவில்லை. ஆனால், எந்தவொரு தரப்பின் நிபந்தனைகளையும் தாம் ஏற்கப்போவதில்லை என்று இரண்டு பிரதான வேட்பாளர்கள் தரப்பும் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

தேசிய பாதுகாப்பு காரணங்களுக்காகத் தமது துணைவேந்தரை இழந்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலை மாணவர் ஒன்றியத் தரப்பினரும் அவர்களுடன் ஒன்றித்திருக்கும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தரப்பினரும் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகளைத் தமது ஆளுகைக்குள் கொண்டுவந்து கூடிக்கலந்துரையாடி முடிவு ஒன்றை எய்தியிருக்கிறார்கள். அதன் பிரதிபலனே இந்தப் பொது ஆவணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்கள் கூட்டணியும் எங்கோ ஒரு புள்ளியில் ஒன்றிணைந்ததற்கான ஒன்றித்ததற்கான சான்றாதாரமான இந்தப் பொது ஆவணம், அதனை ஏற்றுக்கொண்ட அரச தலைவர் வேட்பாளர் தரப்பு அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற்றாலே அதில் உள்ள கோரிக்கைகள் எதிர்பார்ப்புகளுக்கு பிரகாசமான எதிர்காலம் உள்ளதாக கொள்ளக்கூடியது. அதேவேளை, குறித்த ஆவணத்தில் உள்ள கோரிக்கைகளுக்கு (தேர்தலுக்கு முன்னதாக) வெளிப்படையாகத் தலைசாய்க்கும் அரச தலைவர் வேட்பாளருக்கு எதிராகத் தெற்கில் கடுமையான எதிர்ப்பு அலையைத் தோற்றுவித்து அவரை வீழ்த்தக்கூடிய புறச்சூழல் நிலவுகிறது என்பதும் நிராகரிக்கப்படக்கூடியது அல்ல. அவ்வாறான நிலை ஒன்று தோன்றினால், 'பட்டு வேட்டி பற்றிய கனாவில் இருந்த போது கட்டி இருந்த கோவணமும் களவாடப்படுகின்ற' ஒரு கையறு நிலை (தேர்தலுக்குப் பின்) தமிழர்களுக்கு ஏற்படக்கூடிய சாத்தியம் அதிகமாகும்.

பொது ஆவணம் ஒன்றை எட்டியிருப்பது தமிழர் அரசியல் நகர்வின் ஒரு முன்னேற்றகரமான அடைவு நிலை எனக் கொண்டாலும் அரசதலைவர் தேர்தலுக்கு முன் அதை முன்வைப்பதனால் தேர்தல் களத்தில் அது ஏற்படுத்தக்கூடிய அதிர்வுகளை முன்கூட்டியே அனுமானிக்க வேண்டும். 2005 அரச தலைவர் தேர்தலிலும் 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலிலும் உணரப்பட்ட வடக்குக் கிழக்கு வாக்காளர்களிடம் இருப்பதாக நம்பப்படும் மறைமுகமாகத் தீர்மானிக்கும் சக்தியைச் சிதைக்கும் ஒன்றாக இந்தப் பொது ஆவணம் அமைந்துவிடக்கூடாது.

உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய கோரிக்கைகளுக்குப் புதிய அரச தலைவர் பதவியேற்று முதல் மூன்று மாதங்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தும் பொது ஆவணத்தின் உள்ளடக்கம், சிவாஜிலிங்கம் தனது போட்டியிலிருந்து பின்வாங்கும் நிலையை ஏற்படுத்தாத ஒன்றாகவும் தென்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வாக்குறுதிகளும் வாக்களிப்பும்!

சந்திரசேகர ஆசாத்



மக்கள் நம்பி வரவேற்கக் கூடிய பெரிய பொய்யை யார் வழங்குகிறார்களோ அவர்களே தேர்தலில் வெற்றி பெறுவார்" கம்போடியாவின் முன்னாள் அரச தலைவரும் மன்னர் பரம்பரையின் வாரிசும் இளவரசருமான நரோடம் சிஹானூக் 'சி.ஐ.ஏ. உடனான எனது போர்' என்ற நூலில் வெளியிட்ட கருத்து இது. பொதுவுடமைவாதிகளின் அரசதிகாரத்தின் கீழ் கம்போடியா இருந்த போது இவர் அந்த நாட்டின் தலைவராக விளங்கினார். கம்போடியா மீது அமெரிக்கா மேற்கொண்ட படையெடுப்பின் இவர் தப்பியோடிச் சீனாவில் வசித்தார். தேர்தல் பற்றியும் தேர்தல் வேட்பாளர்கள் பற்றியும் அவர் வெளியிட்ட கருத்து இலங்கையைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு நூறுவீதமளவில் சரியானதெனவே தென்படுகிறது.

### பொய்களை வாக்குறுதியாக வழங்குகிறார்கள்

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்றுவரை வலம்வருகின்ற அரசியல்வாதிகள் தேர்தல்காலத்தில் மக்களின் மனங்களை நம்பிக்கையூட்டிக் குளிர வைக்கும் வாக்குறுதிகளை வழங்குவார்கள். தேர்தல் முடிந்த பின்பு அந்த வாக்குறுதிகள் மறக்கப்பட்டுவிடும் அல்லது உருமாறி வெவ்வேறு வடிவங்கள் எடுத்து மெல்ல மெல்ல மங்கி மறைந்துவிடும். எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் மூலம் மீண்டும் ஒருமுறை இலங்கை மக்கள் அதேபோன்ற ஒரு நிலைமைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்தத் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் மூன்று வேட்பாளர்களே முக்கிய மானவர்களாகவும் அரச தலைவர் பதவிக்கு ஒருவருடன் ஒருவர் போட்டி போடக் கூடிய மக்கள் ஆதரவு உள்ளவர்களாகவும் கருதப்படுகிறது.

எனினும் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவும் பொதுமக்கள் முன்னணி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோருக்கிடையேயான போட்டியே கூர்மையடைந்துள்ளது. இந்த மூன்று தரப்பினருமே மக்கள் விரும்பக் கூடிய பொய்களை வாக்குறுதிகளாக முன்வைத்து வருகின்றனர்.

### சிங்களவர்களை முதன்மைப்படுத்திப் பரப்புரைகள்

மக்கள் ஆதரவை வெளிக்காட்டும் முகமாக சஜித் பிரேமதாச காலி முகத் திடலிலும். கோத்தபாய ராஜபக்ச அனுராதபுரத்திலும் ஜே.வி.பியினர் பத்தரமுல்லையிலும் பிரமாண்டமான பேரணிகளை நடத்தி தங்கள் கொள்கை அறிக்கைகளை வெளியிட்டனர். இலங்கையின் வாக்காளர்களில் 74 சதவீதமானவர்கள் சிங்களவர் என்ற வகையில் நாட்டு நலன்களில் முதலில் சிங்கள மக்களின் நலன்களும் அதனுடன் இசைந்ததாக, அதற்கு அடுத்த தமிழ், மலையக, முஸ்லிம் மக்களின் நலன்கள் முன்னெடுக்கப்படும் வகையில் இந்த மூன்று வேட்பாளர்களின் பரப்புரைகளும் அமைந்தன.

எனினும் தமிழ், முஸ்லிம் மக்களை எந்தவொரு வேட்பாளரும் புறக்க ணிக்கத் தயாரில்லை. ஏனெனில் பிரதான வேட்பாளர்களுக்கிடையே சிங்கள மக்களின் வாக்குகள் பங்கிடப்படும்போது வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்குகளாக சிறுபான்மை மக்களின் வாக்குகள் அமைய வாய்ப்புண்டு.

ஆனால் ஏதாவது ஒரு தரப்பு சிறுபான்மையினருக்குச் சாதகமான வகையிலோ அல்லது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையிலோ தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் மறுதரப்பு உடனடியாகவே ஒரு வாதத்தை எழுப்பி அந்தத் தரப்புக்கெதிராகப் பரப்புரைகளை கட்டவிழ்த்து விடத் தயங்க மாட்டார்கள்.

எனவே இனப்பிரச்சினை தொடர்பாக



எந்தவொரு தரப்பும் நியாயமான தீர்வுத் திட்டத்தை முன் வைக்கப்போவதில்லை. இது ஒரு சிங்கள பௌத்த நாடு என்ற அடிப்படையில் சமஷ்டியையோ வடக்குக் கிழக்கு இணைப்பையோ ஏற்றுக் கொள்ளாத சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பகிர்வை ஏற்றுக் கொள்ளாத ஒரு தீர்வு என்ற வட்டத்துக்கு வெளியே வரப்போவதில்லை.

காணி அதிகாரம் இல்லாத மட்டுப்படுத்தப்பட்ட பொலிஸ் அதிகாரம் கொண்ட மாகாண சபை, பிரிக்கப்படாத முடியாத நாட்டுக்குள் அதிகாரங்களுடன் கூடிய அதிகாரப் பகிர்வு, எல்லா இனங்களும் எல்லா மதங்களும் சமனாகக் கையாள்தல், அனைத்து இனத்தினருக்கும் சம உரிமை எனத் தேர்தல் மேடைகளின் முன்வைக்கப்படும் எந்த வாக்குறுதிகளும் நாம் மேற்குறிப்பிட்ட வட்டத்துக்கு வெளியே வரப் போவதில்லை.

### தமிழ் அரசியல்வாதிகளின் நிலைப்பாடு

தமிழ் அரசியல் தலைமைகளும் இந்த விடயத்தில் ஒருமித்த கருத்துக் கொண்டவர்களாகவே உள்ளனர். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராகத் துரோக வேலைகளில் ஈடுபட்டுவிட்டு இன்று தமிழ் மக்களுக்காகக் கண்ணீர் வடிப்பவர்களைத் தமிழ்த் தலைமைகள் என்ற வகைப்பாட்டுக்குள் நாம் பார்க்கவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். இவர்களைவிட இன்று தாங்களும் தமிழ்த் தலைமைகள் எனச் சொல்லிக் கொண்டு பலர் களத்தில் இறங்கியுள்ளனர். வரதராஜப் பெருமாள், டக்ளஸ் தேவானந்தா உட்டபட்டவர்கள் இந்திய இராணுவத்துடனும், இலங்கை இராணுவத்தடனும் இணைந்தும், துணை இராணுவக் குழுக்களாகச் செயற்படும் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பது, காணாமற் போகச் செய்வது போன்ற கொடுமைகளில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டுத் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வருகின்றது. கருணா, பிள்ளையான் ஆகியோர் விடுதலைப் போராட்டத்தைச் சிதறடித்தவர்கள். இவர்களெல்லோரும் தாங்களும் தமிழ்த் தலைமைகள் எனக் கூறிக் கொண்டு அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவின் வெற்றிக்குப் பணியாற்றக் களமிறங்கியுள்ளனர். இப்படியான ஒரு நிலையில் எந்தவொரு அரச தலைவர் வேட்பாளரும் நியாய பூர்வமாக இனப்பிரச்சினைக்கான ஒரு நிரந்தரத் தீர்வை முன்வைக்கப் போவதில்லை. இந்தச் சூழலில் தமிழ்த் தலைமைகளின் பொறுப்பு காத்திரமானதாக இருக்க வேண்டும். தமிழ்த் தலைமைகள் ஒன்றிணைந்து எடுக்கக் கூடிய நகர்வு ஆணித்தரமானதாகவும் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு அத்திபாரமானதாகவும் அமைய வேண்டும்.

### இழுபறியில் தலைமைகள்

தமிழ்த் தலைமைகள் அரச தலைவர் தேர்தலில் என்ன நிலைப்பாட்டை எடுப்பது என்று இழுபறியில் காலம் கடந்து கொண்டிருந்தபோது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து தமிழ்த் தலைவர்களை ஒருமித்த கருத்து நிலைப்பாட்டுக்குக் கொண்டு வரும் முயற்சிகளை மேற்கொண்டனர். ஆறு தமிழ் அமைப்புக்களுடன் மீண்டும் மீண்டும் கலந்துரையாடல்களை நடத்தி 13 கோரிக்கைகள் கொண்ட ஆவணம் ஒன்றைத் தயாரித்தனர். அதை அரச தலைவர் வேட்பாளர்களிடம் முன்வைப்பது எனவும் அது தொடர்பாக அவர்கள் வழங்கும் பதிலின் அடிப்படையில் அரச தலைவர் தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாக இணக்கம் காணப்படுவது எனவும் முடிவெடுக்கப்பட்டது. எனினும் இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கையொப்பமிட மறுத்துவிட்டது. ஆனாலும் ஐந்து கட்சிகளும் ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்து பொதுக் கோரிக்கையை முன்வைத்தமை என்பது ஆரோக்கியமான முன்னெடுப்பாகும்.

### பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கும் கோத்தா

அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தனது பரப்புரைகளின் போது தான் பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகிய துறைகளிலேயே முக்கிய கவனம் செலுத்தப் போவதாக மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றார். அவரது பாதுகாப்புக்கு முன்னுரிமை என்பது எப்படிப்பட்டது என்பதைச் சகலரும் அறிவர். இவர் பாதுகாப்புச் செயலராக இருந்தபோது தமிழ் மக்கள் மீது பல்வேறு முனைகளிலும் நடத்திய இனஅழிப்பு நடவடிக்கைகளை மறந்துவிட முடியாது. அதேவேளையில் பன்னாட்டு பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை நடத்திய சஹ்ரான் குழுவினருக்கு இவர் காலத்தில் பாதுகாப்புப் பிரிவினரால் மாதாந்த ஊதியம் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்படியான நிலையில் கோத்தபாய ராஜபக்ச தேர்தலில் வெற்றிபெறக் கூடாது என்பது தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படைத் தேவையாகிறது. அவர் கையில் அதிகாரம் கிடைக்குமானால் மீண்டும் தமிழ் மக்கள் பெரும் ஒடுக்குமுறைகளுக்குள் தள்ளப்படுவது தவிர்க்கப்பட முடியாத தாகும். நாம் முன்வைக்கும் கோரிக்கைகளை இந்த அரச தலைவர் வேட்பாளர்கள் சில வார்த்தை மாற்றங்களுடன் ஏற்றுக் கொண்டால் அச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனெனில் தேர்தலில் வெல்வதற்காகப் பொய்களைச் சொல்வது இங்கு ஒன்றும் புதினமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019 அரச தலைவர் தேர்தலும் வடக்கு- கிழக்குக்கான ஒப்பங்கோடலும்



நியூட்டன்



எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி அரச தலைவர் தேர்தல் நடக்கும் என்று அறிவிக்கப்பட்ட பின்னர் சிங்களத் தரப்பினரும் முஸ்லிம்களும் உடனடியாகவே தங்களது நிலைப்பாடு என்ன என்பதை அறிவித்து தாம் சார்ந்த கட்சிகளுக்காகப் பரப்புரைகளில் ஈடுபட்டனர். மலையகக் கட்சிகளும் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்துவிட்டன. ஆனால் வடக்குக் கிழக்குத் தமிழ்க் கட்சிகள் சிறு பிள்ளைகள் போல 'நுள்ளுப் பிராண்டி கிள்ளுப் பிராண்டி' விளையாடிக்கொண்டிருக்கின்றன. தமிழ்க் கட்சிகள் பொது நிலைப்பாடு ஒன்றை எடுக்க வேண்டும் என்று வடக்கு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் எடுத்த முயற்சியால் 5 தடவைகள் கூட்டம் கூட்டி, 6 கட்சிகளை அழைத்துப் பேசியபோதிலும் அதில் 5 கட்சிகளே முடிவுக்கு வந்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. தமழ்த் தேசிய மக்கள் முன்னணி அதிலிருந்து வெளியேறியது. தமிழர்களின் இந்த ஒற்றுமையின்மை என்பது மிக நீண்ட காலமாக இருந்து வருவதே.

**தமிழர்களின் திறமை இன்மை**

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழ் மக்களின் தீர்வுக்காக வடக்குக் கிழக்கில் வாழும் மக்களிடம் பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும் என்று சிங்கள ஆட்சியாளர்களுக்கு வலியுறுத்தி வந்தது தமிழ்த் தரப்பு. சுதந்திரத்துக்குப் பின்னர் இரண்டு கட்சிகள் ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கம் 70 ஆண்டுகளின் பின்னர் இன்றைக்கு 20 கட்சிகளாகப் பல்கிப் பெருகியிருக்கிறது. ஜனநாயக அரசியல், ஆயுதப் போராட்டத்தின் போது தமிழ்த் தரப்பினிடையே முரண்பாடுகள் பல்கிப் பெருகி வந்தனவே தவிர, இணைந்த செயற்பாடுகள் இல்லை. இது தமிழரின் திறமை இன்மைக்குச் சான்றாகும். சுய அரசியலுக்காக மற்றவர்களை எதிரிகள், துரோகிகள் என்று சிறப்புப் பட்டங்களை வழங்கிச் சிங்களத் தலைவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்ததில் முடிந்திருக்கின்றன இந்தப் பிரிவினைகள்.

**தனித் தனிப் பிரிவு**

கூட்டமைப்பிலிருந்து சிவாஜி லிங்கம் அரச தலைவர் வேட்பாளராகக் கிளம்பியிருக்கிறார். அதற்கான கட்டுப்பணம் செலுத்தியபோது, தான் சார்ந்த ரெலோ அமைப்பிலிருந்து விலகுவதாக எழுத்துமூலம் அறிவித்தார். கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் கோத்தபாயவுக்கு ஆதரவளிப்பதாகக் களத்தில் இறங்கியிருக்கிறார். பிள்ளையான், கருணா போன்றவர்கள் இவருடன் இணைந்திருக்கின்றனர். தமிழ்க் கட்சிகளின் தாமதங்களும் பிடுங்குப் பாடுகளும் அதிகரித்திருக்கின்றன.

சிவாஜிங்கம் தேர்தல் வேட்பாளருக்கான கட்டுப்பணம் செலுத்தியமை என்பது தமிழர் தரப்பை ஆட்டம்காண வைத்திருக்கிறது. சிங்களத் தலைவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்க நினைத்த கட்சிகள் தாம் நெருக்கடிக்குள் உள்ளாகியிருக்கின்றன. அரச தலைவர் தேர்தலில் தம் சார்பில் ஒரு தமிழ் வேட்பாளர் தேவை என்று பாசாங்கு செய்தவர்கள் சிவாஜிலிங்கம் களமிறங்கிய பின்னர் மௌனம் சாதிக்கின்றனர்.

**தேர்தல் புறக்கணிப்பு!**

தமிழ்த்தரப்பினருக்குள் தேர்தலைப் பறக்கணிப்பது என்ற கதைகளும் அடிபடுகின்றன. ஒரு நாட்டின் குடிமகனுக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான ஜனநாயகப் பங்கு பற்றுதல் என்பது வாக்குரிமையில்தான் உள்ளது. வாக்களிக்க வேண்டாம் என்று தனது மனைவிக்கோ பிள்ளைகளுக்கோ கூடக் கூறுவது குற்றமாகும். அரசியல் நீரோட்டத்தில் செல்வதற்கு இணங்கிவிட்டு அதன் ஒரு படிநிலை வேண்டாம் என்று தவிர்ப்பது கேலிக்குரியதன்றி வேறல்ல.

2005ஆம் ஆண்டு புலிகள் தேர்தலைப் புறக்கணித்த சூழல் தற்போது இல்லை. புலிகள் தமக்கென்று கட்டுப்பாட்டு நிலத்தையும் நிழல் அரசையும் அப்போது வைத்திருந்தார்கள். ஆயுதம் தாங்கிய போராட்ட அமைப்பான அவர்களுக்கு யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியமமிருக்கவில்லை. தற்போதுள்ள ஜனநாயக வழியில் தமிழர்கள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு யாரும் உத்தியோக பூர்வமாக அறிவிக்க முடியது.



**கோத்தாவின் பக்கம் நிற்கும் தமிழ்த் தரப்புகள்**

சிறுபான்மைத் தரப்பைப் பொறுத்தவரை டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான் ஆகிய மூவரும் கோத்தபாயவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர் அதேவேளை தேர்தலைப் புறக்கணிப்பது என்ற முடிவுக்கும் சிலர் வர விருப்பது தெரிகிறது.

தேர்தல் களத்தில் இறங்கியிருக்கும் சிவாஜிலிங்கத்தால் சிங்களத் தலைர்களுக்குத் தமது ஆதரவை வெளிப்படையாகக் கொடுக்க முடியாத நிலை பல தமிழ்த்தரப்பினருக்கு ஏற்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை அப்போது சிறுவர்களாக இருந்தவர்கள் தற்பேது வாக்காளர்களாக உள்ளனர்.

இவர்களுக்குப் போராட்டம் பற்றியோ, இதுவரைகாலமும் இலங்கையில் இருந்துவருகின்ற சிங்களவர் தமிழர் உறவு நிலை பற்றிய மனப்பதிவோ இல்லை.

இவர்களை மீண்டும் ஒரு போர் மனநிலைக்கு யாராலும் மாற்றவிட முடியாது. இது சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளுக்குக் கிடைத்த வாய்ப்பகும்.

**தமிழர்களின் பிரிவு**

தமிழரின் அரசியலைப் பார்க்குமிடத்து தேசியம் பேசுகின்ற கட்சிகள் இலங்கை அரசு, இந்திய அரசு என்று இரண்டாகப் பிரிந்து சார்ந்துள்ளன. கிழக்குத் தலைவர்களும் வடக்குத் தலைவர்களும் வேறாக நிற்கிறார்கள். முஸ்லிம்கள் தமக்கெனத் தனியன நிலைப்பாட்டில் உள்ளனர். சம்பந்தன், விக்னேஸ்வரன், சுமந்திரன், சுரேஸ்பிறேமச்சந்திரன் என்று பல தரப்புகளாகப் பிரிந்து நின்கின்றனர்.

ஒருமித்த கருத்து இல்லாத தமிழ் முஸ்லிம் கட்சிகளின் முரண்பாடுகளைப் பயன்படுத்தி வடக்குக் கிழக்கை இணைப்பதா? பிரிப்பதா? என்பாதற்கான பொது வாக்கெடுப்பை நடத்தினால் நிலமை என்னவாகும் என்பது வெளிச்சம்.

இது குறித்த பொது வாக்கெடுப்பு வேண்டாம் என்று தமிழர்கள் கேட்டுக்கொண்டால், மகிந்த தரப்பு' அரசமைக்கும் பட்சத்தில் அதை நடத்தியே தீருவார்கள். எனவே தழிழருக்கிடையில் இருக்கும் முரண்கள் பிள்ளையார் பிடிக்க வெளிக்கிட்டுக் குரங்காக மாறிய கதையாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி- குர்திஷ் இடையே 5 நாள்கள் போர் நிறுத்தம்

சிரியாவில் குர்து போராளிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளை 5 நாள்கள் தற்காலிகமாக நிறுத்துவதற்கு துருக்கி அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கடந்த வியாழக்கிழமை முதல் நாளை வரை இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சிரியாவில் உள்ள குர்து போராளிகள் மீது கடந்த 10 நாள்களாக துருக்கி ராணுவம் கடுமையான தாக்குதல்களை நடத்தி வந்தது. அமெரிக்க படைகள் சிரியாவை விட்டு வெளியேறுவதாக ட்ரம்ப் அறிவித்ததையடுத்து துருக்கி தனது போர் நடவடிக்கைகளை தொடர்ந்தது. இந்தக் கொடூரத் தாக்குதல்களில், குர்துப் போராளிகள் மற்றும் அப்பாவி மக்கள் என மொத்தம் 600க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.


உலக நாடுகள் துருக்கியின் செயலுக்கு கண்டனம் தெரிவித்தன. அமெரிக்கா, துருக்கி நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்து அச்சுறுத்தியது.


இது தொடர்பாக பேச்சு நடத்துவதற்காக அமெரிக்க துணை அதிபர் மைக் பென்சும், வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோவும் துருக்கிக்கு விரைந்தனர்.

இந்த நிலையில், தற்காலிக போர் நிறுத்தத்திற்கு துருக்கி ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க துணை அதிபர் மைக் பென்ஸ் அறிவித்துள்ளார்.

துருக்கி அதிபர் எர்டோகன் மற்றும் மைக் பென்ஸ் இடையே நான்கு மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற பேச்சில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ராணுவ நடவடிக்கையால் ஏற்படும் பேரிழப்புகளை தவிர்ப்பதே தனது முதல் பணி என பென்ஸ் தெரிவித்தார்.

**'குர்துக்களின் போராட்டம் மெய்ப்படாது...'**





வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் வடகொரியா – சீன எல்லைப் பகுதியில் வெள்ளைக் குதிரையில் சவாரிசெய்யும் ஒளிப்படங்கள் சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவி வருகின்றன. கிம் ஜோங் உன்னின் தந்தையாரும் பாட்டனாரும் முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் வெள்ளைக் குதிரையில் சவாரிசெய்யும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்களாம். இதனால் கிம்மும் முக்கிய முடிவெதுவும் எடுக்கப்போகின்றாரா என்று கேட்கின்றனர் ஆவலர்கள்.

ரவுண்ட் த வேர்ல்ட்

பிரகாஸ்

# அமெரிக்காவின் தடைகளால் துருக்கிக்கு பெரும் அவலம்



அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் ஈரான் கடினமான துயரத்தை அனுபவிக்கிறது என்று பன்னாட்டு நிதிய மைப்பான ஐ.எம்.எப். தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பன்னாட்டு நிதியம் தெரிவித்ததாவது:

ஈரானின் பொருளாதார நிலைமை மோசமான நிலையை அடைந்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் ஈரான் கடினமான துன்பத்தை அனுபவித்து வருகிறது என்று தெரிவித்துள்ளது.

ஈரானில் நிலவும் மோசமான பொருளாதார நிலை குறித்து ஈரான் பொருளாதார நிபுணர் ஒருவர் கூறும்போது, "இம்மாதிரியான மோசமான பொருளாதார நிலை ஈரான் வரலாற்றில் அரிது. ஈராக் உடன் ஏற்பட்ட போரின்போது கூட எங்களுக்கு இத்தகைய பொருளாதார நிலை ஏற் படவில்லை" - என்றார்.

**'அமெரிக்காவின் தடைகள் கொடியவைதான்...'**

# கேட்டலோனியாவில் பெரும் வன்முறை!!!

தலைவர்களின் சிறைத்தண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில் பெரும் போராட்டம் வெடித்தது.

ஸ்பெயின் நாட்டில் உள்ள தன்னாட்சி பெற்ற மாகாணம் கட்டலோனியா. கடந்த 2010ஆம் ஆண்டு ஸ்பெயினின் அரசியல் சாசன நீதிமன்றம் கட்டலோனியாவின் தன்னாட்சி தொடர்பான சில சட்டப் பிரிவுகளை நீக்கியதால், விடுதலை போராட்டங்கள் தொடங்கின. கட்டலோனியாவின் வரலாற்றையும், தனித்தன்மையையும் போற்றும் வகையில் அதை தனி நாடாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது.

இதையடுத்து விடுதலை தொடர்பான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் கட்டலோனியா நாடாளுமன்றத்தில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. மேலும் இதை வலியுறுத்தி பிரிவினைவாத அமைப்புகளின் தலைவர்கள் பல்வேறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து அவர்கள் மீது தேசத்துரோக வழக்கு தொடரப்பட்டது.

அதில் கட்டலோனியா அமைச்சர்கள் உள்ளிட்ட 9 பேருக்கு, 9 முதல் 13 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதித்து ஸ்பெய்ன் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது. இதனை கண்டித்து கட்டலோனியா மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

**'ஐரோப்பாவிலும் இது நீள்கிறது...'**





# உலகின் அழகான பெண் பெல்லா

கிரேக்க கணித விகிதத்தின் அடிப்படையில் சூப்பர் மொடலான பெல்லா ஹடிட் உலகிலேயே அழகான பெண் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். கிரேக்க விதிமுறைகளின் அடிப்படையில் இந்த முடிவை எடுத்தேன் என்று அறிஞர்கள் தெரிவித்தனர். இதனை லண்டனின் மிகப் பிரபலமான முக ஒப்பனை அறுவை சிகிச்சை நிபுணர் ஜூலியன் டி சில்வா சோதித்துப் பார்த்து தெரிவித்துள்ளார். இதன் முடிவில், அழகு சார்ந்து கிரேக்க கணித அளவீடுகளில், 23 வயதான சூப்பர் மொடலான பெல்லா ஹடிட் 94.5 வீதம் ஒத்துப் போகிறார்.

**'கிரேக்க அழகு தனியானதுதான்...'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஜனனீ சிவஞானசுந்தரம்

# பேசுவது 'வெள்ளி' என்றால், கேட்பது 'தங்கம்'



**சிறந்த ஆசிரியர்கள் மாணவர்களிடையே ஆரோக்கியமான மற்றும் பரஸ்பர மரியாதைக்குரிய உறவுகளை வளர்க்கி றார்கள். ஒவ்வொரு மாணவரும் தாங்கள் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படு வதுபோல் உணரும் சூழல் உருவாக்கப்படுவது ஆசிரியரின் கையில் தான் இருக்கிறது.**

ஆசிரியர்கள் மிக உயர்ந்த விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டு அதன் மூலமாக ஒரு சிறந்த மாணவ சமூகத்தை உருவாக்குகிறார்கள். ஆசிரியர்களது பண்புகள், நடத்தைகள் மூலமாகக் கடத்தப்படுகின்றன. இதுவே ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதற்கான அடிப்படையாகிறது. நலிவுற்றோருக்கான ஆதரவு தெரிவித்தல் மற்றும் கூட்டுச் சூழல்களை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை நல்ல பண்புகள் ஊடாக மாணவர்களைப் புரிந்துகொள்ளச் செய்கிறார் ஆசிரியர். சமூகத்திலுள்ளவர்களுடன் சக மாணவர்கள் அக்கறையுள்ள உறவுகளை உருவாக்குவதற்கு உயர்ந்த விழுமியங்கள் துணைநிற்கின்றன.



சிறந்த ஆசிரியர்கள், மாணவர்களிடையே ஆரோக்கியமான மற்றும் பரஸ்பர மரியாதைக்குரிய உறவுகளை வளர்க்கிறார்கள். ஒவ்வொரு மாணவரும் தாங்கள் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவதுபோல் உணரும் சூழல் உருவாக்கப்படுவது ஆசிரியரின் கையில் தான் இருக்கிறது. ஒரு மாணவன் சமூகத்திலிருந்து, சமூக உறவிலிருந்து அன்னியப்பட்டதாக உணர்கின்ற போதே அவன் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகிறான். இதனால் ஆசிரியர் உயர்ந்த விழுமியங்களைக் கொண்டவராக இருந்து நல்ல சமூக மனிதனை உருவாக்க வேண்டியவராகிறார்.

## எமக்கான கல்வி - 6

**மாணவர்கள் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதை முழுமையாகப் புரிந்து கொள்ளும்போது அவர் களுக்கு வழங்குவது மிகவும் எளிதானது.**

**வாத்தியாருக்கு மரியாதை கலந்த உறவு**

ஆசிரியரின் உயர்ந்த விழுமியங்கள் காரணமாகவே ஆசிரியர்களைப் பொதுவாக 'வாத்தியார்' என அழைப்பர். அவரிடம் கல்வி கற்றவரும் பிறரும் எங்கு கண்டாலும் எழுந்து மரியாதை செலுத்துவர். அவர்களுக்கென்ற ஒரு தனியான மரியாதை அந்தச் சமூகத்தில் காணப்பட்டது என்றால் அது அவரிடமிருந்த உயர்ந்த விழுமியங்க ளுக்கானதாகவே இருக்கும். ஆனால் அத்தகைய ஒரு மரியாதை கலந்த உறவு இன்று காணாமல் போய்க் கொண்டிருக்கிறது. இதற்கு யார் காரணம்? இதற்குத் தனிப்பட்ட ஒருவர் காரணமல்ல. மாறிவரும் நுகர்வுக்கலாசாரச் சமூகம் மற்றும் நாட்டின் கல்விக் கொள்கையுமே காரணமாகின்றன. உதாரணமாக ஆசிரியர் ஒருவர் தனது கைபேசியில் குறுஞ்செய்தி அனுப்புவதில் ஈடுபட்டுக் கொண்டு கற்பித்தலிலும் ஈடுபட்டால் மாணவனும் தனது கற்கையோடு மறைவாக இன்னுமொரு செயற்பாட்டில் ஈடுபடுவர். இதைக் கண்டிக்கும் வலிமையை ஆசிரியர் இழந்துவிடுவர். இதே போன்று அதிபர், ஆசிரியரிடையே ஒரு நல்லெண்ணமும் மரியாதையும் ஏற்பட வேண்டுமெனில் அவர்களின் செயற்பாட்டில் ஒரு மேன்மை காணப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அவர்களுக்கிடையிலான நல்லெண்ணம் பாதிக்கப்பட்டு முரண்பாடுகளின் தோற்றுவாயினராகக் காணப்படுவர்.

**ஆசிரியர் தோல்வியடைகிறார்!**


இன்றைய தகவல் தொடர்பு உலகில் ஆசிரியர்கள் மாணவர்களிடம் மதிப்பைப் பெறுவதற்கு உயர்ந்த விழுமியங்கள் மட்டுமே போதுமானவை என்றும் சொல்லிவிடமுடியாது. ஆசிரியர்களின் தொடர்பு தட்டையானது அல்லது முழு வகுப்பினருக்கும் எட்டப்படவில்லை அல்லது எல்லா மாணவரையும் இணைக்கவில்லையென்றால் ஆசிரியர் தோல்வியடைந்தவராகிறார். ஏனெனில் இன்று நிறையத் தகவல்கள் மாணவர்களுக்குத் தெரியும் அதைவிட ஒருபடி மேலே ஆசிரியருக்குத் தெரிந்தாக வேண்டும். அவ்வாறு இல்லையெனில் மாணவர்களுக்குத் தெரிந்த விடயத்துக்கு ஆசிரியர்கள் பெரும்பாலும் பொழிப்புரை, விளக்கவுரை வழங்குபவர்களாகவே இருக்கமுடியும். இந்தச் சூழலில் ஆசிரியர்கள் கற்பித்தலில் தாம் வெற்றி பெறுவதற்குப் பல தந்திரங்களைக் கையாளவேண்டியிருக்கிறது.

**தகவல் தொடர்பாடலில் சிறக்கவேண்டும்**

ஒரு நல்லாசிரியர் ஒவ்வொரு மாணவனையும் சேர்ந்து அவதானித்துப் புரிந்து கொள்ள வேண்டும். தேவைப்படும்போது தனித்தனியாகத் தொடர்பு கொள்வதற்கான முயற்சியை மேற்கொள்ளுதல் ஒரு தந்திரமாகும். மாணவர்கள் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதை முழுமையாகப் புரிந்துகொள்ளும்போது அவர்களுக்கு வழங்குவது மிகவும் எளிதானது. வகுப்பறையில் நல்ல தகவல்தொடர்பு திறன் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவை மிக முக்கியமான திறன்களில் ஒன்றாகும். ஆகவே, நல்ல தகவல் தொடர்பாளர்களாக இருப்பதன் மூலம் ஆசிரியர்கள் முக்கியமான வாழ்நாள் திறன்களை எடுத்துக்காட்டுடன் வடிவமைக்கின்றனர். நல்ல தகவல்தொடர்பாளர்களாக இருப்பதோடு மட்டுமல்லாமல் நல்ல ஆசிரியர்கள் சிறந்த கேட்பவர்களாக இருக்க வேண்டும். ஒரு பழமொழி சொல்வது போல், "பேசுவது வெள்ளி என்றால், கேட்பது தங்கம்" நிச்சயமாகக் குறைந்தது மாணவர்கள் ஆசிரியர்கள் ஆகிய இரண்டு தரப்பினரும் பேசுவதும், கேட்பதுமான செயலில் அதிகளவில் ஈடுபடும்போது மட்டுமே பயனுள்ள விளைவுகளைப் பெறமுடியும். கல்வியின் வெற்றிக்கான அடிப்படை 'கேட்பது'. அதாவது பதிலைக் கேட்பதால் தான் அந்த வெற்றி சாத்தியமாகும்.

கட்டுரையாளர் மூத்த விரிவுரையாளர்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

(தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியா வெள்ளைமலை ஏற்ற ஒலிபரப்பு

**வன்னி மண்ணில் புலிகளின் குரல் வானொலி சந்தித்த துயரங்கள் சொல்லி மாளாதவை என்பார்கள். பொருளாதாரத்தடை நீடித்த காலகட்டம்; மின்சாரம் இல்லை. எரிபொருளுக்கான தட்டுப்பாடு நிலவிய காலகட்டம்.**

தேவநாயகம் தேவானந்த்

## வானலையில் தமிழ் ஒலி- 23

புலிகளின் குரல் வானொலி ஒரு நடமாடும் வானொலியாகவே செயற்பட்டிருந்தது. குறிப்பாக ஈழப்போர் உக்கிரமடைந்த காலகட்டத்தில் நிலையாக ஓர் இடத்தில் தனது ஒலிபரப்புக் கோபுரத்தை நிலைநிறுத்த முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட புலிகளின் குரல் வானொலி 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வோடு இடம்பெயர்ந்து சாவகச்சேரி மந்துவில் பகுதியில் இயங்கியது. இதன்போது மின்கம்பத்தில் அதன் ஒலிபரப்பு உணர்கொம்பைப் பொருத்தி ஒலிபரப்பை மேற்கொண்டதாக அறியமுடிகிறது. இதன் பின்னர் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்து இறுதியில் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கிறது. இந்தக் காலகட்டத்தில் அதாவது 1995ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் இந்த வானொலி நிலையமும் அதன் ஒலிபரப்புக்கோபுரமும் பல தடவைகள் இடம்பெயர்ந்து ஒரு நடமாடும் சேவை போன்று செயற்பட்டிருக்கின்றன. இவை பற்றி விரிவாகப் பின்னர் பார்க்கலாம்.

### குறைந்த அளவு ஒலிபரப்புச் சேவை

வன்னி மண்ணில் புலிகளின் குரல் வானொலி சந்தித்த துயரங்கள் சொல்லிமாளாதவை என்பார்கள். பொருளாதரத்தடை நீடித்த காலகட்டம் மின்சாரம் இல்லை. எரிபொருளுக்கான தட்டுப்பாடு நிலவிய காலகட்டம். இந்தச் சூழலில் குறிந்த குறுகிய நேரச்சேவையைத் தொடர்ந்து பேணுவது என்பது மிகக் கடினமான பணியாகவே இருந்திருக்கிறது. புலிகளின் குரல் வானொலி காலை, மாலை என ஒரு சில மணிநேரங்களே ஒலிபரப்பானது. தொடர்ச்சியாக இரண்டு மணி நேரங்களுக்கு மேல் ஒலிபரப்ப முடியாத நெருக்கடியான சூழலிலேயே அது இயங்கியது எனலாம். பொதுவாக வானொலி ஒலிபரப்பை மேற்கொள்வதற்கு மின்சாரம் தேவை. அந்த மினசாரத்தை மின்பிறப்பாக்கிகளிலிருந்தே பெற்றுக்கொண்டாக வேண்டும் என்ற நிலமை.

மின்பிறப்பாக்கியை இயக்குவதற்கு எரிபொருள் தேவை. சமகாலத்தில் இலங்கை இராணுவத்துடனான சமர்களங்களையும் விடுதலைப்புலிகள் நகர்த்த வேண்டிய சூழல். ஆகவே போர்க்கள வாகனங்களுக்கான எரிபொருள்களுக்கே முக்கியம் கொடுக்க வேண்டிய நிலமை. இதனால் புலிகளின் குரல் வானொலிக்கான மின் பிறப்பாக்கிகளுக்கு எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைக்கிறது. இதுவே குறைந்தளவு நேரத்திலான ஒலிபரப்புக்கான காரணமாகிறது.

### அதியுச்ச பயன்பாடு

புலிகளின் குரல் ஒலிபரப்புக்காக மின்சாரத்தை வழங்கி வந்த மின்பிறப்பாக்கி தொடர்ச்சியாக இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே சீராக இங்கும் திறன் கொண்டது. தொடர்ச்சியாக அதனைப்பாவிக்க முடியாது. இரண்டு மணிநேரம் இயங்கினால் அடுத்த இரண்டு மணிநேரம் அதற்கு ஓய்வு வழங்கவேண்டும் என்ற நிலை காணப்பட்டது.


இந்தச் சூழலில் மட்டுப்பாடான வளங்களை அதியுச்சமாகப் பயன்படுத்துவதில் கவனமாக இருந்தார்கள்.

புலிகளின் குரல் மூன்ற பிரதான கட்டமைப்புக்களைக் கொண்டு இயங்கிவந்தது.

1. ஒலிபரப்புக்கோபுரம் அமைக்கப்பட்டிருந்த தளம்
2. புலிகளின்குரல் ஒலிபரப்புக்கான ஏழு தொடக்கம் ஒன்பது வரையான பணியாளர்கள் தங்கியிருந்து பின்தள வேலைகளைச் செய்வதற்கான தளம். (இது ஒலிபரப்பக் கோபுரத்திலிருந்து சற்றுத் தொலைவில் இருக்கும்)
3. புலிகளின் குரல் அலுவலகம் (இதுவே வெளித்தெரியும், கண்ணுக்கு பலனாகும் கட்டமைப்பாகும்.)

### ஒலிபரப்புக் கோபுரம் எதிர்நோக்கிய சாவல்கள்

போர்க் காலத்தில் வன்னியில் வெள்ளைமலை ஏற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த ஒலிபரப்புக் கோபுரக் கட்டமைப்பையும் அதனைப்பேணுவதில் எதிர்நோக்கிய சவால்களையும் நோக்கலாம். இந்தத் தளம், ஒலிபரப்புக்கோபுரம் ரான்ஸ்மீற்றர், மின்பிறப்பாக்கி மற்றும் செய்தி வாசிப்புக்கான சிறிய இடம் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும். இங்கு செய்திகள் எழுதப்பட்டு கொண்டுவரப்படும். வாசிப்பவர் ஒருவர் அந்த நேரத்தில் அந்த இடத்தில் இருப்பார். மின்பிறப்பாக்கியும் ரான்ஸ்மீற்றரையும் இயக்குவதற்கு ஒருவர் இருப்பார். மின்பிறப்பாக்கி மற்றும் ரான்ஸ்மீற்றர் மூன்றடுக்குப் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டடுக்கு இருப்புக் கேடர்கள் மற்றும் மண்மூடைகளால் பலப்படுத்தப்படிருக்கும். செய்திவாசிப்பதற்கான ஒரு மைக் மேசையொன்று இந்தப் பதுங்கு குழிக்கு மேலே இருக்கும். செய்திவாசிப்பவர் அந்த இடத்துக்கு முதலில் வந்து சேருவார். பின்னர் செய்தித் தாள்கள் உரிய நேரத்தில் வந்து சேரும்.



இந்தத் தளம் எந்த நேரத்திலும் வான்வழித் தாக்குதலுக்கு இலக்காகும் தொலைத்தொடர்புக் கோபுரத்தை வான்வழியாக இலகுவாக அடையாளங்காணமுடியும் என்பதால் குண்டுவீச்சு வானூர்திகளின் இலகுவான இலக்காக இது இருந்திருக்கிறது.

குறைந்த இழப்புக்களை எதிர்கொள்வதற்காகக் குறைந்த மனித வளம் அந்தப்பகுதியில் நிலை நிறுத்தப்படுவது எப்போதும் உறுதிப்படுத்தப்படும். வன்னியில் மாங்குளத்துக்கு அருகில் இந்த வெள்ளை மலை ஏற்றம் என்ற ஓர் இடம் இருந்தது. வன்னியில் இரண்டு உயரமான இடங்கள் இருக்கின்றன. ஒன்று கொக்காவில் அதில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் கோபுரம் அமைக்கப்பட்டிருந்தது. அதே இடத்தில புலிகளின் குரல் ஒலிபரப்புக்கோபுரமும் அமைக்கப்பட்டிருந்தது. அடுத்தது வெள்ளை மலை ஏற்றம். இது நடுக்காட்டில் உள்ளதோர் இடம். போர் உச்சமடைந்த காலகட்டத்தில் இதில் புலிகளின் குரல் கோபுரம் அமைக்கப்பட்டிருந்தது. இதில் ஒலிபரப்பை மேற்கொள்ளும் போது தாம் பட்ட துயரங்கள் சிலவற்றைப் புலிகளின் குரல் பணியாளர்கள் சிலர் நினைவுகூர்ந்தார்கள்.

### பெரும் துன்பங்களுக்கு மத்தியில் செயற்பாடு

வெள்ளை மலையில் ஏறிச்செல்கின்றபோது மோட்டார் சைக்கிள் பழுதடைந்து விழுந்து உருண்டு காயமடைந்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் வன்னியில் மண்ணெண்ணெயில் தான் மோட்டார் சைக்கிள்கள் இயங்கின. மோட்டார் சைக்கிளை ஸ்ராட் செய்வதற்குப் பெற்றோலைப்பயன்படுத்துவார்கள் பின்னர் அது மண்ணெண்ணெயில் இயங்கும். அவ்வாறான மோட்டார்சைக்கிளில் புலிகளின் குரல் பொறுப்பாளர் ஜவானும் அதன் நிகழ்ச்சித்தயாரிப்பாளரும் வெள்ளை மலை ஏற்றத்தில் ஏறிக்கொண்டிருக்கும் போது மோட்டார் சைக்கிள் இயந்திரம் நின்றுவிடுகிறது. அவர்கள் நிலை தடுமாறிவிழுந்து உருண்டுருண்டு கிழே பாதுகாப்புக்காக வெட்டப்பட்ட பதுங்குகழிகளுக்குள் விழுந்து காயப்படுகிறார்கள்.

அதே போல இரவுச்செய்திக்கான செய்தி எழுதப்பட்ட தாள்களோடு ஒருவர் வெள்ளை மலை ஏற்றத்துக்குச் சைக்கிளில் ஓட்டுகிறார். மிகக்குறைந்தளவு நேரம்தான் இருக்கிறது. இருட்டு வேறு. அவர் வேகமாகச் சைக்கிளை ஓடிச்செல்கிறார். வழியில் யானை ஒன்று நின்றதைக் அவர் கவனிக்கவில்லை. அதனுடன் மோதி விழுகிறார். யானை அவரை மிதிக்கிறது. அதே சமயம் சைக்கிள் ரயர் வெடிக்கிறது. யானை மிரண்டு ஓடிவிடுகிறது. செய்தியைக் கொண்டு சென்றவர். ஓட்டமும் நடையுமாக ஒலிபரப்புக் கோபுரப்பகுதியை அடைந்து உரிய நேரத்தில் செய்தியை ஒலிபரப்புகிறார்கள். வேறொரு தடவை செய்தியை ஒரு மூத்த பணியாளர் வாசிக்கிறார். நடுக்காட்டுக்குள் ஒரு கொட்டில். அதில் இருந்து தான் வாசிப்பது வழமை. அப்போது மைக் ஸ்ராண்ட் வழியாக பாம்பொன்று மெல்ல ஏறிவந்து செய்தி வாசிப்பவரையே பார்த்தபடி நிற்கிறது. செய்திவாசித்தவர் எந்தப் பதற்றமும் இல்லாது செய்தியை வாசித்து முடித்திருக்கி றார். இந்தத் துயர்மிகு அனுபவங்கள் எந்த வானொலியில் கிடைக்கும்? எந்தப் பணியாளர்களால் இந்தச் சாதனையைச் செய்ய முடியும்?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கே நிம்மதி?

மிருசுவில் தமிழ்தாசன்

அந்த அலுவலகத்தின் சிற்றுண்டிச் சாலை வெறிச்சோடிக் கிடக்கிறது. சற்று முன்பெல்லாம் சன்னதி கோயில் தீர்த்தத் திருவிழாபோல் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. இப்போது அது ஓய்ந்துகொண்டாலும் இனி மதிய இடைவேளையின்போது அலுவலகப் பணியாளர்கள் வந்து நீயோ நானோ என்று மொய்த்துக் கொள்ளப் போகிறார்கள். வழமையாக இப்படித்தான் நடக்கிறது.

தேநீர் இடைவேளை வியாபாரத்தை முடித்துக் கல்லாப்பெட்டியை ஓரளவுக்கு நிரப்பி மகிழ்ச்சியாகக் காணப்பட்டார் பொன்னுத்துரையர். இவர்தான் இந்தச் சிற்றுண்டிச் சாலையின் பூரண உரிமையாளர். இவருக்குக் கை உதவிக்கென்று பன்னிரண்டு வயதுப் பெடியன் கமலநாதன் வாய்த்திருக்கிறான். சம்பளம் இவ்வளவு தான் வேணும் எண்டு கறார் காட்ட மாட்டான். பொன்னுத்துரையர் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளும் அப்பாவிச் சீவன். வியாபாரம் சூடுபிடிக்கும் தருணங்களில் பம்பரமாக நின்று சுழலும் ஒரு செக்கு மாடு. அவனுடைய ஒத்தாசையின்றி அந்தச் சிற்றுண்டிச் சாலையை நடத்தவே முடியாது. ஆனால், வேலைக்கான ஊதியம் தான் அவனுக்கு எட்டாக் கனியாகவே இருந்தது.

✦✦✦✦✦

தனது பென்னாம் பெரிய தொந்தியை இலேசாக வருடிக்கொடுத்தபடி ஏதோ கனவுலகில் சஞ்சரித்தக்கொண்டிருந்த பொன்னுத்துரையாரின் அந்த அமைதி நிலையைக் குழப்புவதற்கென்று வந்தவர்போல் மகேந்திரன் வந்து அங்குள்ள கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டார். அந்த அலுவலகத்தில் பணி புரியும் ஓர் இடைநிலை அதிகாரி தான் மகேந்திரன். இடைவேளை நேரங்களில் மட்டுமே வரும் மகேந்திரன் அன்று இவ்வாறு இரண்டும் கெட்ட நேரத்தில் வந்திருந்தமை பொன்னுத்துரையாருக்கு வியப்பாக இருந்தது.

"எனக்குத் தேத்தண்ணி, கீத்தண்ணியொண்டும் போட வேண்டாம் அண்ணே...! மனம் சரியில்லை. அதுதான் இதிலை கொஞ்சம் நிம்மதியாய் இருந்துட்டுப்போவமெண்டு வந்தனான்"

மகேந்திரனின் இந்தக் குரல் வழமைக்கு மாறாகச் சற்றுச் சோர்வாகவே ஒலித்தது. பொன்னுத்துரையின் விழிகள் மகேந்திரனை ஆழமாக ஊடுருவி நின்றன. இதற்கு எப்படியும் ஏதாவது சொல்லித் தொலைக்கத்தான் வேண்டும். வேறு வழியின்றி வாயைத் திறக்க மகேந்திரனின் கண்கள் கலங்கத் தொடங்கின.

"என்னத்தைச் சொல்லுறது அண்ணே! வாழ்க்கையில நிம்மதியே இல்லாமல் கிடக்குது. பேருக்கு ஒரு உத்தியோகம். எவ்வளவுதான் சம்பளம் எடுத்தாலும் ஒரே கடனும் தண்ணியும்தான்... சோ வாழ்க்கையே வெறுக்குது" இலேசாகத் தனது சின்னத் தாடியைச் சொறிந்தபடி பெருமூச்செறிந்தார் மகேந்திரன். "என்னவாம் மகேந்திரனுக்கு நிம்மதியில்லை யாமோ... ஆருக்குத் தானப்பா இந்த உலகத்திலை நிம்மதி" சொல்லியபடியே சிவபூசைக் கரடியாக வந்தமர்ந்தார் சக பணியாளர் திருச்செல்வம்.

"சே இந்தப் பரதேசி என்னத்துக்கடா இதுக்கை வருகுது. அஞ்சு சதம் செலவளிக்காத ஈப்பிணியள் இரண்டும் இண்டைக்கு இஞ்சை வந்திருக்குதுகள். சும்மா வெட்டிப் பேச்சுப் பேசி என்னை மினக்கடுத்தவெண்டு வந்திட்டுதுகள் கசவாரங்கள்" பொன்னுத்துரையார் மனதுக்குள் எரிந்து புகைந்தார்.

"இஞ்சாரும் மகேந்திரன், காசிருந்தால் மாத்திரம் மனிசருக்கு நிம்மதி வந்திருமோ? ஏதாவது ஒரு நிம்மதியீனம் இருக்கத்தான் செய்யும்" வலது காதுக்குள் சுட்டு விரலை வைத்துக் குடைந்தபடி யதார்த்தம் பேசினார் திருச்செல்வம். "இல்லையண்ணை என்னைப்பொறுத்தவரைக்கும் காசுதான் முக்கியம். அது மட்டும் இருந்தால்போதும் எனக்கு ஒரு பிரச்சினையும் வராது. நிம்மதியாயிருப்பன்" இது மகேந்திரன் தரப்பு வாதம்.

✦✦✦✦✦

அன்பான மனைவி, அடக்கமான இரண்டு ஆண் பிள்ளைகள். ஆண்பிள்ளைகளுக்கு வயது இருபதையும் கடந்துவிட்டது. முழு வாலிபர்கள். ஆனால், வேலையில்லை! உத்தியோகமில்லை! வேறு வழிகளில் உழைக்கும் யோகமும் இல்லை. யாரையாவது பிடித்துக் கெஞ்சி மண்டாடி அவர்கள் இருவரையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கலாம் என்றால்,.. அதுவும் சுலபமாகத் தெரியவில்லை. இந்த நிலையில் மகேந்திரன் ஒருவரின் சம்பாத்தியம் யானைப் பசிக்குச் சோளப் பொரியாகவே அவரது குடும்பத் தேவைகளுக்கு இருந்து வந்தது.

✦✦✦✦✦

காலச் சக்கரங்கள் சடுதியாக ஓடிக்கொள்ளச் சூழ்நிலைகளும் எப்படியெல்லாமோ மாறிக்கொண்டன. சரியாக ஆறு ஆண்டுகளுக்குப் பின்பு ஆளாளுக்கு இடம் மாறியிருந்த நிலையில், திருச்செல்வத்தின் ஆந்தைக் கண்களில் மகேந்திரன் சிக்கிக் கொண்டார்.

"எட எங்கடை மகேந்திரனே எப்பிடிச் சுகமாயிருக்கிறியே..? பென்சனும் எடுத்துப் போட்டீர். இப்ப காசுக் கஸ்ரமில்லையோ? முந்தி நிம்மதி இல்லாமல் அலைஞ்சனீர்... இப்ப இன்னமும் நிம்மதியில்லாமல் இருக்குமே...?" "இல்லையண்ணே என்ரை பெடியங்களிரண்டுபேரும் லண்டனுக்குப் போய் இப்ப லச்சம் லச்சமாய் அனுப்புறாங்கள்... இப்ப காசுக் கஸ்ரமில்லை..."



காலச் சக்கரங்கள் சடுதியாக ஓடிக்கொள்ளச் சூழ்நிலைகளும் எப்படியெல்லாமோ மாறிக் கொண்டன. சரியாக ஆறு ஆண்டுகளுக்குப் பின்பு ஆளாளுக்கு இடம் மாறியிருந்த நிலையில். திருச்செல்வத்தின் ஆந்தைக் கண்களில் மகேந்திரன் சிக்கிக் கொண்டார்.

"அடி சக்கை அப்ப நீர் தேடின நிம்மதி இப்ப கிடைச்சிட்டுத்தானே?" "அது தானில்லையண்ணே. என்ரை பெஞ்சாதிக்கு ஏதோ வில்லங்கமான வருத்தமாயிருக்குது. வெளிநாட்டு வைத்தியம் தான் செய்யவேணுமாம். பதினைஞ்சு லச்சம் முடியுமாம். அது பிரச்சினையில்லை என்ர மனிசியின்ரை வருத்தம் மாற வேணும். அது வைரக்கும் நிம்மதிக்கு இடமில்லை." மகேந்திரன் அழுதே விட்டார்.

✦✦✦✦✦

மீண்டும் ஒரு தடைவ இருவரும் சந்திக்கும் இந்த வாய்கப்பு எதேச்சையாகக் கிட்டிய வேளையில், அடையாளம் காணமுடியாத அளவுக்கு மகேந்திரன் உருக்குலைந்து காணப்பட்டார். எனினும் எப்படியோ திருச்செல்வம் அவரைக் கண்டு பிடித்துத்தான் விட்டார். "என்ன ஐசே! மகேந்திரன்! கன காலத்துக்குப் பிறது சந்திக்கிறம். எப்பிடி இப்ப உம்மடை பெஞ்சாதிக்கு வருத்தமெல்லாம் சுகமே?"

"சரியாய் பதினெட்டு லச்சம் முடிஞ்சுது. சிங்கப்பூரிலை போய் வருத்தத்தைச் சுகமாக்கியாச்சுது. ஆனால் நிம்மதிதானில்லை."

மகேந்திரனின் வார்த்தைகளைக் கேட்ட திருச்செல்வத்துக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. வாயில் வந்தபடி திட்டுவதற்கு முடிவெடுத்துப் பீறிட்டெழுந்தபோதும் அதை அடக்கியவாறு அவரது நிம்மதியீனத்தை அறிவதற்கு முனைந்தார்.

"என்ன வாழ்க்கை அண்ணை! என்ரை மூத்தவனுக்கு வயது முப்பத்தஞ்சாய்ப் போச்சுது. அவனுக்கு ஒரு கலியாணம் செய்து வைக்கலாமெண்டால், ஒண்டும் தோதாய் வருகுதில்லை. நாங்கள் கண்ணை மூட முந்தி ஒரு பிள்ளையின்ர கலியாணங் காட்சியையாவது பாத்திடலம் எண்டால், அது ஒப்பேறும்போலை தெரியேல்லை. சோ ஒரு சந்தோசமோ, நிம்மதியோ இல்லாத வாழ்க்கையாக் கிடக்கப்பா"

✦✦✦✦

திருச்செல்வத்துக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. உலகில் வாழும் மனிதர்களில் எவரும் முழுமையான நிம்மதியை அடைந்தது கிடையாது. ஏதோ ஒருவிதத்தில் விரக்தியும் நிம்மதியீனமும் பிண்ணிப்பிணைந்திருப்பதுதான் வாழ்க்கை. அதற்காக அழுதோ அரற்றியோ, அது கிட்டப்போவதுமில்லை. இதுதான் வாழ்க்கையின் நியதி. இதைப் புரிந்துகொள்ளாமல் தினமும் நிம்மதியைத்தேடி அலையும் மகேந்திரன் போன்றவர்களை நினைக்கத் திருச்செல்வத்தாருக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரம்பின் அரசியலுக்கு சிரியா முடிவுரை!



சிரியா குறித்த அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் கொள்கைகள், ட்ரம்ப் தனக்குத் தானே உருவாக்கிக் கொண்ட பேரழிவாக ஆகலாம் 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் இது அவருக்குத் தோல்வியை ஏற்படுத்துவதாக இருக்கலாம் என்கிறார் அமெரிக்க அயலுறவுத் துறையின் முன்னாள் உதவிச் செயலர் பி.ஜே. கிரவ்லே. சிரியா தொடர்பான ட்ரம்ப்பின் முடிவுகளை உள்ளடக்கிய சரத்து எதுவும், அவருடைய குற்றச் செயல்கள் மற்றும் தவறான செயற்பாடுகளின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டுள்ள பதவி நீக்கத் தீர்மானத்தில் இருக்காது. ஆனால் துருக்கி அதிபர் ரிசெப் தாயிப் எர்டோகனிடம் சரணாகதி அடைவதைப் போன்ற அவருடைய நடவடிக்கையைத் தொடர்ந்து ஏற்படும் நிகழ்வுகள் காட்டுகின்றன. இது ட்ரம்பின் அதிபர் பதவியின் முடிவுக்கான ஆரம்பமாக இருக்கலாம். தற்போது கொண்டுவரப்பட்டுள்ள பதவி நீக்கத் தீர்மானத்தில் ட்ரம்ப் தப்பிவிடுவார் குடியரசுக் கட்சிக்குப் பெரும்பான்மை உள்ள செனட் அவரைத் தண்டிக்க வாய்ப்பில்லை இருந்தாலும் அவருக்கு அவரே எதிரியாக இருக்கிறார். உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி உடன் தொலைபேசியில் பேசியமை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரு குற்றச் செயல் நடந்திருப்பதற்கு வலுவான ஆதாரமாக அமைந்துள்ளது. உள்நாட்டு அரசியலில் மறைந்திருக்கும் விடயங்களை வெளிக்கொண்டு வரும் பரிசோதனையாக உக்ரைன் மாறிவிட்டது பதிலுக்குப் பதில் என்ற வகையில் உள்ளது. ஆனால் அதை நல்ல விடயமாகவே டிரம்ப்பின் ஆதரவாளர்கள் இன்னும் பார்க்கின்றனர்.

### உக்ரைனைப்போல் அல்ல சிரியா

உக்ரைனிலிருந்து சிரியா மாறுபட்டது. பராக் ஒபாமா அல்லது ஜனநாயகக் கட்சியின் மீது குற்றஞ்சாட்டக் கூடிய விடயமாக அது இருக்காது. புதிய தடைகள் மூலம் துருக்கியைத் தண்டிக்க வேண்டும் என்பது ட்ரம்ப் நிர்வாகத்தின் எண்ணமாக இருந்தாலும், இது ட்ரம்ப் உருவாக்கிய சிக்கலாகவே உள்ளது. சிரியாவுக்கும் துருக்கிக்கும் இடையிலான எல்லையில் சர்ச்சைக்குரிய பகுதிகளில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுவது என்று ட்ரம்ப் எடுத்த முடிவு, சிக்கலான மற்றும் அதிக செலவு ஏற்படுத்தும் மத்திய கிழக்கு சர்ச்சைப் பகுதிகளில் இருந்து படைகளைத் திரும்பப் பெறுவோம் என்று தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் உள்ளது. பொருத்தமற்ற, முடிவில்லாத இந்தப் போர்களில் இருந்து நாம் வெளியேற வேண்டிய தருணம் இது என்று ட்ரம்ப் தெரிவிக்கிறார். அத்தோடு எமக்குப் பயன் கிடைக்கும் இடங்களில் மட்டுமே நாம் போரிடுவோம், வெற்றி பெறும் வகையில் போரிடுவோம்" என்று ஆங்கிலத்தில் பெரிய எழுத்துகளில் அவர் குறிப்பிட்டுள்ளார். ட்ரம்பின் பல தவறான, சர்ச்சைக்கு இடமளிக்கும் அறிக்கைகள் மற்றும் கீச்சகப் பதிவுகளைப் புறக்கணித்து விடலாம் என்பது போன்ற எண்ணத்தை ஏற்படுத்தினாலும், இந்த விடயத்தில் ட்ரம்பை ஒரு புத்தகம் போல எர்துவான் படித்து, பிடிலைப் போல அவரைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

### ட்ரம்ப் - எர்டோகன் தொடர்பு

துருக்கி எல்லையில் தன்னாட்சி அதிகாரம் கொண்ட குர்திஷ் பிராந்தியம் உருவாகாமல் தடுப்பதற்காகச் சிரியாவுக்குள் தனது படைகளை அனுப்பத் திட்டமிட்டுள்ளதாக அண்மையில் தொலைபேசி உரையாடலின்போது ட்ரம்ப்பிடம் எர்டோகன் கூறியபோது, ட்ரம்ப் குறைந்தபட்ச எதிர்ப்பு தான் காட்டுவார் என எதிர்பார்த்தார். 2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடந்த மற்றொரு தொலைபேசி உரையாடலின் போது, சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுவது பற்றி ட்ரம்ப் கோடிட்டுக் காட்டியிருந்தார். ஓ.கே. அது உங்கள் பிரச்சினை. எங்கள் வேலை முடிந்துவிட்டது என்று ட்ரம்ப் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, ட்ரம்ப்பின் தாக்கங்களைச் சமாளிக்க முயற்சிக்கும் வகையில் முதிர்ச்சி கொண்ட பாதுகாப்புத் துறை அதிகாரியாக இருந்த அமெரிக்கப் பாதுகாப்புத் துறைச் செயலர் ஜேம்ஸ் மாட்டிஸ் பதவி துறந்தார். செயலில் இறங்குவதற்குப் பத்து மாதங்கள் கழித்து, எர்டோகன் முடிவு செய்தபோது, திறந்திருக்கும் கதவின் மீது மோதப் போகிறோம் என்று அவர் அறிந்திருந்தார்.

### ட்ரம்ப் மீதான விமர்சனங்கள்

ட்ரம்ப்பின் கொள்கைக்கு இரண்டு கட்சிகளில் இருந்தும் விமர்சனங்கள் எழுந்தன. செனட் பெரும்பான்மை தலைவர் மிட்ச் மெக்கோன்னெல் கூட விமர்சித்தார். படைகளைத் திரும்பப் பெறுவதை ஆதரித்த அமெரிக்கர்கள் பலர் மத்திய கிழக்கில்



போர்கள் குறித்து அஞ்சினர். ஆனால், மிக மோசமான முறையில் அதை ட்ரம்ப் செய்தார். ஐ.எஸ். ஆயுததாரிகள் உருவாகிவிடாமல் தடுப்பதற்காக அமெரிக்கப் படையின் சிறிய ஒரு பிரிவும், பிரிட்டன் மற்றும் பிரெஞ்சுப் படைப் பிரிவுகளும் அங்கிருந்தன. சிரியா எப்படி மறுசீரமைப்புச் செய்யப்பட்டு, நிர்வாகம் எப்படி நடைபெறப் போகிறது என்ற தூதரக நடைமுறை நிறைவு பெறும் வரையில் இடைக்கால ஏற்பாடாக அந்தப் படைப் பிரிவுகள் அங்கு இருந்தன. வணிகப் பின்னணி கொண்டவராக இருந்தாலும், புதிய மற்றும் மேம்பட்ட சிரியாவை உருவாக்குவதற்கு அமெரிக்காவுக்குக் கிடைத்த வாய்ப்புகள் அனைத்தையும் ரஷ்யா, ஈரான், ஆசாத் தலைமையிலான சிரியா நிர்வாகம் மற்றும் ஐ.எஸ். ஆயுததாரிகளின் பிடிக்குத் தவறவிட்டு விட்டது.

அமெரிக்கா திரும்பப் பெற்றதால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு சிரியா மற்றும் ரஷ்யப் படைகள் சென்றுவிட்டன. துருக்கி ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, குர்திஷ்களின் பிடியில் இருந்த ஐ.எஸ். ஆயுததாரிகள் பலர் தப்பிவிட்டனர். ஈரானுக்கு நெருக்கடி வழங்கும் வகையில் எடுத்த ட்ரம்ப்பின் முயற்சிகள் என்ன பலனைத் தந்தன என்பதை அனைவரும் ஊகித்துக் கொள்ள முடியும்.

### அமெரிக்கா குறித்த மத்திய கிழக்கு பிம்பம்

அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெற்றமை குறித்தும், சிரியா மீது துருக்கி நடத்திய தாக்குதல் பற்றியும் ட்ரம்பின் ஆதரவாளர்கள் பலரின் கருத்து ஒரே மாதிரியாக இருந்தது. துருக்கி மற்றும் சிரியாவுக்கு இடையிலான பிரச்சினைகளில் தலையீட்டை நிறுத்திக் கொண்டது மிகவும் நல்லது. அவர்களைக் காத்து வளர்க்க வேண்டிய பொறுப்பு நமக்கு இல்லை. அங்கே நடந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் நூறாண்டுகளுக்கு மேலாக நடந்து கொண்டு தான் இருக்கின்றன. எமது பிரச்சினை அல்லாத ஒரு விடயத்துக்காக, எம் மக்கள் எத்தனை பேர் அங்கு உயிரிழக்க வேண்டும்? நாம் அங்கே இருந்தாலும், இல்லாவிட்டாலும் அது தொடர்ந்து கொண்டு தான் இருக்கும் என்று 52 வயதான மெலிஸ்ஸா எர்ரா கூறினார். ஆனால், கடற்படையில் பணியாற்றி ஓய்வுபெற்ற எரிக் ரட்ஜியெஜ் கருத்து வேறு மாதிரியாக இருந்தது. இவ்வளவு வெகுவாக ஆப்கானிஸ்தானில் இருந்து படைகளைத் திரும்பப் பெற்றது தவறானது என்று நான் நினைக்கிறேன். ஆனால், அது மோசமாக இருந்தால், நாம் திரும்பிச் செல்ல மாட்டோம் என ஒருபோதும் கூறியது இல்லை. ஆப்கானிஸ்தானில் இருந்து திரும்பிச் செல்வதற்கு நாம் நீண்ட காலம் காத்திருந்தோம். அங்கே செல்லக் கூடிய மற்ற பங்காளர்கள் உள்ளனர். உலகின் பாரத்தை எப்போதும் நாம் சுமந்து கொண்டிருக்க முடியாது" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.


இன்னும் குறிப்பிட்டுச் சொல்வதாக இருந்தால், அமெரிக்காவை ஒரு தோழமை நாடாகக் கருதும் நம்பகத்தன்மை, மத்திய கிழக்கு மற்றும் அதையும் தாண்டிய விடயங்களில் கேள்விக்குறி ஆகிவிட்டது.

### குர்திஷ்கள் குறித்த மலினப்படுத்தல்

ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது அமெரிக்கப் படைகளுக்கும் குர்திஷ் படைகளுக்கும் இடையில் உருவான உறவின் முக்கியத்துவத்தை ட்ரம்ப் நிராகரித்துள்ளார். ரக்கா மற்றும் ஐ.எஸ். பிடியில் இருந்த பகுதிகளை மீட்ட படைகளுக்கு முன்னணிப் படையாகக் குர்துகள் இருந்துள்ளனர். குர்துகள் எங்களுக்கு உதவி செய்யவில்லை என்று ட்ரம்ப் கூறியுள்ளார். மத்திய கிழக்கில் தங்கள் பாதுகாப்புக்காக அமெரிக்காவை நம்பியிருக்கும் எந்த நாட்டுக்கும் அல்லது இன்றைக்கு நேட்டோ படைகளில் உள்ள பெரும்பாலான நாடுகளுக்கும் மறு உத்தரவாதம் தருவதாக ட்ரம்பின் எந்த நடவடிக்கையும் அமைந்திருக்கவில்லை. அமெரிக்காவின் தலைமைத்துவம் குறித்த சந்தேகங்களை வெளிப்படையாக அறியச் செய்துள்ளார் ட்ரம்ப். அமெரிக்காவின் நலன்களை முன்னிறுத்தி, அதன் முக்கிய தோழமை நாடுகளின் நலன்களை முன்னிறுத்துவதில், தன்னுடைய முதன்மையான பணியை ட்ரம்ப் எவ்வளவு மோசமாகச் செய்து வருகிறார் என்பதைச் சிரியா கோடிட்டுக் காட்டியுள்ளது.

நன்றி - பி.பி.சி தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**கதை**

பொறியியல் கல்லூரியில் படிக்கும் இறுதியாண்டு மாணவன் வருண். எதிலும் அக்கறை இல்லாத இளைஞனாக வலம் வருகிறார். ஆபாசத் தளங்களை முடக்கியதற்காக வருத்தப்படும் அவர், வகுப்பறையில் ஆபாசப் படம் பார்த்துப் பேராசிரியையிடம் வசமாகச் சிக்க, வகுப்பிலிருந்து நீக்கப்படுகிறார். யோகி பாபுவுடன் இணைந்து இது தனது பிரச்சினை இல்லை, சமூகத்தின் பிரச்சினை என்று சொல்லி தனது வேட்கையைத் தணித்துக் கொள்ள முயல்கிறார். தனது வீட்டு மாடியில் வாடகைக்குக் குடியிருக்க வரும் இளம்பெண் சம்யுக்தா ஹெக்டேவுடன் நெருங்கிப் பழகிக் காதலிக்கிறார். நண்பனின் நிச்சயதார்த்தத்துக்குச் சென்று அங்கு காதலியிடம் எல்லை மீறுகிறார். இதனால் சிக்கல் நேர்கிறது. அது உன் பிரச்சினை என்று காதலியைக் காயப்படுத்துகிறார். சம்யுக்தா ஹெக்டேவுக்கு வரும் சிக்கல் என்ன, வருண் என்ன செய்கிறார், இவர்கள் இருவரும் இணைந்தார்களா? வருண் செல்லமாக வளர்க்கும் பப்பி என்ன ஆகிறது, வருண் மனம் மாறினாரா? போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது மீதிக் கதை.

**பாத்திரங்கள்**

'பப்பி' படத்தின் மூலம் அறிமுக நாயகனாகியுள்ளார் வருண். முன்னதாக 'ஒரு நாள் இரவில்', 'வனமகன்', 'போகன்' உள்ளிட்ட படங்களில் துணைக் கதாபாத்திரத்தில் நடித்தவர் இப்போது நாயகனாகத் தகுதி உயர்வு பெற்றுள்ளார். அப்பாவுக்குப் பயந்து நடிப்பது, காதலியை அப்பாவுக்குத் தெரியாமல் வீட்டிலிருந்து வெளியேற்றுவது போன்ற சில காட்சிகளில் இயல்பாக நடித்துள்ளார். ஆனால், குற்ற உணர்ச்சியையோ, தவறு செய்த பதற்றத்தையோ நடிப்பில் காட்டவில்லை. சில காட்சிகளில் சம்பந்தமே இல்லாமல் சத்தம் போட்டுப் பேசி நடிக்க முயல்கிறார். அது செயற்கை. சம்யுக்தா ஹெக்டே சிக்கலான ஒரு கதாபாத்திரத்தை ஓரளவு சரியாகக் கையாள்கிறார். பிரச்சினையின் தீவிரம் உணர்ந்து உடையும் தருணங்களில் நல்ல நடிப்பை வழங்கியுள்ளார். படத்தின் ஒரே ஆறுதல் யோகி பாபுதான். நகைச்சுவையில் தடம் பதித்துப் பார்வையாளர்களைக் காப்பாற்றுபவனாக இருக்கிறார். கதாநாயகன் கூடவே வருபவர் என்பதால் அவர் நெகிழ்ந்து மகிழ்ந்து உருக்கம் காட்ட ஒரு காட்சியை வைத்துள்ளனர். அது படத்துக்கு எந்தவிதத்திலும் ஒத்துழைப்பை நல்கவில்லை. படத்தின் முக்கிய நோக்கம் வலுவிழந்த நிலையில் இருக்கும்போது இந்தக் காட்சி வருவதால் இரசிக்க முடியவில்லை.

நித்யா ரவீந்திரன், மாரிமுத்து, ஆர்.எஸ்.சிவாஜி போன்ற அனுபவம் வாய்ந்த நடிகர்கள் தங்கள் பங்களிப்பை சரியாகச் செய்துள்ளனர். கிட்டத்தட்ட மூன்று பேரைச் சுற்றி மட்டுமே நகரும் திரைக்கதையில் 'நான் கடவுள்' ராஜேந்திரன் அறிவுறுத்துகிறேன் பேர்வழி என்று வந்துபோகிறார். அதனால் எந்தப் பலனும் இல்லை.



**இசை,ஒளிப்பதிவு, காட்சித் தொகுப்பு**

தீபக் குமார் பாடியின் ஒளிப்பதிவு படத்துக்குப் பாதகத்தை வரவைக்கவில்லை. தரண்குமார் இசையில் பாடல்கள் தேறவில்லை. வசனத்தையே பிச்சுப் போட்டு பாடல் என்று பரிமாறியிருக்கும் விதம் அலுப்பு. படத்தொகுப்பில் ரிச்சி இரண்டாம் பாதியில் சில காட்சிகளை நீக்கியிருக்கலாம். இழுவை அதிகம்.

**பலம் - பலவீனம்**

த்ரிஷா இல்லனா நயன்தாரா போன்ற படங்களின் தொடர்ச்சியாகக் கதைக்களத்தைக் கட்டமைத்திருக்கிறார் இயக்குநர் நட்டுதேவ். அவர் தனது பெயரை முரட்டு சிங்கிள் என்றே முதலில் விளம்பரப்படுத்தி வந்தார். தனது பெயர் குறித்த சுவாரஸ்யத்தை ஏற்படுத்துவதில் காட்டிய முனைப்பை, படத்தின் கதை, திரைக்கதையில் இயக்குநர் காட்டியிருக்கலாம். வசனங்கள், காட்சி அமைப்புகள், திரைக்கதையின் போக்கு என எல்லா வடிவங்களிலும் ஆபாசம் விரவிக் கிடக்கிறது. காதலில் விழுந்து காமத்தைக் கடப்பது என்றில்லாமல் காமத்தில் இருந்து காதலைக் கடப்பது மாதிரியான பிம்பத்தை இயக்குநர் நட்டுதேவ் கட்டமைத்துள்ளார். காமமே முதன்மை என்பதைக் காட்சிகளின் வழி நிறுவ அதிகம் முயல்கிறார். அதில் வெளிப்படும் ஆபாசம் முகம் சுளிக்க வைக்கிறது.

பெண்ணைப் போகப்பொருளாக, சதைப்பிண்டமாகவே அணுகியுள்ளார். ஆண்களின் மலினமான உணர்ச்சிகளைத் தூண்டும் விதத்திலேயே காட்சிகளை உருவாக்கியுள்ளார். இந்தக் கதையமைப்புக்காக அவர் கவலைப்படவுமில்லை, கஸ்ரப்படவும் இல்லை. முந்தைய வாலிப நகைச்சுவைப் படங்களின் தொடர்ச்சியை திரைக்கதை நகர்த்தலுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்.

முழுக்க படம் அந்த வகையில் அமைந்துவிடக்கூடாது என்பதற்காக நாய் பிரசவத்தின் மூலம் ஒரு தீர்வைச் சொல்கிறார். ஆனால், அது வலிந்து திணிக்கப்பட்ட மிகையுணர்ச்சிக் காட்சியாக இருக்கிறது. திருமணத்துக்கு முந்தைய உறவின் ஆபத்துக் குறித்து இளைஞர்களுக்கு எச்சரிக்கின்ற விதம் மட்டும் பரவாயில்லை.

# தமிழினத்தின் தாகம்....!

■ கிருஷ்ணராஜா சஞ்ஜீவன்

மண்ணுக்கொரு பொன்னினமாய்
மரபுகளுக்கு அடித்தளமிட்டு
விண்ணுலகில் எல்லையற்று
பரந்து வாழும் தமிழினமே...!

தாயகம் தனைக் காத்திட
உயர் தார்மிகத்துடன் போராடி
வான்புகழ் கொண்டு அன்று
வீறு கொண்டெழுந்து நிற்றோம்

காலத்தின் கெடுபிடியால்
காலதேவனின் கட்டளையால்
கண்ணெதிரே கதறியழ
கதியற்று நாம் நின்றிருந்தோம்

சொந்தமெனக் கூத்தாடி
பந்தத்தில் கலந்திருந்த - வஞ்சமற்ற
பாசஉறவுகளை பாதியிலே தொலைத்துவிட்டு
நாதியற்று நிற்கின்றோம் நடுத்தெருவில் நாமிங்கு

கிழக்கெழுந்த சூரியனும்
மேற்கினில் மறைந்ததன் பின்
எழும் காரிருள் போல்
எம் இனமும் ஆனதென்ன?

வீரத்தில் சளைத்தவனில்லை தமிழன்
சாவுக்கு பயந்தவனுமில்லை
மானத்தால் உயர்ந்தவன் தமிழன்
ஞாலத்தில் அவனே என்றும் புனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கபாலி, காலா, அசுரன்... எங்கே தோற்கிறார்கள்?

டி.தருமராஜ்

வெற்றிமாறன் இயக்கி, தனுஷ் நடித்து வெளியாகியுள்ள 'அசுரன்' திரைப்படம் சில புதிய விவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது. 'அசுரன்' ஒரு நவயுகப் படம். அண்மைக் காலமாக, சாதியால் ஒடுக்கப்பட்டவர்களைக் கதாநாயகர்களாகக் கொண்டுதிரைப்படங்கள் வரத் தொடங்கியிருக்கின்றன. இயக்குநர் பா.ரஞ்சித் தொடங்கி மாரி செல்வராஜ், வெற்றிமாறன் என்று தொடரும் இந்த முயற்சி பாராட்டத்தக்கது. இந்த வகைப் படங்களைத் 'தலித் சினிமா' என்று வகைப்படுத்தும் முயற்சிகளும் நடக்கின்றன. ஆனால், இலக்கியத்தில் 'தலித் இலக்கியம்' என்று பேசிப் பார்த்த அனுபவத்தில், 'தலித் சினிமா' என்றொரு வகைப்பாடு இருக்க முடியும் என்று எனக்கு நம்பிக்கையில்லை. சினிமா, சினிமாதானே!

பொதுவாக, சாதியால் ஒடுக்கப்பட்டவர்களின் உணர்வுகளைக் கலை வடிவில் சொல்ல முற்படுகையில் சில சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இலக்கியம், ஓவியம், இசை, நாடகம் என்று எல்லாக் கலை வடிவங்களுக்கும் இந்தச் சிக்கல் உண்டு. இப்போது சினிமாவின் முறை. 'கபாலி', 'காலா' தொடங்கி 'அசுரன்' தந்த அனுபவத்தில், தமிழ் சினிமா தனது திரைமொழியைப் பரிசீலினைக்கு உட்படுத்தவேண்டும் என்று நினைக்கிறேன். ஏனென்றால், சாதியச் சிக்கல்களை முன்னிலைப்படுத்தும் சினிமாக்களை ஏற்கெனவே பழகிவைத்திருக்கும் காட்சி மொழியில் சொல்லிவிட முடியாது.

**அடிப்படையான சிக்கல்**

ஒரு தலித்தின் கதையைச் சொல்ல முயலும் ஒவ்வொரு முறையும் சினிமாவில் நீங்கள் சந்திக்கும் முதல் சிக்கல் அந்த நாயகன் எப்படிப்பட்டவன் என்பதுதான். ஏனெனில், ஒடுக்கப்பட்டவன் குறித்து ஒரு சித்திரம் இங்கே புராணம் தொடங்கிச் சினிமா வரைக்கும் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. இராவணன், கர்ணன், ஏகலைவன், காளி (முள்ளும் மலரும்), பாரதி (பாரதி கண்ணம்மா) என்று வரிசையாக யோசித்துப்பாருங்கள். இந்தக் கற்பனைகளுக்குள் ஓர் ஒற்றுமையை உங்களால் உணர முடிகிறதா? இவர்களெல்லாம் முரடர்கள், அதேநேரம் வெகுளியும்கூட. சூழ்நிலைக் கைதிகள் என்று சொல்லலாமா?

இந்தக் கற்பனை இன்றைக்கு உங்களுக்கு உதவுவதில்லை. ஏனென்றால், உங்களுடைய ஒடுக்கப்பட்டவன் வெகுளிதான், முரடன்தான். ஆனால், அரசியலும் தெரிந்தவன். அந்த அரசியல், சாதியால் ஒடுக்கப்பட்ட அத்தனை பேரின் நலன்களையும் இணைக்கிற அரசியலாக இருக்கிறது.

இப்போதுதான் அந்த நாயகனின் குணநலன்களை வடிவமைப்பதில் உங்களுக்குச் சிக்கல் வர ஆரம்பிக்கிறது. ஒடுக்கப்பட்ட நாயகன், எம்மிடம் ஏற்கெனவே வழக்கத்தில் இருக்கும் சாகச வீர புருஷன் இல்லை. ஏனெனில், அவன் கலை வடிவங்கள் கட்டாயப்படுத்தும் ஒற்றைப் பிரதிநிதியே தவிர ஆபத்பாந்தவன் இல்லை. இதனால்தான், எம்.ஜி.ஆர். அல்லது ரஜினி வகைக் கதாநாயக பிம்பம் ஒடுக்கப்பட்ட நாயகனாக முடியாமல்போகிறது.

ஒரு தலித்தை நாயகனாக முன்னிறுத்துவதில் உள்ள அடிப்படையான சிக்கல் இது. ஏனெனில், அவன் விடுதலை அரசியலால் வடிவமைக்கப்பட்டவன என்பதால் அவதார பிம்பத்துக்குள் அடைபட மாட்டேன் என்கிறான். உதாரணமாக, 'அசுரன்' திரைப்படத்தில் வடக்கூரானை வெட்டுவதற்காகச் சிறுவன் முயல்கையில், அவனது தந்தை மின்சாரத்தைத் தடைசெய்யும் காட்சியை நினைத்துப் பாருங்கள். தனுஷ் மிகச் சாதுரியமாக, மின்னல் போல யோசித்து சாகசம் செய்யும் காட்சி உங்களுக்கு ஞாபகம் வருகிறதா? ஆனால், இதே காட்சியை வெக்கையில் பூமணி இப்படி எழுதுகிறார். "...சேவுக்கடைக்கு எதிர்ல போனா காரியம் கெட்ரும்னு சத்தரத்து மறவுல நின்னுக்கிட்டேன். வெளிச்சம் வேற மனசுல உறுத்துச்சு. ஒண்ணும் ஓடல. டிரான்ஸ்பாரத்துப் பக்கம் போயி தட்டுத்தடுமாறி பீஸப் புடுங்குறதுக்குள்ள பெரும்பாடாப் போச்சு."

**அரசியல் படங்களின் முதல் வேலை**

இதுதான் யதார்த்தம். இதைத்தான் இலக்கிய மொழி என்றும் சொல்கிறோம். திரைமொழி கற்றுக்கொள்ள வேண்டியதும் இதைத்தான். அதற்குப் பெருந்தடையாக இருப்பது ஏற்கெனவே வடிவமைக்கப்பட்ட அதன் நாயக பிம்பங்கள். அதை மீறுவதுதான் அரசியல் படங்கள் செய்ய வேண்டிய முதல் வேலை. ரஜினி, தனுஷ் போன்றவர்களை வைத்துக்கொண்டு இதைச் செய்ய முடியுமா? என்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்த சிக்கல், ஒடுக்கப்பட்ட அரசியல் கதைகளில் இடம்பெறும் வன்முறையை எவ்வாறு காட்சிப்படுத்துவது? வன்முறையைக் காட்சிப்படுத்துவதற்கும் தமிழ்த் திரைப்படங்கள் சில வாய்ப்பாடுகளை வைத்திருக்கின்றன. சண்டைக்காட்சி என்பது இதற்குப் பெயர். ஒரு சாகசக் கலையைப் போல சிங்காரிக்கப்பட்டிருப்பது அது. வழக்கமான தமிழ்த் திரைப்படங்கள் அவதாரக் கதைகளையே சொல்லிக்கொண்டிருப்பதால், அதில் இடம்பெறும் வன்முறைக் காட்சிகள் அந்த அவதாரங்களின் சகலகலா வல்லமையைப் பறைசாற்றுவதுபோலவே திட்டமிடப்படுகின்றன. இது வன்முறையைக் கொண்டாடும் ஒரு மலினமான செயற்பாடு. இந்த வழிமுறை, ஒடுக்கப்பட்ட அரசியல் படங்களில் பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றன.

ஏன்? ஏனென்றால், ஒடுக்கப்பட்டோரின் வன்முறை என்பது சாகசம் அல்ல. அது உயிர் வாழ்வதற்காகச் செய்யப்படும் கடைசி யத்தனம். அவர்கள் அவதார புருசர்களைப் போல அந்த வன்முறைக்குப் பழகியவர்கள் இல்லை.

அதனால், தப்பும் தவறுமாகவே வன்முறையைப் பயன்படுத்துகிறார்கள். 'வெக்கை' நாவல் முழுக்க, அந்தச் சிறுவன் தான் பயன்படுத்த நினைத்த வன்முறை தவறாகப்போனதே என்று குமைந்துகொண்டே இருக்கிறான். அவன் எதிரியின் வலது கையைத் துண்டித்து, ஒற்றைக் கையுடன் நடமாடுவதைப் பார்க்க விரும்பியவன்.

ஆனால், தவறுதலாக எதிரி இறந்துபோனதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இரக்கப்படுகிறான் என்று தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். தான் வழங்க விரும்பிய தண்டனையை அனுபவிக்காமல் எதிரி இறந்துபோனானே என்பதுதான் அவனுடைய வருத்தம். இதுதான் ஓர் இலக்கியப் பிரதி ஏற்படுத்தும் சவால். சிறுவனின் இந்த மனநிலையைச் சித்தரிக்கும் திரைமொழி தமிழ் சினிமாவில் இருக்கிறதா? என்று கலைஞர்கள் தங்களுக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும்.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் திரைக்கலைஞர்கள் தீர்வு சொல்வதைப் போல இப்போது சாதிப் பிரச்சினைக்கும் சொல்ல ஆரம்பிக்கிறார்கள். அந்தத் தீர்வு, வழக்கம்போல, ஒடுக்குகிற சாதியை அழித்துவிடுவது என்று வெளிப்படும்போதுதான் அவர்களது அறியாமை சந்தி சிரிக்கிறது. சாதியக் கொடுமைகளுக்கு எதிரான எந்தவொரு வன்முறையும் சினிமாக்களில் செய்வதுபோல ரசித்து ருசித்துச் செய்யப்படுவதல்ல.

**ஒவ்வொரு விடயமும் அரசியல்தான்**

அடுத்த சிக்கல், நீதி போதனை வழங்க விரும்பும் பாரம்பரிய தமிழ் சினிமா மொழி. ஒடுக்கப்பட்டவனை நாயகனாக முன்னெடுப்பதே ஒரு அரசியல் நடவடிக்கை என்றான பின்பு, அந்தப் படத்தில் சொல்லப்படும் ஒவ்வொரு விடயமும் அரசியல்தான், போதனைதான் என்பதைப் படம் எடுப்பவர்கள் உணர வேண்டும். போதனைகளைப் பூடகமாகவே செய்து பழகியிருக்கிறது கலை. அதனால், என்றைக்குமே தீர்வுகளைச் சொல்ல முடிவது இல்லை.

சாதியக் கொடுமைகளை அம்பலப்படுத்தும் சினிமாக்கள் சாதிப் பிரச்சினைக்குத் தீர்வு சொல்லிவிட முடியுமா என்றால், நிச்சயமாய் முடியாது என்றுதான் சொல்ல வேண்டும். பின், கலை என்னதான் செய்ய முடியும்? அது யாரை நோக்கி என்னதான் பேச விரும்புகிறது என்ற கேள்வி எழலாம்.

மிகவும் சிக்கலான சாதி போன்ற பிரச்சினைகளை, எந்தவித நுண்ணுணர்வும் இல்லாமல், பழக்கதோஷத்தால் செய்துகொண்டிருக்கும் வெகுஜனங்களை நோக்கியே ஒரு கலை வடிவம் பேச விரும்புகிறது. அவர்கள் தான்தோன்றித்தனமாய் மரபு, பாரம்பரியம் என்ற பெயரில் செய்துகொண்டிருக்கும் அநாகரீகங்களின் கீழ்மையை அது அவர்களுக்கு உணர்த்த முடியும். அந்த வழக்கங்களின் காரணமாக ஒரு பகுதி மக்கள் எத்தனை தூரம் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட முடியும். இவ்வளவுதான் கலையின் பங்கு. ஆனால், இது நடந்தாலே பெரிய விடயம்.

நன்றி: தி ஹிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கு திசையில் இருந்து....



அனார்கலி




## நான்கு நிலையங்கள்

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் அம்பாறை மாவட்டத்தில் நான்கு பிரதேச முறைப்பாட்டு நிலையங்கள் தேர்தல் திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் விதிமுறை மீறல்கள், பொதுச் சொத்துக்கள் பயன்பாடு, அரசியல் தலையீடுகள் போன்றவை தொடர்பான முறைப்பாடுகளை இந்த நிலையங்களில் செய்யலாமெனத் தெரிய வருகின்றது.

இதன்படி பிரதேச செயலகப் பிரிவுகளை இணைத்து இந்த மாவட்டத்தில் கல்முனை, அட்டாளைச்சேனை, அம்பாறை, பதியதளாவ ஆகிய இடங்களில் குறித்த பிரதேச முறைப்பாட்டு நிலையங்கள் இயங்கத் தொடங்கியுள்ளன.

**முறைப்பாடுகளுக்குப் பஞ்சமே இல்லையாம்!**

## பொலிஸார் தடை



அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்ட செயலணி நடத்த ஏற்பாடு செய்த நில உரிமைக்கான பொறுப்புக்கூறல் ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வு இறுதி நேரத்தில் பொலிஸாரால் தடை செய்யப்பட்டது.

அட்டாளைச்சேனை - மீனோடைக்கட்டு அல் சக்கி மண்டபத்தில் நடைபெற விருந்த இந்த நிகழ்வு தேர்தல் சட்டத்துக்கு முரணானதாக அமையுமென்ற மாவட்டத் தேர்தல் அலுவலகத்தின் பணிப்புரைக்கு அமையவே பொலிஸார் நிகழ்வுக்கு தடை விதித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வு நடைபெறுமென எதிர்பார்த்து வந்த காணி இழந்த நூற்றுக் கணக்கான ஆண்களும், பெண்களும் இதனால் பெரும் அல்லோலகல்லோலத்துக்குள்ளாகினர்.

**4 ஆயிரத்து 652 குடும்பங்களின் 14 ஆயிரத்து 127 ஏக்கர் காணிகள் பறிபோன பரிதாபத்தின் ஓர் அங்கம் இது!**

## விழிப்புணர்வு!



இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் சொண்ட் நிறுவனம், அம்பாறை மாவட்ட நல்லிணக்கக் குழுவுடன் இணைந்து அரச தலைவர் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு ஒன்றை இந்த மாத இறுதியில் நடத்தவிருக்கின்றது.

சொண்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ச. செந்துராசா தலைமையில் மாவட்ட நல்லிணக்கக் குழுவின ரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் செயலமர்வை நடத்துவதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க, முதியோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரதேச அமைப்புகளின் முக்கிய உறுப்பினர்கள் செயலமர்வில் பங்குபற்ற அழைக்கப்படவுள்ளனர்.

வாக்களிப்புமுறை, தேர்தல் சட்டங்கள், விதிமீறல்கள் போன்றவை பற்றிய அறிவுட்டல்கள் செயலமர்வில் இடம்பெறவுள்ளன.

**பொருத்தமான செயலமர்வுதான்**

## தரையில் அமர்ந்தார் பைஸர்

அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டில் நடைபெறவிருந்து தடை செய்யப்பட்ட காணி உரிமைகளுக்கான செயலணியின் நிகழ்வில் அவர்களது அழைப்பின் பேரில் கொழும்பிலிருந்து வருகை தந்த முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பைஸர் முஸ்தபா, நிகழ்வு மண்டபம் பூட்டப்பட்ட நிலையில் மீனோடைக்கட்டு பிரதான வீதியின் மருங்கில் வெறுமனே தரையில் அமர்ந்து காணி இழந்த மக்களை அழைத்து பிரச்சினைகளை கேட்டறிந்தார். நான் எனக்காகவோ, வேறு எவருக்குமோ வாக்கு கேட்கவோ திரட்டவோ வரவில்லை. காணிகள் அபகரிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து என்னால் முடிந்த உதவியைச் செய்யவே வந்தேன்" என ஆரம்பத்திலேயே திரண்ட மக்களிடம் கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் பைஸரின் பெருந்தன்மையைப் பலரும் வெகுவாகப் பாராட்டினர்.

**ஆசனங்கள் கொடுத்தும் அசமந்தப் போக்கிலிருக்கும் உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு மத்தியில் பைஸர் உதாரண புருஸர்தான்.**

## பதில் பணிப்பாளர்

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக மருத்துவர் ஜி.சுகுணன் பதவியேற்றுள்ளார். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த மருத்துவர் ஏ.எல்.அலாவுதீன் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பதவி உயர்வுடன் பதவியேற்றுள்ளதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே மருத்துவர் சுகுணன் பதில் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமது சேவையின் திறனைக் களுவாஞ்சிக் குடி மருத்துவமனையின் வெளிப்படுத்தியவர் மருத்துவர் சுகுணன்.

**பொருத்தமான பதவிக்குப் 'பொருத்தமானவர்.**

## பறக்கிறார் மேயர்

கல்முனை மாநகர முதல்வர் மூத்த சட்டத்தரணி ஏ.எம்.றகீப், நகர திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பயிற்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காகக் கொரிய நாட்டுக்குப் பயணமாகியுள்ளார்.

இன்று 20ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 29ஆம் திகதிவரை கொரியாவின் கெங்வான் நகரில் அமைந்துள்ள பன்னாட்டு நகர திட்டமிடல் பயிற்சி நிறுவனத்தில் குறித்த பயிற்சி மாநாடு நடைபெறுகின்றது. இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரே ஒருவர் முதல்வர் றகீப் ஆவார்.

**தகுதி அடிப்படையில் இந்தத் தெரிவாம்!**



## விதைப்பு மும்முரம்

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கைக்கான விதைப்பு வேலைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. முற்றிலும் மழையை நம்பியே முன்னெடுக்கப்படும் இந்தப் பெரும்போக விதைப்பு வேலைகள் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவு செய்யப்பட வேண்டுமென விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தின் நீர்ப்பாசனத்துக்கான சேனநாயக்க சமுத்திரத்தில் நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலேயே மழையை நம்பிய நெற்செய்கை முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**வர்ணபகவான் அருள்பாலிப்பாராக!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்



■ தாஸ் மாஸ்ரர்

"2008 ஆம் ஆண்டு தான் வெளியே போக முடியும். வெறும் ஆளாக வெளியில் போய்க் கூலி வேலை செய்து உழைத்து முன்னேற முடியாது. மீண்டும் கொள்ளை அடிப்பதுதான் எனக்குள்ள ஒரே வழி" என்றார் அவர். 20 வருடச் சிறை வாழ்வின் துயரத்தைச் சிறைக்குள் அடைக்கப்பட்ட காலநீடிப்புச் சூழலுக்கு இசைவாக்கமடைந்ததால் மாறிவிட்ட மனிதன் அவர். இவ்வாறான கைதிகள் விடுதலையாகி வெளியே போகும் போது அவருக்கு வாழ்வதற்குத் தேவையான ஒழுங்குகளை அரசு செய்து கொடுக்க வேண்டியது மிக மிக அவசியமானது. இதற்கு இவர் ஒருவர் கூறிய கருத்தைச் சான்றாகக் கொள்ளலாம். 20 வருடங்கள் சிறையில் இருந்து விட்டுச் சமூகத்துக்குள் போகும் போது அவனை உறவுக்காரர் புறமொதுக்குவதற்கு வாய்ப்புண்டு என்பதையும் கவனித்தாக வேண்டும்.

போகம்பரையைப் பொறுத்தவரை கைதிகளுக்குள் இருக்கின்ற துன்பத்தை விடச் சக கைதிகளின் வாழ்க்கை பற்றி அவர்கள் குறிப்பிடுகின்றபோது அதைக் கேட்டு வேதனைப்படுவதுதான் அதிகம். மற்றைய கைதிகளுடன் கதைக்காமல் இருக்கவும் முடியாது. அதேவேளை அவர்கள் கூறும் கதைகளைக் கேட்டுக் கவலைப்படாமலும் இருக்க முடியாது.

☆ ☆ ☆ ☆

சிறைக்கதவு திறக்கும் சத்தம் தூரத்தில்
எங்கள் கதவும் திறந்தாயிற்று
வெள்ளையாயிருந்து
பழுப்பேறிப் போன அந்த
ஆடைகளுடன்
அறுபதுக்கும் மேற்பட்ட
அசையும் உருவங்கள் வெளியில் வந்தன
ஆங்காங்கே நடக்கிறார்கள்
தகாத வார்த்தை கதைக்கிறார்கள்
'லோக்கல்' புகைக்கிறர்கள்
முகங்களோ
சோகம், அழுத்தங்களால் நிரப்பப்பட்டு
விறைத்துப் போயிருந்தன
பார்ப்போருக்கு சாவுப் பயம் வரும்

என்றோ ஒரு நாள்
ஒரு கணப் பொழுதில்
பொங்கி எழுந்த காம உணர்வால்
பெற்ற தாயை
உடல் இச்சைக்குட்படுத்திய
மனிதன் அவன்
தங்கையை வன்புணர்ந்தவன்
சொத்துக்காகக் கொலை செய்தோர்

இப்படிப் பல முறைகேடுகளுக்காக
தூக்குத் தண்டனையை விருதாகப் பெற்றவர்கள்
கணப் பொழுது ஆசைகள்,
இன்றோ தொடர் துன்பம்

இருபத்துமூன்று மணிநேரம் பூட்டப்பட்ட
அந்த அறைக்குள்
அழுந்தி அழுந்தி
அழுவோரும் உண்டு
எமக்கு மட்டும்தான் அவர்கள்
காட்சிப்பொருள்கள்
வாழ்க்கை பற்றிச் சிந்திக்க இனி
அவர்களுக்கு அவகாசம் இல்லை
நிச்சயிக்கப்பட்ட சாவுக்குத்
தயாராக வேண்டும்
தூக்குத் தீர்க்கப்பட்ட பின்பும்
நம்பிக்கையுடன் நாளைத் தொடங்குவது
மேலும் ஒரு நாளையாவது
வாழ்ந்துவிட வேண்டுமென
அவர்கள் நினைப்பது ஆச்சரியம்தான்
வாழ்க்கை எவ்வளவு வலியது...?

(23.3.2002 போகம்பரை)

தூக்குத் தண்டனைக் கைதிகளைச் சிறை அறைக்குள் தனியாகவே வைத்திருப்பார்கள். ஏனெனில் அவர்கள் அதி உயர்வான மன அழுத்தத்தைக் கொண்டிருப்பதால் மற்றவர்களுடன் முரண்படுவது, சண்டை பிடிப்பதில் அதிகம் ஈடுபடுவர். அது கொலை செய்வதில் கூட போய் முடியும். இவற்றைத் தவிர்ப்பதற்காக ஓர் அறையில் ஒருவரை மட்டுமே அடைத்து வைத்திருப்பார்கள். போகம்பரையில் இருந்த தமிழ் அரசியல் கைதிகள் மீது கட்டுநாயக்கா வானூர்தி நிலையத் தாக்குதலுக்குப் பின்னர் பல்வேறு புறக்கணிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. இது பற்றி மேலதிகாரிகளுக்கு முறையிடுவதால் எந்தப் பயனும் ஏற்படுவதில்லை. ஏனெனில் அவர்களும் சிங்கள அதிகாரிகளே. அதேவேளை அரசின் சேவகர்களும் கூட. உரிமை என்ற போர்வையில் இந்த நாட்டின் இயல்புச் சூழலைத் தமிழர்கள் குழப்புகிறார்கள் என்பது தெளிவாகவே அவர்கள் எல்லோர் மனதிலும் படிந்திருந்தது.




இதில் நாம் கற்றுகொள்ள வேண்டியவை நிறைய உண்டு. அதில் ஒன்று அவர்களிடம் சலுகைகளை எதிர்பார்க்கக் கூடாது என்பதாகும்.

ஒரு தனி மனிதன் சட்டத்தை மீறி மனிதாபிமானதாக நடந்து கொள்ளும்போது அவனுடன் நல்ல முறையில் பழக வேண்டிய பொறுப்பு எமக்கும் உண்டு. அந்தச் சிறிய நல்ல சந்தர்ப்பங்களை உதாசீனம் செய்தால் இறுதியில் அதுவே ஒரு ஒட்டுமொத்த எதிர்ப்புணர்வாக ஆகி விட வாய்ப்புண்டு. அவ்வாறான உறவுகளைத் தனி மனித உறவுகளாகப் பேண முடியுமே தவிர அதை ஒரு சமூக உணர்வாக எண்ணி விட முடியாது.

☆ ☆ ☆ ☆

பூஸாவிலிருந்து பதுளைக்குப் போகும் சிறைச்சாலைப் பேருந்தில் 25.8.2001 அன்று கண்டி வழக்குக்காரர்களைக் கொண்டு வந்தார்கள். போகம்பரையிலிருந்து பூஸா போக விருப்பவர்களையும் அந்தப் பேருந்தில் பதுளைக்குக் கொண்டு போய் அங்கிருந்து பூஸாவுக்குக் கொண்டு போவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. பூஸாவுக்குப் போகவிருப்பவர்களுக்கு ஆயத்தமாகுமாறு பணிக்கப்பட்டது. நாங்கள் தயாரானோம்.

(தொடரும்)

---

■ அபிராஜன் அன்ரனிபீற்றர்

## வாக்குரிமை உந்தன் சுதந்திரம்

கட்சிகளில் இல்லை சுதந்திரம்
கௌதமர்க்கும் இல்லை சுதந்திரம்
விகாரைக்கும் இல்லை சுதந்திரம்
விலைக்கு வாங்கிடலாமா சுதந்திரம்?

சிங்களப் பௌத்தமே சுதந்திரம்
சிறுபான்மைக் கேது சுதந்திரம்
அடுத்தவர்க்கு கொடுக்காத சுதந்திரம்
ஆட்சியில் நிலைத்திடுமா சுதந்திரம்?

இனவாதம் பேசுவது சுதந்திரம்
இல்லாது அழிப்பது சுதந்திரம்
மதவாதம் காட்டுவது சுதந்திரம்
மனிதனை அழிப்பதிலா சுதந்திரம்?

படித்தவர்க்கே புரியவில்லை சுதந்திரம்?
பாமரர்க்கு கிடைத்திடுமா சுதந்திரம்
நடிப்பதனால் வந்திடுமா சுதந்திரம்
நாட்டினிலே உண்டா சுதந்திரம்?

தேர்தல் காலத்திலே சுதந்திரம்
தேடி வந்து கும்பிடுவதா சுதந்திரம்
நேர்மை தவறியதா சுதந்திரம்?
நேரத்துக்கொரு பேச்சா சுதந்திரம்

வாக்குரிமை உந்தன் சுதந்திரம்
வாக்களிக்கக் கூடாதென்பது தந்திரம்
பெரும்பான்மை என்பது மந்திரம்
சிறுபான்மை இல்லையெனில் அந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மொழிகள்

எளிமையும் தூய்மையும் ஒருவனை உயர்ந்த மனிதனாக உயர்த்துகின்றன.
கெம்பில்.

அன்பைப் பகிர்ந்து கொள்வது வாழ்க்கையில் மிகப் பெரிய சந்தோசம்.
ஸ்டேபிள்.

சிறப்பான வழியைத் தேர்வு செய்யுங்கள். அது நீங்கள் பெற விரும்பியதைப் பெற்றுத் தரும்.
ஷீல்லர்.

பாமர மக்களின் நிலையே ஒரு சமுதாயத்தின் உண்மை நிலையாகும்.
வில்லியம் தர்ஸ்டன்.

உதவியின் மதிப்பு என்பது உதவுகின்றவன் மதிப்பளவே ஆகும்.
டென்னிசன்.

அநீதியானது மனிதர்களிடையே சச்சரவுகளை விளைவிக்கிறது. நீதியோ தோழமையை வளர்க்கிறது.
பிளாட்டோ.

அறிவுள்ளவன் தன் செல்வத்தை மூளையில் வைத்திருக்க வேண்டும். தன் இதயத்தில் வைத்திருக்கக் கூடாது.
ஜோதைன்ஸ்வீப்ட்.

உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமானால் யாருக்காகவும் காத்திருக்காதீர்கள். நேரத்தை வீணாக்காதீர்கள்.
ராபர்ட் ஷீல்லர்.

சட்டங்கள் ஏழைகளைக் கசக்கிப் பிழிகின்றன. பணக்காரர்களே சட்டத்தை ஆட்சி செய்கின்றனர்.
கோல்டுஸ்மித்.

அறிவாளிகள் பணத்துக்கு அடிமையாக இருப்பதால் தம் அறிவை விலை கூறுகின்றனர்.
வினோபாஜி.

வேதனையைச் சகித்துக் கொண்டவனே எப்போதும் வெற்றி பெறுவான்.
பெர்ஸியஸ்.

ஒருவனிடம் அச்சம் கொண்டால், அவனிடம் அன்பு கொள்ள முடியாது.
அரிஸ்டாட்டில்.

ஒருவனுக்கு நீ செய்த உதவிகளை அவனிடம் அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருப்பது அவனைப் பழிப்பது போலாகும்.
டெமாஸ்தனிஸ்.

சோம்பலும் சோர்வு கொண்டு நூறு ஆண்டு வாழ்வதை விட ஒருநாள் பெருமுயற்சியோடு வாழ்வது மேலானது.
புத்தர்.

பொய்க்கல்வி பெருமை பேசும். உண்மை அறிவு தன்னடக்கம் சொல்லும்.
ரஸ்கின்.

'இன்னும் நேரமிருக்கிறது என்று நாம் நினைப்பதுதான்' தான் பிரச்சினை.

படித்ததில் பிடித்தது

திறமைகள் என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது அடக்கத்துடன் இருங்கள்.

புகழ் என்பது மனிதரால் கொடுக்கப்பட்டது நன்றியுடன் இருங்கள்.

அகம்பாவம் என்பது நமக்கு நாமே கொடுத்து கொண்டது எச்சரிக்கையுடன் இருங்கள்!





# நா.முத்துகுமாரின் கவிதையை படமாக்கும் வெற்றிமாறன்



வெற்றிமாறன் இயக்கத்தில் அண்மையில் வெளியான படம் 'அசுரன்'. இதில் தனுஷ், மஞ்சு வாரியர், டிஜே, கென், பசுபதி உள்ளிட்ட பலர் நடித்திருந்தார்கள். இந்தப் படம் வெளியாகி ரசிகர்களிடம் வரவேற்புப் பெற்று வெற்றிகரமாகத் திரையரங்குகளில் ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் இயக்குநர் வெற்றிமாறன் அடுத்த படத்தை எடுக்கத் தயாராகி விட்டார். இதில் நகைச்சுவை நடிகர் பரோட்டா சூரி கதாநாயகனாக நடிக்க இருக்கிறார் என்று செய்திகள் வெளியாகியுள்ளது.

இந்தப் படம் மறைந்த கவிஞர் நா.முத்துகுமாரின் கவிதையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகிறது. சூரியின் அப்பாவித்தனம் கதாநாயகன் பாத்திரத்துக்குப் பொருந்தியதால் தேர்வு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.
















உன்னால் புரிந்துகொள்ள முடியாததைப் பற்றி எந்த விமர்சனமும் செய்யாதே!
பாப் டிலன்

இருப்பதை இல்லாதது போன்றும்
இல்லாததை இருப்பது போன்றும்
காண்பிக்க முனைதலே
அழகுக் கலை.

உதிர்ந்து வந்த சிறகொன்றை கேட்டேன், சாவுதான் விடுதலையா? 'இல்லை... போராட்டம்' என்றது சிறகு!

ஏசி என்பது நாம் இருக்கும் சின்ன அறையை குளிராகவும், இந்த பெரிய பூமியை சூடாகவும் மாற்றுகிறது...

வாழ்க்கைல நிம்மதி இல்லன்னா, கொசு கடிச்சாக் கூட அணுகுண்டு விழுந்தா மாதிரிதான் இருக்கும்!

நினைப்பதற்கும் முடிப்பதற்கும் உள்ள கால இடைவெளியே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கிறது!

## வாழ்க்கை தரும் பாடம்

எதுவும் சில காலம்தான்
சிந்தனை செய் கோபப்படாதே

எதிர்பார்ப்பைக் குறைத்துக் கொண்டால்
ஏமாற்றம் ஒன்றும் பெரிதாக தெரியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

**20.10.2019 முதல் 26.10.2019 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

செவ்வாய், சூரியன், ராகு, சந்திரன் அதிர்ஷ்ட பலன்களை தருவர். தாய் வழி உறவினர் அன்பு, பாசத்துடன் உதவுவர். குடும்ப தேவை தாராள பண செலவில் நிறைவேறும். வீடு, வாகனத்தில் விரும்பிய மாற்றம் செய்வீர்கள். புத்திரர் நண்பர்களின் உதவியால் முன்னேற்றம் காண்பர். நோய் தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியம் கூடும். மனைவியின் ஆர்வமிகு செயல் குளறுபடியாகலாம். தொழில், வியா பாரத்தில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர்.

## இடபம்

சந்திரன், புதன், குரு அளப்பரிய நற்பலன் வழங்குவர். தெளிந்த சிந்தனையுடன் பணிபுரிவீர்கள். பண வரவும் நன்மையும் அதிகரிக்கும். உடன் பிறந்தவர்கள் அதிக அன்பு, பாசம் கொள்வர். புத்திரர் படிப்பு, வேலை திறனில் மேம்படுவர். பூர்வ சொத்தில் பணவரவு அதிகரிக்கும். நோய் தொந்தரவு விலகும். மனைவி கருத்திணக்கம் கொள்வார். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். தொழில், வியாபாரம் புதியவர்களின் ஆதரவில் செழித்து வளரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். மாண வர்கள் படிப்பு தவிர பிற விவாதம் பேச வேண்டாம்.

## மிதுனம்

சந்திரன், சுக்கிரன் அனுகூல பலன் தருவர்.நண்பரின்ஆலோசனைமன குழப்பம் தீர உதவும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர் பெற்றோர் சொல்லைவேதமெனகருதுவர். உடல்ஆரோக்கியம்பலம்பெறசத்தானஉணவுஉண்டுமகிழ்வீர்கள். பண கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவி வழிசார்ந்தஉறவினர்கள்அதிகஅன்புபாராட்டுவர். குடும்ப தேவை பெருமளவில் பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில் பண வரவு அளவுடன்இருக்கும். மாணவர்கள்படிப்புதவிர பிறவிவாதம்பேசவேண்டாம்.

## கடகம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளன. சமூகத்தில் பெற்ற நற்பெயரை பாதுகாத்திடுவீர்கள். உடன் பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். குடும்பதேவைஓரளவுநிறைவேறும். புத்திரர்படிப்பு, வேலையில் முன்னேற நல்ல ஆலோசனை சொல்வீர்கள். மனைவியின் அன்பு, பாசம் நெகிழ்ச்சியை தரும். விருந்து, விழாவில்கலந்துகொள்வீர்கள். தொழில், வியாபாரம்செழிக்கபுதியவழிபிறக்கும்.பணியாளர்கள் எளிதாக பணி இலக்கு நிறைவேற்றுவர். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். பெண்கள் விரும்பிய பொருட்கள் வாங்கி மகிழ்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

## சிங்கம்

ராகு, சுக்கிரன், சந்திரன் வியத்தகு நற்பலன்வழங்குவர். பழகுபவர்களிடம் இதமாக பேசுவீர்கள். சமூக நிகழ்வு புதிய அனுபவம் தரும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். புத்திரரின் ஆர்வமிகு செயல்களை இதமாக சரி செய்ய வேண்டும். பூர்வ சொத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். மனைவியின் கருத்துகளை ஏற்று கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சி கூடும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் நன்மதிப்பு பெறுவர். பெண்களுக்குதாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற புதிய பயிற்சி பின்பற்றுவர்..

## கன்னி

சுக்கிரன், சந்திரன் மட்டுமே ஓரளவு நற்பலன் தருவர். செயல்களில் புதிய பரிமளிப்பு ஏற்படும். சமூக பணியில் ஈடுபாடு கொள்வீர்கள். வெளியூர் பயணம் அதிகரிக்கும். புத்திரர் படிப்பு, வேலையில் முன்னேற்றம் பெறுவர். பகைவரால் உருவான தொல்லை விலகும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி கருத்திணக்கம் கொள்வார். தொழிலில் போட்டியை சமாளித்து முன்னேற்றம் பெறுவீர்கள். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்று கொள்வர். பெண்கள் பண செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர் உதவுவர்.

## துலாம்

கேது, குரு, சுக்கிரன், சனீஸ்வரர் அதிர்ஷ்டகரமான பலன் வழங்குவர். மனதில் ஆன்மிக சிந்தனை வளரும். தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். புதிய அணுகுமுறையால் பணிகளை நிறைவேற்றுவீர்கள். சிலர் புதிய வீடு, பணியிடம் மாறுவர். புத்திரர் படிப்பு வேலையில் சிறப்பிடம் பெறுவர். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். மனைவியின் நற்செயல் குடும்பத்தில் ஒற்றுமையை வளர்க்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாய பண வரவு கிடைக்கும். பணியாளர்கள் பணியிலக்கை எளிதில் நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்..

## விருச்சிகம்

சுக்கிரன், சூரியன், செவ்வாய், சந்திரனால் அளப்பரிய நன்மை கிடைக்கும். பணியில் இருந்த குறுக்கீடு விலகும். உடன் பிறந்தவர் அதிக அன்பு பாராட்டுவர். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர் படிப்புடன் பொது அறிவு விஷயங்களும் அறிந்து கொள்வர். மனைவியின் அன்பு, பாசம் மனதில் உத்வேகம் தரும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற பெரிய அளவில் உதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு முன்னேற்றமான வாழ்க்கை முறை உருவாகும். பெண்கள் தாய் வீட்டுக்கு உதவுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து பரிசு, பாராட்டு பெறுவர்.

## தனுசு

சுக்கிரன், புதன், சூரியன், சந்திரனால் சுப பலன் உண்டாகும். நண்பரின் உதவி மனதில் நம்பிக்கையை வளர்க்கும். தாய் வழி உறவினர்களின் செயல், புரியாத புதிர் போல இருக்கும். பூர்வ சொத்தில் ஓரளவு பணவரவு கிடைக்கும். புத்திரர் பெற்றோரின் எண்ணங்களை உணர்ந்து நடந்து கொள்வர். உடல் ஆரோக்கியம் மேம்பட சத்தான உணவும், சீரான ஓய்வும் அவசியம். மனைவியின் ஆலோசனை குடும்பத்தின் எதிர் கால நலனுக்கு உதவும். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு அவசியம். பணியாளர்கள் சிறப்பாக பணி புரிந்து நற்பெயர் பெறுவர். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் வேண்டும்.

## மகரம்

புதன், குரு, ராகு, சந்திரன் ராஜயோக பலன் தருவர். மனதில் கலை ரசனை அதிகரிக்கும். பணிகளில் புதிய பரிமளிப்பு ஏற்படும். புத்திரரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். எதிர் மனப்பாங்கு உள்ளவரும் நல் அன்பு பாராட்டுவர். உறவினர்களின் வருகை வீட்டில் மகிழ்ச்சியை தரும். மனைவியின் நல்ல பணிகளை பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் தொழில் நுட்பம் அறிந்து எளிதாக பணிபுரிவர். பெண்கள் நேரத்தின் அருமையை உணர்ந்து செயல்படுவர். மாணவர்கள் படிப்பில் லட்சிய மனதுடன் ஈடுபடுவர். மாணவர்கள் நன்கு படித்து பரிசு பெறுவர்.

## கும்பம்

சுக்கிரன், கேது, சந்திரன், சனீஸ்வரரால் நன்மை வந்து சேரும். சமூக நிகழ்வுகள் மகிழ்ச்சி தரும். வாழ்வில் முன்னேற புதிய வாய்ப்பு உருவாகும். தாராள பண செலவில் குடும்ப தேவை பூர்த்தியாகும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். புத்திரரின் செயல் சிறப்பாக அமைந்திடும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் பேச்சும் செயலும் மகிழ்ச்சியை தரும். உறவினர்கள் மதிப்பு, மரியாதை தருவர். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள் நிர்வா கத்தின் சட்ட திட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

## மீனம்

குரு, சுக்கிரன், புதன், சந்திரன் வியத்தகு அளவில் நற்பலன் வழங்குவர். தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். வாகனத்தின் பயன்பாடு திருப்திகரமாகும். புத்திரர் அறிவாற்றல், செயல் திறனில் மேம்படுவர். பண கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். ஆரோக்கியம் உணர்ந்து விருந்தில் பங்கேற்கலாம். மனைவியின் யோகத்தினால் குடும்பத்திற்கு சில நன்மை வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து வளர்ச்சியை ஏற்படுத்தும். பணியாளர்கள் கடமையுணர்வுடன் பணி புரிவர். பெண்கள் நற்செயல்களால் பெருமை சேர்த்திடுவர். மாணவர்கள் ஞாபக திறன் வளர்த்து படிப்பில் முன்னேறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களைச் சுற்றி ஏற்படும் கருவளையத்தை போக்கும் வழிகள்



கண்களைச் சுற்றி ஏற்படும் கருவளையம் அழகை முற்றிலும் பாதிக்கும். தூக்கம் குறைவாக இருந்தாலே கருவளையம் ஏற்படும். அதிகமான கணினி பயன்பாடும் கருவளையம் தோன்ற காரணமாகும்.

வெள்ளரிச்சாறும், பன்னீரும் சம அளவில் கலந்து, கண்களைச் சுற்றிலும் தடவி, மசாஜ் செய்யலாம். மேலும் வெள்ளரிக்காயை வட்டமாக நறுக்கி கண்களின் மீது வைத்து சிறிது நேரம் ஓய்வாக உறங்குவது கண்களின் கருவளையத்தைப் போக்கும்.

தூங்கப் போகுமுன் கண்களின் கீழ் ஓலிவ் ஆயில் தடவலாம்.

வெண்ணெய்யுடன் கொத்தமல்லிச்சாறு கலந்து கண்களுக்கு பேக் போடலாம். சந்தனம் மற்றும் ஜாதிக்காயை இழைத்து, கண்களைச் சுற்றிலும் பூசலாம்.


ஊற வைத்த பாதாமை பாலுடன் சேர்த்து மை போல அரைத்து,கண்களைச் சுற்றிலும் பேக் போடலாம். தினமும் உருளைக் கிழங்கைத் துருவி சாறு எடுத்துப் பூசிக் காயவிட்டு கழுவவேண்டும்.

தேனில் திருநீறைக் குழைத்து, கருவளையத்தின்மீது தடவி, 10 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவலாம். தோல் நீக்கிய தக்காளி விழுது, விதை நீக்கிய கறுப்புத் திராட்சை விழுது இவற்றைக் கண்களின் மீது பூசலாம்.

பப்பாளியின் சதைப் பகுதியை பாலாடையுடன் சேர்த்து மசித்து முகம், கழுத்துப் பகுதிகளில் பூசி, 20 நிமிடங்கள் கழித்துக் கழுவலாம்.

உணவில் கீரை வகைகளைச் சேர்க்கவேண்டும். விற்றமின் எண்ணெய் வைத்து கண்ணைச் சுற்றி மசாஜ் செய்வதும் கருவளையத்தைப் போக்கும். மேலும் 7 மணி நேரம் தூக்கம் அவசியம்.

# உடலில் உள்ள கொழுப்பைக் கரைக்க உதவும் உணவுகள்



உடல் எடை அதிகரித்தால் அதைக் குறைக்க முடியாமல் ஜிம், உடற்பயிற்சி, உணவில் கட்டுப்பாடு என்று கஷ்டப்பட்டு வருபவர்கள் ஏராளம். அன்றாடம் சரியாக உணவு உண்டு வந்தாலே அதிக உடல் எடையானது குறைந்து விடுவதோடு ஆரோக்கியமாகவும் வாழலாம். அதிக எடை, குறிப்பாக கொழுப்பு கூடாமல் தடுக்கும் சில உணவுகள்

**மஞ்சள்**
மஞ்சளானது ஒரு சிறந்த மருத்துவ குணம் வாய்ந்த பொருள் என்பது அனைவருக்கும் தெரியும். அத்தகைய மஞ்சளை தினமும் உணவில் சேர்த்து வந்தால், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளைக் கரைத்து, அதிக குருதி அழுத்தம் ஏற்படாமல் தடுக்கும். குருதிச் சுழற்சியானது நன்கு நடைபெற்று, இதய நோய் ஏற்படாமலும் இருக்கும்.

**ஏலக்காய்**
இது ஒரு சிறந்த உணவுப் பொருள். இதை உண்டால் உடலில் உள்ள உடல் செயலியல் மாற்றம் அதிகரிப்பதோடு, உடலில் உள்ள கொழுப்புகளைக் கரைத்து விடும். மேலும் இது ஒரு சிறந்த செரிமானப் பொருள். ஆகவே எந்த உணவு உண்டாலும், அதே நன்றாக சமிபாடடைந்து விடும். ஆகவே ஏலக்காயை தினமும் உணவுப் பொருள்களில் சேர்த்தால், உடல் எடை குறையும்.

**மிளகாய்**
உணவில் சேர்க்கப்படும் மிளகாய் கூட கொழுப்புகளைக் கரைத்துவிடும் தன்மையுடையது. மேலும் இதில் உள்ள 'கேப்சைசின்', உடல் செயலியல் மாற்றத்தை அதிகரிக்கச் செய்யும். கேப்சைசின் என்பது வெப்ப ஊட்ட பொருள். அது இருக்கும் உணவுப் பொருளை உண்பதால், உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளைக் கரைத்து விடும்.

**கறிவேப்பிலை**
கறிவேப்பிலை உடலில் இருக்கும் கொழுப்பு மற்றும் நச்சுப்பொருள்களை உடலில் தங்க விடாமல் வெளியேற்றும். மேலும் அதிக எடை இருப்பவர்கள், தினமும் 8 முதல் 10 கறிவேப்பிலையை வெறும் வாயில் உண்டால் நல்லது. இல்லையென்றால், கறிவேப்பிலையை அரைத்து தண்ணீரில் கரைத்துக் குடிக்க வேண்டும்.

**பூண்டு**
இது ஒரு சிறந்த கொழுப்பைக் கரைக்கும் பொருள். ஏனெனில் இதில் சல்பர் இருக்கிறது. பூண்டில் கிருமிகளை அழிக்கும் பொருளான நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதோடு, தேவையற்ற கொழுப்புகளைக் கரைத்து உடலை விரைவில் 'ஸ்லிம்' ஆக மாற்றும்.


**தேன்**
இது உடல் எடையைக் குறைக்க ஒரு சிறந்த வீட்டு மருந்து. இதனை உண்டால் உடலில் சேரும் கொழுப்புகளைச் சாதாரணமாக உடலில் நடைபெறும் செயல்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும். ஆகவே தினமும் ஒரு மேசைக்கரண்டி தேனை சூடான தண்ணீரில் கலந்து, விடியற்காலையில் குடிக்க வேண்டும்.

**மோர்**
பால் பொருளில் கொழுப்புகள் அதிகமாக இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் மோரில் 2.2 கிராம் கொழுப்பும், 99 கலோரியும் மட்டுமே உள்ளது. ஆகவே இதைப் பருகுவதால் உடலுக்குத் தேவையான அளவு ஊட்டச்சத்துகள் கிடைப்பதோடு, கொழுப்பு மற்றும் கலோரியானது அதிகமாகச் சேராமல் எடையும் சரியான அளவு இருக்கும்

# கோதுமை பீற்றூட் தோசை

**தேவையான பொருள்கள்**
கோதுமை மாவு - 1 கோப்பை
உப்பு - தேவையான அளவு
அரைத்த உளுத்தம் பருப்பு மாவு - கால் கோப்பை
துருவிய பீற்றூட் - கால் கோப்பை
வெங்காயம் - 1
பச்சை மிளகாய் - 3
எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை**




ஒரு பாத்திரத்தில் அரைத்த உளுத்தம் பருப்பு மாவு, உப்பு, கோதுமை மாவு சேர்த்து கலந்து, 8 மணி நேரம் புளிக்க வைக்கவும். வெங்காயம், பச்சை மிளகாயைப் சிறிதாக நறுக்கி கொள்ளவும்.

சட்டியில் எண்ணெய் விட்டு சூடானதும் அதில் வெங்காயம், பச்சை மிளகாய், பீற்றூட் சேர்த்து நன்கு வதக்கவும்.

வதக்கிய பீட்ரூட்டை கலவையை மாவில் சேர்த்து நன்றாக கலக்கிக் கொள்ளவும்.

தோசை கல்லை அடுப்பில் வைத்து சூடானதும் மெல்லிய தோசைகளாக ஊற்றி சுற்றி எண்ணெய் விட்டு, வெந்ததும் திருப்பி போட்டு வேக வைத்து எடுக்கவும். சுவையான சத்தான கோதுமை பீற்றூட் தோசை தயார்.

# பப்பாளியின் ஆரோக்கிய பயன்கள்



அடிக்கடி பப்பாளி பழத்தை உண்டு வருபவர்கள் எவ்வகை நோய்க்கும் ஆளாக நேரிடாது. எந்த வகையான தொற்று நோய் பரவினாலும், அது இவர்களைத் தாக்காது.

குழந்தைகளுக்குப் பப்பாளி பழத்தை உண்ண கொடுப்பதால் அவர்களின் பற்கள் மற்றும் எலும்புகள் உறுதியாகும். கண் பார்வை கோளாறு குறையும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

இதில் போலிக் ஆசிட்(அதிகமாக உள்ளது. ஆகை:பால் குழந்தைகளின் உடல் மற்றும் மூளை வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றது . பெண்கள் இதை உண்பதால் மாத விலக்கு சீராகும்.

ஆண்களின் உயிரணு உற்பத்தி திறனை அதிகரிக்கும். இந்த பழத்தை தினமும் உண்பதால் நரம்பு தளர்ச்சி குறையும். கல்லீரலில் ஏற்படும் பிரச்சினைகளை சரி செய்ய உகந்தது.

காலை உணவில் பப்பாளியை பழமாகவோ அல்லது ஜூஸாகவோ எடுத்துக் கொண்டால் உடல் கழிவுகளை வெளியேற்றும். மலச்சிக்கல் மற்றும் நெஞ்செரிச்சலை தீர்க்கும்.

உடல் எடை அதிகரித்துக் காணப்படுபவர்கள் பப்பாளி பழத்தை காலை உணவாகச் சாப்பிட்டு வந்தால் விரைவில் எடை குறையும்.

4 வாரங்கள் தொடர்ந்து இந்தப்பழத்தை உண்பதால் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் குறையும். இந்தக் காயை சமைத்து உண்பதாலும் உடல் பருமன் குறையும். அதிகமான பருப்பு உணவை உண்ட பிறகு, இரண்டு பப்பாளித்துண்டுகளச் சாப்பிட்டால், நன்றாகச் செரிமானமாகி விடும்.

தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ள ஆய்வுகள் பப்பாளியின் பக்டீரியா எதிர்ப்புத் தன்மையானது காயங்களை ஆற்றவும் அறுவைசிகிச்சையின் பின் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கவும், புற்று நோய் சிகிச்சையின்போது ஏற்படும் தீயபக்க விளைவுகளிலிருந்து விடுபடவும், வாத நோய்களுக்கும் கூட உதவலாம் என்று கண்டுபிடித்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# யோவேல்

## பரந்துபட்ட இறைசிந்தனையின் வெளிப்பாடு

யோவேல் நூல் கி.மு. 9ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என இறையியலாளர்கள் நம்புகின்றனர். 'யோவேல்' என்பதற்கு 'யாவே தான் கடவுள்' என்பது பொருள். யோவேல் இறைவாக்கினரைக் குறித்து விவிலியம் அதிகமாகப் பேசவில்லை. அவர் பெத்துவேல் என்பவரின் மகன் என்பதைத் தவிர. இருவருடைய பெயரிலும் 'கடவுள்' எனும் பொருள் இருக்கிறது. எனவே அவர்கள் ஒரு ஆன்மிகக் குடும்பத்தில் பிறந்திருக்க வாய்ப்பு உண்டு.

**இரண்டாம் வருகை குறித்த எச்சரிக்கை**

'ஆண்டவரின் நாள்' எனும் பதத்தைப் பயன்படுத்திய யோவேல் அதை மிகப்பெரிய எச்சரிக்கையாய் மக்களுக்குக் கொடுத்தார். தீர்ப்பு என்பதும் கடவுளின் நியாயமும் வேற்றின மக்கள் மீதல்ல, இஸ்ரேல் நாட்டின் மீதே விழும் எனும் எச்சரிக்கையை முதன் முதலில் விடுத்தவர் அவர்தான். 'ஆண்டவரின் நாள்' என்பது வெளிச்சத்தின் வரவல்ல, இருளின் வரவு, என அவரது இறைவாக்கு அதிர்ச்சியளிக்கிறது. பல கிறிஸ்தவர்கள் தாங்கள் விண்ணகம் செல்வது சர்வ நிச்சயம் என்றும், எப்படிப்பட்ட பாவ வாழ்க்கை வாழ்ந்தாலும் கடவுள் கை விடமாட்டார் என்றும் நினைக்கின்றனர். அவர்களுக்கு யோவேலின் எச்சரிக்கை என்னவென்றால், 'ஆண்டவரின் நாள்' உங்களுக்கு இருளாய் வரும் என்பதே.

வெட்டுக்கிளிகளால் நாடு அடையப்போகும் அழிவை யோவேல் இறைவாக்கினர் முன்னுரைத்தார். நாட்டில் வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு இருக்கும். உண்பதற்கும் எதுவுமின்றி எல்லாம் அழிக்கப்படும் என்பதே அவரது வார்த்தை. சுமார் 60 கோடி வெட்டுக்கிளிகள், அறுநூற்று நாற்பது கிலோமீற்றர் சதுர பரப்பளவில் விஸ்வரூப வடிவமாய் நாட்டில் நுழைந்தால் ஒரு நாளைக்கு அவை தின்று குவிக்கக்கூடிய தானியங்கள் எண்பதாயிரம் தொன் என்கிறது ஒரு கணக்கு.

> **இயற்கை பேரழிவுகள், இடர்கள் எல்லாமே இறைவன் எமக்கு அனுப்புகின்ற ஒரு செய்தி என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். யோவேல் இறைவாக்கினரின் வெட்டுக்கிளிகள் உவமை இன்னொரு விடயத்தையும் எடுத்துரைக்கிறது. அது பாபிலோனியர்களின் படையெடுப்பு.**

**யோவேலில் வெட்டுக்கிளிகள்**

வெட்டுக்கிளிகள் இறைவனின் தீர்ப்பாய் வருவதை 'விடுதலைப்பயணம்' நூலில் மோசேயின் வாழ்க்கையில் வாசிக்கலாம். இறைவன் அனுப்பிய பத்து வாதைகளில் எட்டாவது வாதை வெட்டுக்கிளிகள் என்பது குறிப்பிடத்தக்கது.



இயற்கையாகவே நடக்க சாத்தியமுள்ள விடயங்கள் இயற்கைக்கு மாறான அளவுக்கு விஸ்வரூபமாக நடக்கும் போது இறைவனின் கரம் அதில் இருப்பதை நாம் உணர முடியும். இந்த வெட்டுக்கிளிகளின் வருகையும் அப்படிப்பட்டதே.

இயற்கை பேரழிவுகள், இடர்கள் எல்லாமே இறைவன் எமக்கு அனுப்புகின்ற ஒரு செய்தி என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

யோவேல் இறைவாக்கினரின் வெட்டுக்கிளிகள் உவமை இன்னொரு விடயத்தையும் எடுத்துரைக்கிறது. அது பாபிலோனியர்களின் படையெடுப்பு. வெட்டுக்கிளிகளைப் போல படையெடுத்து வருகின்ற வீரர்களை யோவேல் பதிவு செய்கிறார். பாபிலோனியர்களின் படையெடுப்பு தான் வெட்டுக்கிளிகளைப் போல அனைத்தையும் அழித்து நகர்கிறது. ஒரு குழந்தையோ, ஒரு உயிருள்ள கால் நடையோ கூட தப்பவில்லை என்பது துயரமான வரலாறு.

**மனமாற்றத்தை வலியுறுத்தி யோவேலின் இரண்டாம் பாகம்**

யோவேல் நூலின் இரண்டாம் பாகம், மக்கள் மனம் திரும்ப வேண்டும் எனும் சிந்தனையின் அடிப்படையில் அமைந்துள்ளது. மக்கள் மனம் திரும்பாவிடில் இறைவனின் தண்டனை மிக அதிகமாய் இருக்கும் என்பதை அவரது வார்த்தைகள் எடுத்தியம்புகின்றன.

மக்கள், யோவேலின் இறைவார்த்தைக்குச் செவிமடுத்து மனம் திரும்பவில்லை. அதைவிட, மது அருந்தி மயங்கிக் கிடப்பது நல்லது என சென்று விட்டனர். இப்போது இரண்டாம் முறையாக யோவேல் அழைப்பு விடுக்கிறார்.

'உங்கள் உடைகளையல்ல, இதயங்களைக் கிழித்துக் கொள்ளுங்கள்' என்பது புதிய அறைகூவலாக வருகிறது. வெளிப்படையான அடையாளமல்ல, உள்ளார்ந்த மாற்றமே தேவையானது, என்பதே அதன் பொருள்.

யோவேல் இறைவாக்கினர் மனம் திரும்புதலை மகிழ்ச்சியின் அடையாளமாய்க் கூறுகிறார். இழந்து போனவை திரும்பக் கிடைக்கும் எனும் நம்பிக்கையின் வார்த்தையையும், ஆறுதலின் வார்த்தையையும் தருகிறார்.

'எனது வார்த்தைகளைக் கேட்டு நடந்தால் எல்லாரையும் ஆசீர்வதிப்பேன்' என இறைவன் வாக்களித்தார். 'நான் மாந்தர் யாவர்மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன்; உங்கள் புதல்வரும் புதல்வியரும் இறைவாக்கு உரைப்பர்; உங்கள் முதியோர் கனவுகளையும் உங்கள் இளைஞர்கள் காட்சிகளையும் காண்பார்கள். அந்நாட்களில், உங்கள் பணியாளர், பணிப்பெண்கள் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன்' என்றுரைத்தார் அவர்.

ஆண்டவரின் நாள் எப்படி இருக்கும், அதற்கு என்ன அறிகுறி தெரியும் என்பதைப் பற்றி யோவேல் உரைத்தது மிக முக்கியமானது, 'எங்குமே, ரத்த ஆறாகவும், நெருப்பு மண்டலமாகவும், புகைப்படலமாகவும் இருக்கும். அச்சம் தரும் பெருநாளாகிய ஆண்டவரின் நாள் வருமுன்னே, கதிரவன் இருண்டு போகும்; நிலவோ ரத்தமாக மாறும்' என்றார் அவர்.

மீட்பின் நம்பிக்கையாக அவரது வார்த்தை 'ஆண்டவரின் திருப்பெயரைச்சொல்லி வேண்டுவோர் யாவரும் தப்பிப்பிழைப்பர்' என ஒலிக்கிறது.

யோவேல் நூலிலுள்ள தீர்க்கதரிசனங்களில் சில நிறைவேறிவிட்டன. இயேசுவின் இரண்டாம் வருகை மற்றும் இறுதி நியாயத் தீர்ப்புடன் மற்றவையும் முடிவு பெறும். மிகவும் சுருக்கமான இந்த நூல் மிகவும் பரந்துபட்ட இறை சிந்தனைகளை எமக்குத் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சைக் கயிறு!



முன்னொரு காலத்தில், கீழாநெல்லி என்னும் கிராமத்தில், சுதாகர் என்பவன் வாழ்ந்து வந்தான். பல ஆண்டுகள் அவன் அந்த ஊரை விட்டு வெளியே சென்றதே இல்லை. அன்றுதான் வேலைத் தேடி தலை நகரத்தை அடைந்தான்.

குடிசையையே பார்த்திருந்த சுதாகர், அங்கிருந்த மாட மாளிகைகளைப் பார்த்து திகைப்படைந்தான்.

எல்லா வீதிகளிலும் கூட்டம், கூட்டமாக மக்கள் செல்வதை பார்த்தான். அவன் உள்ளத்தில் அச்சம் புகுந்தது.

"ஐயோ! இந்தக் கூட்டத்தில் நான் தொலைந்து விட்டால் என்ன செய்வேன். தொலைந்து போன என்னை யார் கண்டுபிடித்துத் தருவர்? என்னைத் தெரிந்தவர்கள் யாரும் இங்கு இல்லையே... என்ன செய்வேன்" என்று குழப்பம் அடைந்தான்.

இந்தக் குழப்பத்தில் அவன் எங்கும் சென்று வேலை தேடவில்லை. என்ன செய்வது என சிந்தித்தபடி இருந்தான். அந்த இடத்தை விட்டு அவன் சிறிதும் அசைய வில்லை.

சிந்திக்க, சிந்திக்க அவன் குழப்பம் அதிகமானது. இரவுப் பொழுது வந்தது. வீதியில் கூட்டம் குறைய துவங்கியது.

மக்கள் அதிகம் இல்லை என்பதை அறிந்ததும் அவன் அச்சம் சிறிது குறைந்தது. மெல்ல நடந்த சுதாகர் ஒரு சத்திரத்தை அடைந்தான். அங்கே நிறைய பேர் படுத்திருந்தனர். இரவு இங்கேயே தங்க வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தான்.

இப்போது அவனுக்குப் புதிய குழப்பம் தோன்றியது. "இரவில் தூங்கும் போது நான் தொலைந்து விடுவேனே. விழித்ததும் என்னை யார் கண்டுபிடித்துத் தருவர்? தொலைந்து போன என்னைக் கண்டுபிடிக்க ஏதேனும் வழி உள்ளதா?" என்று சிந்தித்தான்.

சத்திரத்துக்காரரிடம் சென்று தன் குழப்பத்தை சொன்னான்.

"நான் தொலைந்து போனால் என்னைக் கண்டுபிடிக்க நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும்," என்றான்.

"இவன் சரியான முட்டாளாக இருக்கிறானே... இவனுக்கு எதையும் புரிய வைக்க முடியாது" என்று நினைத்த சத்திரக்காரர். "இப்படித் தொலைந்து போகிறவர்களைக் கண்டு பிடிக்க இங்கே எளிய வழி உள்ளது," என்றார்.

"என்ன வழி? சொல்லுங்கள்" என்று ஆர்வத்துடன் கேட்டான் சுதாகர்.

பச்சை வண்ணக் கயிறு ஒன்றை அவனிடம் தந்து, "இந்தக் கயிற்றை உன் வலது காலில் கட்டிக் கொண்டு படு. விழித்ததும் உன் காலைப் பார். இந்தக் கயிறு உன் காலில் இருக்குமானால் அது நீதான். நீ எங்கும் தொலைந்து போகவில்லை என்று தெரிந்து கொள்ளலாம்," என்றார்.

"ஐயா! நல்ல வழி கூறினீர். நன்றி," என்ற அவன், அந்தக் கயிற்றைத் தன் காலில் கட்டி கொண்டான். அங்கேயே படுத்து நன்றாகத் தூங்கினான்.

நள்ளிரவில் அங்கு படுக்க வந்தான் இன்னொருவன். சுதாகரின் காலில் கட்டப்பட்டிருந்த கயிற்றைப் பார்த்தான். அந்தக் கயிற்றை அவிழ்ந்து அதைத் தன் காலில் கட்டியவாறு சுதாகரின் அருகில் படுத்துத் தூங்கத் துவங்கினான்.

பொழுது விடிந்தது.

விழித்த சுதாகர் தன் காலைப் பார்த்தான். கயிறு இல்லாததைக் கண்டு, அவன் சுற்றும், முற்றும் பார்த்தான்.

அருகிலிருந்த இன்னொருவன் காலில் அந்தக் கயிறு இருப்பது தெரிந்தது.

"என் காலில் கயிறு இல்லை. நான் தொலைந்து போய் விட்டேன். இவன் காலில் கயிறு உள்ளது. தொலைந்து போன நான் கிடைத்து விட்டேன். நான் சுதாகரா? கயிற்றைக் காலில் கட்டியுள்ள இவன் சுதாகரா? ஒன்றும் புரியவில்லையே" என்று குழம்பினான்.

காலில் கயிற்றுடன் படுத்திருந்த அவனைத் தட்டி எழுப்பினான். தூக்கம் கலைந்ததால் கோபம் கொண்ட அவன், "எதற்காக என்னை எழுப்பினாய்?" என்று கத்தினான்.

"ஐயா! பச்சைக் கயிறு உங்கள் காலில் கட்டப் பட்டு உள்ளது. அப்படியானால் நீங்கள்தான் நான். உங்களுடன் பேசும் நான் யார்? உண்மையைச் சொல்லுங்கள்," என்றான் சுதாகர்.

'ஐயையோ... விளையாட்டுக்கு இவன் காலில் கட்டியிருந்த கயிற்றை கழட்டி நம் காலில் கட்டிக் கொள்ளப் போக, இவன் சரியான பைத்தியம் போலிருக்கே... தேவையில்லாமல் மற்றவர்கள் விஷயத்தில் தலையிட்டதால் வந்த பிரச்னை இது' என நினைத்து அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

# எறும்புகள்



- எறும்புகள் டைனோசர்களின் காலத்தில் இருந்தே இருக்கின்றன, எறும்புகளில் குறிப்பிடத்தக்க பரிமாணம் நடைபெற்று சுமார் 130 மில்லியன் வருடங்கள் ஆகின்றன.
- 10,000 - 12,000 வகையான எறும்புகள் உலகம் பூராவும் வாழ்கின்றன.
- எறும்புகள் தனது எடையை விட 20 50 மடங்கு அதிகமான எடைய தூக்க வல்லன.
- சாதாரணமாக எறும்புகள் 90 நாள்கள் வரை உயிர்வாழும். (பிரிட்டன் ஆய்வுப்படி கறுப்பு பெண் எறும்பு சுமார் 15 ஆண்டுகள் வரை உயிர் வாழும் என அறியப் பட்டது.)
- எறும்புகளுக்குக் காதுகள் இல்லை, நடக்கும்போது ஏற்படும் அதிர்வுகளை வைத்தே உணருகின்றன.
- எறும்புகள் சண்டையிட்டால் ஒரு இறப்பு வரும் வரை சண்டை நடைபெறும்!
- எறும்புகளில் அதிகாரம் உள்ளது ராணி எறும்பாகும்.
- எறும்புகளுக்கு இரண்டு வயிறுகள் உண்டு, ஒன்று அவைக்காகவும் மற்றையது ஏனைய எறும்புகளுக்ககவும்.
- எறும்புகள் எப்போதும் தனித்து வாழாது! கூட்டம் கூட்டமாகவே வாழும்.
- சில எறும்புகள் நீந்தக்கூடியவை, பொதுவாக 24 மணி நீரம் நீருக்கடியில் உயிருடன் வாழும் தகுதி உடையவை.
- வட அமெரிக்காவில் நெருப்பு எறும்புகளால் சுமார் 5 பில்லியன் பெறுமதியான உடமைகள் சேதமாகின்றன.



## ஆலமரம்

ஆல மரமாம் ஆலமரம்
அருமையான ஆலமரம்
காலம் காலமாய் நிழல்தந்து
காத்து வந்திடும் ஆலமரம்!

கூடு கட்ட பறவைகள்
கூடி அங்கே சென்றிடுமாம்
நாடி நாமும் செல்லலாம்
நல்ல காற்று பெற்றிடலாம்!

சிறிய விதையிலிருந்து
சிறப்பாய் பெரிதாய் வளர்ந்துமே
பெரிய படையும் தங்கிட
படர்ந்த நிழலைத் தந்திடுமே!

தளர்ச்சி மரத்தில் தோன்றினால்
தாமாய் விழுதுகள் இறங்கியே
வளர்ச்சி காக்கும் ஆலமரம்
வீழ்ச்சி காணா ஆலமரம்!

ஆல விழுதைப் போலவே
அன்னை தந்தை தளர்ச்சி கண்டு
நாளும் நாமும் காத்திடுவோம்
நல்ல பாடம் கற்றிடுவோம்!



# வர்ணம் தட்டுவோம்

# நோபலை வென்ற சந்திர போஸ்!



தாவரங்களுக்கு உயிர் இருக்கிறது; உணர்ச்சி உண்டு. என்ற தனது கண்டுபிடிப்பை 1907ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற அரசு விஞ்ஞான அவையில் உரையாற்றும் போது தெரிவித்தார் ஜகதீஸ் சந்திர போஸ். ஆனால், அதை விஞ்ஞானிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. சற்றும் மனம் தளராத அவர் மீண்டும் இந்தியா வந்து தனது கூற்றை சரிபார்க்கும் ஆராய்ச்சிகளையே தொடர்ந்தார். இதற்காக நுட்பமான கருவிகளை உருவாக்கினார். மீண்டும் தனது கண்டுபிடிப்பை விளக்குவதற்கு லண்டன் சென்றார். அதை இப்போது விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டனர். அவர் நோபல் பரிசினைப் பெற இந்த வெற்றி காரணமானது.

உண்மையான வெற்றியை உலகம் வெகு நாள்கள் மறைக்க இயலாது. சாதனையாளர்கள் தங்கள் மீதுள்ள நம்பிக்கையால் தொடர்ந்து போராடி தங்களின் கருத்துக்களின் உண்மையை எடுத்தியம்பி அதில் வெற்றியும் பெறுகின்றனர் அவசரப்படுபவர்கள் பாதியிலேயே திரும்பி விடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

442

# நித்திய சுகம்

உடலே கோயில்

# 2030ஆம் ஆண்டளவில் நீர்வெறுப்பற்ற உலகம்

ரேபிஸ் என்பது எம்மவர் மத்தியில் விசர் நாய்க்கடி வியாதியென அறியப்பட்ட ஒரு நோய். தெரு நாய்க்கடியால் ஏற்படும் ரேபிஸ் வைரஸ் பாதிப்பு பற்றிய விழிப்புணர்வையும் எச்சரிக்கையையும் ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் செப்ரெம்பர் 28ஆம் திகதி உலக ரேபிஸ் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. ரேபிஸ் நோய்க்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்த லூயிஸ் பாஸ்டர் இறந்த தினமான செப்ரெம்பர் 28ஆம்திகதிஉலகளாவியநீர்வெறுப்பு கட்டுப்பாட்டு அமைப்பு என்ற தன்னார்வ அமைப்பு. ரேபிஸ் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு வந்தே தீர வேண்டும் என்று முடிவெடுத்து "உலக ரேபிஸ் தினமாக" கடைப்பிடிக்க வலியுறுத்தியது. 2015ஆம் ஆண்டு முதல் ரேபிஸ் தினத்தை கொண்டாடுகின்றனர். 2030க்குள் ரேபிஸ் பாதிப்பினால் இறப்பவர்களின் எண்ணிக்கை பூஜ்ஜியத்தைத் தொட வேண்டும் என்பதுதான் முக்கிய நோக்கம்.

உலகெங்கிலும் சுமார் 3 பில்லியன் மக்கள் ரேபிஸ் தொற்றுக்கு உள்ளாகும் அபாயத்தை எதிர்நோக்குகின்றனர். ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளில் சுமார் 55 ஆயிரம் சாவுகள் ஆண்டுதோறும் பதிவாகியுள்ளன. குறிப்பாக இலங்கையில் ஆண்டுதோறும் 20-30 நோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர்.


**ரேபிஸ் பரவும் விதம்**

ரேபிஸ் மூளையைத் தாக்கும் ஒரு வைரஸின் பெயர். இந்த வைரஸ் ஒரு மிருகத்தைத் தாக்கும்போது அதற்கு ரேபிஸ் பாதிப்பு ஏற்படும். அந்தமிருகம் நம்மைத் தாக்கும் பட்சத்தில் நமக்கும் அது ஏற்படும். நாய் மட்டுமன்றி காட்டுவிலங்குகள் நரி, ஓநாய், குதிரை முதலியவற்றைக்கூட இதுதாக்கும். வீட்டில் வரும் பூனைகளையும் இது தாக்கும் ஆபத்து உள்ளது.

வீட்டில்செல்லப் பிராணிகள் வளர்ப்பவர்கள் அவற்றிடம் ஏதாவது மாற்றம் தெரிந்தால் உடனடியாக கால்நடை மருத்துவரை அணுக வேண்டும். தனிமையில் இருக்கும் குழந்தைகளை நாய், பூனையோடு விளையாட விட்டுச் செல்லவேண்டாம். முறையாக செல்லப் பிராணிகளுக்குத் தடுப்பூசி போடும் பட்சத்தில் பிரச்சினை இல்லை. பாதிக்கப்பட்ட விலங்குகள், எச்சிலை வடித்தபடியும், காலை அடிக்கடி நக்கிக்கொண்டும் இருக்கும். அப்படி ஏதாவது தெரியும் பட்சத்தில் உடனடியாக கால்நடை மருத்துவரை அணுக வேண்டும்.

**ரேபிஸின்**

ரேபிஸ் ஒரு கொடிய வைரஸ் நோய். சாவைத் தேடித்தரும் இந்த நோயை அதிகம் பரப்புவது நாய்களே. இந்த நோயால் பாதிக்கப்பட்ட நாய், மனிதனை கடிப்பதால் மனிதன் பாதிப்புக்கு உள்ளாகிறான். இதன் விளைவு, தனி அறையில், தனிக் கூண்டில் சாவைத் தழுவும் நிலைவரை செல்கிறது. நாய் கடித்தால்தான் மட்டும் ரேபிஸ் தொற்றும் என்பது இல்லை. பாதிக்கப்பட்ட நாயின் உமிழ்நீர் பட்டாலும், நகத்தால் பிராண்டினாலும் வரலாம். எம் உடலில் சிறு கீறல் இருந்து அதில் உமிழ்நீர் பட்டாலும் ரேபிஸ் வைரஸ் தாக்கும்.



வைரஸ் தாக்கிய நாய்கள், ஆக்ரோசமாக பார்ப்பவர்களை எல்லாம் தாக்கும் என்றில்லை. சில நாய்கள் மிகவும் அமைதியாகக்கூட இருக்கும். எனவே வீட்டில் செல்லப்பிராணிகள் வளர்ப்பவர்கள் முன்னெச்சரிக்கையோடு குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை அவற்றை கால்நடை மருத்துவர்களிடம் காட்ட வேண்டியது அவசியம். அவற்றுக்கும் வைரஸ் தடுப்பூசி போடுதல் வேண்டும். நாய், பூனை போன்றவை கடித்தவுடன் சாதாரண டெட்டணஸ் டாக்ஸாய்ட் ஊசி போட்டுக்கொள்பவர்கள் அதைத் தவிர்க்க வேண்டும். முறையாக மருத்துவரை அணுகி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். கை, கால்களில் பாதிக்கப்பட்ட மிருகம் கடித்தால், அந்த இடத்தைப் பொறுத்து அந்த காயத்தைப் பொறுத்து பாதிப்பு மூளையை அடைய சில மாதங்கள் ஆகலாம்.

**நோய் அறிகுறிகள்**

பாதிக்கப்பட்டவர்களுக்கு தலைவலி, காய்ச்சல், பசியின்மை, வாந்தி, தண்ணீர் விழுங்க சிரமம் மற்றும் இரண்டாம் நிலையில் நரம்பு சம்பந்தப்பட்ட அறிகுறிகள், பக்கவாதம், உடல் உறுப்புகள் செயலிழப்பு போன்றவை ஏற்படும். பின்னர் "கோமா" நிலைக்கு இறப்பு ஏற்படும். இவ்வறிகுறிக்களுக்கான காரணங்களை உற்று நோக்கினால் ரேபீஸ் என்பது சிங்கிள் ஆர். என்.ஏ கொண்ட [illegible] நரம்புகள் மீது [illegible] எனவே எமது உடலில் தொற்றியவுடன் சுற்றயல் நரம்புகள் வழியாக ஸ்பைனல் கேங்கிலியன் எனும் பகுதியை அடைந்து அங்கே பெருக்கமடைந்து மிக வேகமாக மூளைக்கு சென்று என்செப்பலைட்டிஸ் எனும் நிலையை உருவாக்கிவிடும்.

பின்னர் உடலின் உமிழ்நீர் சுரப்பிகளுக்கு பரவலடையும் நரம்புத் தொகுதி பாதிப்படைவதால் தொகுதித் தசைகளின் இயக்கம்பாதிக்கப்படும். சுவாசத் தசைகள் பாதிக்கப்பட்டு சுவாசச்செயற்பாடும் மட்டுப்படுத்தப்படும். விழுங்கும் தசைகள் பாதிப்படைந்து விழுங்க முடியாத நிலை ஏற்படும். தண்ணீரை காண்கையில் அல்லது தண்ணீர் ஓடும் சத்தத்தை கேட்கையில் தொண்டையில் உள்ள விழுங்கும் தசைகள் இறுக்கமடைந்து கடும்வலி ஏற்படுவதுடன் சுவாசம் நிற்கின்ற உணர்வு ஏற்படுவதால் எங்கே உயிர் போய்விடுமோ எனும் பயத்தில்நோயாளிகள் துடிப்பார்கள். இதனால்தான் ரேபிசுக்கு நீர்வெறுப்பு நோய் எனும் பெயர் ஏற்பட்டது. அது போல ஏனைய தசைகள் வலு விழந்து அவற்றின் செயற்பாட்டுக்குரிய தொழில்கள் நிறுத்தப்படும். இறுதியில் இறப்புச் சம்பவிக்கும்.

**மிருகங்கள் தீண்டினால் செய்யப்பட வேண்டியவை**

எனவே நாய், பூனை போன்றவை கடித்துவிட்டாலோநகத்தால்பிராண்டினாலோ உடனடியாக மருத்துவரை அணுகி தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். தடுப்பூசிகளை தொடர்ந்து சில நாள்கள் போட்டுக்கொள்ள வேண்டும். குருதி வருவது தெரிந்தவுடன் சிறுசிறு இடைவேளைகள் விட்டு அவற்றைத் தொடர்ந்து கழுவிக்கொண்டே இருப்பது அவசியம். விசர்நாய் கடித்தால் தொப்புளை சுற்றி 28 ஊசிகள் போட வேண்டும் என்று ஒரு வதந்தி பரவிவருகின்றது. அதற்கு பயந்தே பல நோயாளிகள் நாய்கடித்தாலும் வைத்தியசாலைக்கு வருவதில்லை. உண்மையில் அப்படி அல்ல. உங்கள் நோயின் நிலையை பொறுத்து 4 அல்லது 5 ஊசிகள் உங்கள் கைப்பகுதியில் வழங்கப்படும்.

> நாய், பூனை போன்றவை கடித்துவிட்டாலோ நகத்தால் பிராண்டினாலோ உடனடியாக மருத்துவரை அணுகி தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். தடுப்பூசிகளை தொடர்ந்து சில நாள்கள் போட்டுக் கொள்ள வேண்டும். குருதி வருவது தெரிந்தவுடன் சிறுசிறு இடைவேளைகள் விட்டு அவற்றைத் தொடர்ந்து கழுவிக் கொண்டே இருப்பது அவசியம்.

அதனால்தான் கால்நடை மருத்துவர்கள் மற்றும் பொது சுகாதார அதிகாரிகள் உலக ரேபிஸ் தினத்தை பொது மக்களுக்கும் குறிப்பாக செல்லப்பிராணி உரிமையாளர்களுக்கும் நோயின் ஆபத்துக்கள் மற்றும் தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்துகிறார்கள். மேலும் இந்த ஆண்டின் கருப்பொருள் தடுப்பூசி மீது கவனம் செலுத்துதலாகும். இது அனைத்து ரேபிஸ் கட்டுப்பாட்டு முயற்சிகளின் அடித்தளமாகும்.

**2030 இலக்கு**

உலக ரேபிஸ் தினத்தில் பங்கேற்பது 2030ஆம் ஆண்டளவில் ரேபிஸ் இறப்புகளை அகற்றுவதற்கான முன்னேற்றத்தை பகிர்ந்து கொள்வதற்கான ஒரு சிறந்த வழியாகும்.

*கட்டுரையாளர்கள்:4ஆம் வருட மருத்துவபீட மாணவர்கள், 38ஆம் அணி*
***யாழ்.பல்கலைக்கழகம்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக சிறுவர் தினம்

இ.இராசகுலன்

கள்ளமில்லா சிறார்கள் வாழ்க
இவ் வையகம் போற்ற!

கள்ளமில்லா உளம் அதனால்
பாரிலுள்ளோர் மனம் மகிழ
மழலைக் குணமதனைக் கொண்டு
கன்னல் நெஞ்சமதனால் களிப்பூட்டும்
இளம் சிறார்கள் வாழ்க!

பெற்றவரும் மற்றவரும் மகிழ்ந்திட
பற்றிய நம்பிக்கை ஒளியினை
விண்ணகம்வரை ஈடேற
உளவலிமை கொண்டு
எதிர் கொள்ளும் கலியதனை
தூசென விரட்டி வாகை
சூடிடுவீர் வாழ்வதனில் ...

இன்றைய தளிர்கள் நாளைய
விருட்சயாய் மிளிர்வுடன்
பரணிதனை ஆளும்
வேங்கைகளாய் பெற்றிடுவீர்
திண்மைதனை...

உள்ளமும் சிந்தனையும்
நேர் வழி தவறாது கருணைதனை
மனம் கொள்ள
எளிமைதனை வாழ்வில் மதித்து
மூத்தோரும் சான்றோரும்
வாழ்த்திட நடந்திடுவீர்...

வையத்தில் மேன்மையும்
வித்தகச் செருக்குடனும்
பட்சிகளை தாங்கும் பெரும்
விருட்சமாய் உலகத்து உயிர்கள்
நன்மை பெறும் விதம்
வாழ்வாங்கு வாழ்க!
குழந்தையுள்ளமது கொண்ட
சிறார்கள் வாழ்க! புகழ் வளர்க!
வையத்தில் மேன்மை கொள்க!




# தவிர்ப்பு

செல்வமலர்

இருளாய் இருந்த
என் வாழ்வில்
ஒளி விளக்காய் இருந்தவனே!
இன்று நீ
காணாமல் போன
உறவுகளில்
ஒருவனாய் இருந்தாலும்
என் மனதில்
நிழல் படமாய்
என்றும் நீ

# சொற்சிலம்பம் போட்டி இல: 592



அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:.......................................................

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப் போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 590 இற்கான சரியான விடைகள் வருமாறு:

## இடமிருந்து வலம்

(1) அபிமன்யு (5)சதா (7) கரடி (8) வருடம் (9) திதி (10) நதி (11)நிதம் (13)ஆகுதி (15)அதிரி (16)தோசை (17)சரடு (19)பாவி (20)தகனம் (22)அரிய (23)மிதம் (24)காரியம்

## மேலிருந்து கீழ்

(1) அகதி (2) பிரதிநிதி (3) மடி (4) யுவதி (5) சடங்கு (6) தாம் (10) நம் (12) தரிசனம் (13) ஆசை (14) திரவியம் (15) அத்தமி (16) தோடு (18)ரம் (19)பாரிய (21)கத (22)அரி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.592**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (30.10.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.592இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 03.11.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

# போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி, தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள இயலும். போட்டியில் கலந்துகொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## இடமிருந்து வலம்

1. வயதுப்படி வேறுபாட்டுக்குக் காரணமான தகுதி
4. பகிரு
6. பிரி
7. சூரியன்
8. தட்டான் பூச்சி
10. கடலுக்கு எதிரான
11. பசளை
12. அழிக்க காரணமாக இரு
14. போதை தரும் பானம்
15. வெறுமை என்ற பொருள்பட வரும் பெயரெச்சம்
17. துறவி
18. சுவிஷேசம் எழுதிய ஒருவர்
20. வனம்
21. வரவழை(பொருளை)

## மேலிருந்து கீழ்

1. தப்பு
2. சோதி சார்ந்த நல்ல காலம்
3. வண்டி
4. வருந்தித் தவி
5. ரேஸ் ஓட பயன்படும் ஒரு மிருகம்
8. இரும்பில் பிடிப்பது
9. பலாக்காயில் இருப்பது
11. சிறு தானியம்
13. பெண்
14. உயர்கல்வி பெறக்கூடிய தரமான பாடசாலை
15. இதுவும் வாதும் வேதனை செய்யும்
16. தண்டனைகளில் ஒன்று
17. இறக்காத
19. செய்யுள்
20. மழைக்காலம்

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 590 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
செல்வி யூ.ஆஷா,
யா/பாஷையூர், சென் அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்.

**2 ஆம் பரிசு**
முரளி முகிலன்,
துவாரகை, நாவலடி கோப்பாய் மத்தி.

**3 ஆம் பரிசு**
சி.பாலசுந்தரம்,
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

**4 ஆம் பரிசு**
சி.இராசரத்தினம்,
பூம்பொழில்,
திருநகர் மேற்கு கிளிநொச்சி.

**5 ஆம் பரிசு**
நா.பாலசுப்பிரமணியம்,
இல. 82/28 செட்டித் தெரு,
நல்லூர்.

## பாராட்டுப் பெறுவோர்

அ.சத்தியரூபன்,
'குறும்பன்'
ஏழாலை மேற்கு, ஏழாலை.

என்.ஜே.யுஸ்மீன்,
தபாலகம்,
மன்னார்.

திருமதி ப.சிவன்நேசன்,
'நிம்மதி' தேவாலய வீதி,
சங்கானை.

சொற்சிலம்பம் போட்டி 590 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் தபாலகத்தின் ஊடாக அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் Medical Faculty இற்கு அருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 4 Attached Bathroom உடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு

021 221 2255, 076 243 0394

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்ப கன்னிராசி அத்த நட்சத்திரம் செவ்வாய் தோசம் உடைய சிங்கப்பூரில் Citizenship உள்ள Executive ஆக தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த கற்ற 45 -50 வயதிற்கு உட்பட்ட மணமகளை எதிர்பார்க்கின்றோம். (cs.28794) (13.17)

076 419 2934, 076 702 2737

## மணமகள் தேவை

யாழ் றோமன் கத்தோலிக்க, கௌரவ, 1989 இல் பிறந்து நன்கு படித்து தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனிற்கு மணமகள் தேவை.

தொடர்பு: 077 756 8282

## வாகனம் விற்பனை

TATA Double Cap JQ XXXX இலக்கம் கொண்ட வாகனம் விற்பனைக்கு

076 689 3714

## விற்பனைக்கு உண்டு

TATA Super AC 2018 Model WP DAG XXXX விற்பனைக்கு உண்டு. (CS 28802)(04.17)

077 731 0414/077 872 8790

## தேவை

யாழ்ப்பாணத்தில் (நகரப்பகுதியில்) பெண்களுக்கான ஆடைகள் தைப்பதற்கு வேலையாள்கள் தேவை. (அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) (CS/28811) (11.17)

077 172 7274

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

077 766 0396 (CS/28809) (11.17)

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் IBR Apartment உம், தெஹிவளையில் 2BR Apartment / Rooms உம், யாழ்ப்பாணத்தில் KKS Road இற்கு அருகில் 4BR Upstairs House/ Rooms உம் சகல வசதியுடன் நாள், மாத, அடிப்படையில் குறுகியகால வாடகைக்குண்டு.

076 116 7783 (CS/28812) (11.17)

## பண்ணை தேவை

கைவிடப்பட்ட **மாட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை, விவசாயப்பண்ணை** விலைக்குத் தேவை.

077 618 0675

## வேலைவாய்ப்பு

கொழும்பில் நாளொன்றுக்கு 3000/- ரூபாய். கிழமை சம்பளமும் உண்டு. மேசன், பெயிண்டர், பிளம்பர், உதவியாளர்கள் தேவை. உணவு/ தங்குமிடம் வழங்கப்படும். வயது 18 - 40 வரை (IN/13550) (11,17)

075 311 1792, 077 571 2577

## நீர்க்கசிவை தடுப்பதற்கு

உங்கள் சீமெந்திலாலான கட்டடங்களில் ஏற்பட்ட நீர்க்கசிவுகளை 10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகின்றோம்.

North and East Engineering Jaffna
077 524 4177, 076 779 7716
021 222 2363

## வேலைவாய்ப்பு

கொழும்பு தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு நாளொன்றுக்கு 1500 - 2000 வரை மாதம் 45,000 இற்கு மேல். கிழமை சம்பளம் உண்டு. ஜேம், பிஸ்கட், சவர்க்காரம், குளிர்பானம், செசோஜஸ் போன்ற தொழிற்சாலைகளில் லேபல்/ பெக்கிங் செய்ய ஆண்/பெண் தேவை. உணவு/ தங்குமிடம் வழங்கப்படும். **வயது 18 - 45 வரை** (IN 13551)(14.17)

076 2896258/075 6569318

## வேலைவாய்ப்பு

தனியார் வைத்தியசாலைகள் மற்றும் சூப்பர் மார்க்கெட்களில் ஏராளமான வேலைவாய்ப்புக்கள். வயது 18 - 45 வரை ஆண்/பெண் இருபாலாருக்குமான வேலைவாய்ப்புக்கள். உணவு/ தங்குமிடம் வழங்கப்படும். **மாதம் 45, 000 இற்கு மேல்** (IN 13552)(14.17)

077 5712577/076 2896258





பான் ஏஷியா சிரேஷ்ட பிரஜைகளுக்கான நிலையான வைப்பு

| கால எல்லை | 12 மாதங்கள் | | 24 மாதங்கள் | | 36 மாதங்கள் | | 48 மாதங்கள் | | 60 மாதங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாதாந்தம் | முதிர்வில் | மாதாந்தம் | முதிர்வில் | மாதாந்தம் | முதிர்வில் | மாதாந்தம் | முதிர்வில் | மாதாந்தம் | முதிர்வில் |
| வட்டி வீதம் | 9.87% | 10.33% | 9.83% | 10.83% | 9.79% | 11.33% | 9.38% | 11.33% | 9.32% | 11.83% |
| வ.தே.வ. | 10.33% | 10.33% | 10.29% | 10.29% | 10.24% | 10.24% | 9.79% | 9.79% | 9.73% | 9.73% |

(011) 4 667 222

பான் ஏஷியா வங்கி
உங்களை அறியும் வங்கி

* நிபந்தனைகளுக்குட்பட்டது
பான் ஏஷியா பேங்கிங் கோபரேஷன் பி.எல்.சி., இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படும் ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும் - Fitch Rating 'BBB-'
www.sarva.lk

இப்பொழுது
75%
4G போனஸ்
ரூ.49 ~~500MB~~
825MB
ரூ. 99 ~~1200MB~~
1650MB
மேலதிக விபரங்களுக்கும், டேட்டா பொதிகளுக்கும் அழையுங்கள்: 1717
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
TRC/M/SEA/19/01
4G LTE
SPEEDTEST AWARDS 2019
Sri Lanka Telecom Mobitel



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையில் வெற்றியீட்ட இணையுங்கள்

### உலகப் புகழ்பெற்ற இலங்கை டைல் நிறுவனத்துடன்

உலகெங்கும் விரும்பி நாடப்படும் தரமுயர்ந்த உள்நாட்டு டைல் உற்பத்தியாளர்களான நாம், அதிகரித்துவரும் வாடிக்கையாளர்களின் தேவைகளை ஈடுசெய்வதற்காக எமது வலையமைப்பை விரிவுபடுத்துகிறோம். ஆகவே, **யாழ்ப்பாணத்தில்** எமது அதிகாரம் பெற்ற விற்பனை முகவராகப் பணிபுரிவதற்கு ஆற்றலும் வசதியும் உள்ள ஒருவரை நாம் தேடுகிறோம்.

- பிரதான வீதியொன்றின் (பலாலி வீதி / பிரதான வீதி / கே.கே.எஸ் வீதி / ஆஸ்பத்திரி வீதி) ஓரமாக 3,000 சதுர அடி கொண்ட காட்சியறை. மற்றும் வாகனத் தரிப்பிட வசதி.
- 5,000 சதுர அடிக்கு மேற்பட்ட களஞ்சிய வசதி.
- வங்கி உத்தரவாதம்
- தேர்ச்சி பெற்ற ஊழியர்கள்
- போக்குவரத்து வசதிகள்

மேலதிக விபரங்களுக்கும் விசாரணைகளுக்கும் தொடர்புகொள்ளவும்:
**லுஷாந்தன்** - 076 5593037



LANKATILES
கலையுமான வாழ்க்கை

## முச்சக்கர வண்டி பதிவுப் பத்திரத்திற்கு

சிறந்த தொகை
குறைந்த வட்டியுடன்
ஒரே நாளில் பெற்றுக்கொள்ளலாம்



OD முறைப்படி வட்டியைச் செலுத்தல்

இன்றே தொடர்பு கொள்ளவும்
யாழ்ப்பாணம் 0776 998 089 | வவுனியா 077 1408 189

SINGER FINANCE
Web: www.singerfinance.com | Facebook: SingerFinance


ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

## emami GOLD டர்மரிக் ஸ்கின் கிரீம்

24 கரட் தங்கத்துடன்

### கண்களை மயக்கும் பொலிவான, சிகப்பழகான சருமத்திற்கு

emami




**தங்கத்துகள்கள்**
சருமச்சுருக்கத்தினை குறைத்து தங்கநிறப் பொலிவினை பெற்றுத்தருகின்றது.

**மஞ்சள்**
சருமத்தினை சுத்தம் செய்து கரும்புள்ளிகள் மற்றும் தழும்புகளை நீக்குகின்றது.

**சந்தனம்**
முகப்பருக்கள் ஏற்படுவதை தடுக்கின்றது.

**குங்குமம்**
மிருதுவான சருமத்தினை பெற்றுத்தருகின்றது.

**அதிமதுரம்**
சருமத்தின் பொலிவு மற்றும் பிரகாசத்தினை அதிகரிக்கின்றது.




## தங்கநிறப் பொலிவும் பிரகாசமான தோற்றமும்

Marketed By: Emami Indo Lanka (Pvt) Ltd. No 200, Ukkuwela Square, Grandpass Road, Colombo 14, Sri Lanka.
011 2 432 675
30ml - Rs. 320/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 06 . 04 . 1943

உதிர்வு 05 . 10 . 2019

கடந்த 05.10.2019 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் நாகமணி கணேசன்

(மெக்கானிக்)

திதி : வளர்பிறை சப்தமி (புரட்டாதி மாதம்)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.10.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக் கரையில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நடைபெறுவதுடன் நாளை **(21.10.2019) திங்கட்கிழமை சாவகச்சேரி, புகையிரதநிலைய வீதி, சிவன் கோயில் அருகாமையில் உள்ள இந்துகலாசார மண்டபத்தில் முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெறும்** ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழ இருக்கும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் 09.10.2019 அன்று எமது தந்தையின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், இறுதிச்சடங்கு வரை சகல உதவிகளைச் செய்தவர்களுக்கும், ஆதரவும், ஆறுதலும் செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது மனமுவந்த நன்றியை எமது குடும்ப சார்பில் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !*

சங்கத்தானை, சாவகச்சேரி.
**077 9103689**

(IN 11516) (14.17)

**குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 13 . 06 . 1943

மறைவு 20 . 09 . 2019

## அமரர் தில்லையம்பலம் அருளம்பலம்

**(பாலா கபே, அருள்மல்ரி சென்ரர் - உரிமையாளர்)**

உங்களை உருக்கி எமக்காக
உயிர் உள்ளவரை வாழ்ந்தீர்கள்
எங்களை நினைத்து எங்களுக்காய்
இவ்வுலகில் எல்லாம் செய்தீர்கள்
தங்களை இழந்து ஒருமாதம்
தாண்டிய தெப்படிப் புரியவில்லை
இங்கு நீங்கள் இன்று இல்லை என்று
எண்ணிட எம்மால் முடியவில்லை
வார்த்தைகள் மௌனமாகி
இதயங்கள் காயமாகி
விழியோரம் ஈரமாகிச் செல்கிறது
நாள்கள் கடந்தாலும்
ஆறாத உங்கள் பிரிவு
ஆறாய் ஓடுகின்றது
தினம் தினம் எங்களின் கண்களில்...!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**இல. 141/06,
K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.**

(CS/28698)(11,17)

என்றும் உங்கள் நினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**


# சிறிநதியா

## வாடிக்கையாளர்களுக்கு விசேட செய்தி

NSR **திருமண மண்டபம் மற்றும் நடராஜா பரமேஸ்வரி**
ஆகிய திருமண மண்டபங்களில் நிகழ்வுகளை நடாத்த விசேட விலைக்கழிவுகள் வழங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.




**இல.01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே - 021 222 4452 | 021 221 1332**
**021 221 7786 | 021 222 2709**

## நடராஜா பரமேஸ்வரி
### திருமண மண்டபம்



**465/26, பருத்தித்துறை வீதி, நல்லூர், (மனோன்மணி அம்மன் ஆலயம் அருகாமையில்)**
**தொ.பே - 021 222 1662 | 021 222 2709**

எமது வாடிக்கையாளர்களே!
2020 ஆம் ஆண்டுக்கான முற்பதிவுகள் ஆரம்பமாகியுள்ளதால். உடன் உங்கள் முற்பதிவுகளை மேற்கொண்டு விசேட விலைக் கழிவுகளையும், சலுகைகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

**முற்பதிவுகளுக்கு முந்துங்கள்**
விவரங்களுக்கு:
**077 6417 679**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### அம்பலம் முருகேசம்பிள்ளை
**(இளைப்பாறிய பொறியியலாளர் P.W.D)**


தோற்றம் 01.05.1930 மறைவு 19.10.2019

இணுவிலைப் பிறப்பிடமாகவும், தாவடி, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் முருகேசம்பிள்ளை நேற்று (19.10.2019) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொற்கொடியின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.10.2019) ஞாயிற்றுக்கிழமை கல்கிசையில் அமைந்துள்ள மகிந்த மலர்ச்சாலையில் காலை 9மணிமுதல் பார்வைக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் கல்கிசை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மகன், மகள்மார், மருமக்கள்.**
**தாவடி**

**வவசெற் பிளேஸ், கொழும்பு - 6**

(CS/28813) (11.17)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 23.09.2019 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு

### அமரர் பரமேஸ்வரி பரராஜசிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி கிரியைகள் நாளை (21.10.2019) திங்கட்கிழமை காலை 5.00 மணியளவில் மூச்சம்பலம் சிவனாலய பொன்னையா சாமியார் மடத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் 23.10.2019 புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுகளில் பங்குபற்றி தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் கூறியவர்களுக்கும் துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள், மலர்வளையங்கள் மூலமாக துயரில் பங்கெடுத்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி, ஒத்தாசைகள் புரிந்து ஆறுதல் அளித்த அனைவருக்கும் இவ்வேளையில் உள்ளார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

"கலைக்கோயில்", சின்னத்தாய்,
புலோலி தெற்கு, புலோலி.

குடும்பத்தினர்.

**070 5071411 /077 7448702/ 021 2056603**

## மரண அறிவித்தல்


தோற்றம் 04 . 05 . 1968 மறைவு 19 . 10 . 2019

### கந்தசாமி சத்தியநாதன் (பால்ராஜ்)
(புகழோன் கடை உரிமையாளர் - கிளிநொச்சி)

கிளிநொச்சி முறுகண்டியை பிறப்பிடமாகவும் கொல்லங் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சத்தியநாதன் (பால்ராஜ்-புகழோன் கடை உரிமையாளர், கிளிநொச்சி) நேற்று (19.10.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் வள்ளியம்மை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், பாக்கியரத்தினம் தம்பதிகளின் மருமகனும் சாந்தினியின் (ஆசிரியை) அன்புக்கணவரும் புகழோன் (2018 விஞ்ஞானப் பிரிவு, யாழ்.இந்துக்கல்லூரி), யதுசன் (2019 கலைப்பிரிவு யா/ மகாஜனக்கல்லூரி), வேணுஜன் (2021 கலைப்பிரிவு யா/ மகாஜனக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2019) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**தகவல் : குடும்பத்தினர்**

## CAR FOR SALE



**TOYOTA- CHR - NGX10, 2018, 2WD, 1190 CC**
வைத்தியரின் பாவனையில் உள்ள **கார்**
**CBE XXX 9700 km,Wine Red Colour, Full Option**
உடன் விற்பனைக்கு

**077 209 3228** (cs 593) (13.17)

## விநியோகஸ்தர்கள் தேவை

**மாந்தை சோல்ட் லிமிற்றெற்**

**கைத்தொழில் வர்த்தக, நீண்டகால இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி திறன்விருத்தி அமைச்சு**

மேற்படி அமைச்சின் கீழ் செயற்பட்டுவருகின்ற மாந்தை சோல்ட் லிமிற்றெற் நிறுவனமானது மன்னார், ஆனையிறவு உப்பளங்களை நிர்வகித்து வருவதோடு தரம்வாய்ந்த உப்பினை உற்பத்தி செய்து அயடீன் கலந்து உண்ணத்தகு கல் உப்பாக "ரஜ சோல்ட்" (RAJA SALT) எனும் வணிக நாமத்தில் சந்தைப் படுத்திவருகின்றது.


பின்வரும் தகைமைகளுடன் நாடளாவிய ரீதியில் விநியோகஸ்தர்களை வரவேற்பதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

- மாதாந்த விற்பனை அடைவு மட்டத்திற்கு ஏற்ப கொள்வனவு செய்யக்கூடிய வலுவான நிதி நிலைமையுடன் திறமையான செயற்பாட்டுப் பின்னணி.
- உரிய முறையிலான களஞ்சிய மற்றும் அலுவலக வசதி.
- போக்குவரத்து மற்றும் மீள்விநியோகத்திற்குத் தேவையான வாகன மற்றும் ஊழியர் வசதி.

மேற்குறித்த தகைமைகளுடன் விநியோகப் பணியில் ஆர்வம் கொண்டவர்கள் எமது சந்தைப்படுத்தல் முகாமையாளருடன் தொடர்புகொண்டு (0232251784 / 0772665629 / mslmnmm@gmail.com) விண்ணப்பப் படிவங்களைப் பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி 05.11.2019ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் நோக்கம், மாவட்டம் என்பவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.

Chairman,
Mantai Salt Limited,
No.561/3, ElvitigalaMawatha, Colombo 05.
+94 112368974 / +94 112368964

## மரண அறிவித்தல்


பிறப்பு 17 . 05 . 1926 இறப்பு 19 . 10 . 2019

### கந்தையா தனுக்கோடி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.419, அந்தோனியார் கோயிலடி, அக்கராயனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தனுக்கோடி நேற்று 19.10.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் பொன்னம்மாவின் அன்புக்கணவரும் லோகநாதன் காலஞ்சென்ற சந்திராதேவி மற்றும் புனிதாதேவி, வரதராசா (அதிபர் - யாழ்.சங்குவேலி அ.த.க.பாடசாலை), சாந்தலிங்கம் (R.D.O சங்கானை), கமலாதேவி (பாரதி - ஆசிரியை - கிளி/ யூனியன் குளம் அ.த.க.பா) ஜெயக்குமார் (ஆசிரிய ஆலோசகர், துணுக்காய் வலயக்கல்வி அலுவலகம்), தேவராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதீஸ்வரி, சுந்தரலிங்கம், மங்கையற்கரசி (ஆசிரியை - யா/நெல்லியடி மத்திய கல்லூரி), பாமினி (ஆசிரியை-யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்) காலஞ்சென்ற ஜெயக்குமார், மற்றும் தயாபரன், மேகலா (ஆசிரியை - வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ்க்கலவன் வித்தியாலயம்), யோகலிங்கம் (பணியாளர் - பனை அபிவிருத்திச் சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிறோஷா, கோகிலா, புவிஷன், குறிஞ்சி, கயூரன் (பணியாளர் - வீதி அபிவிருத்தி திணைக்களம்) இந்துஷா, சஞ்ஜித், லஜீபன், கலையின்பன், மதுஜன், அவனிகா, திவாகர், அக்ஷயா, கிஷோத், கவிவாணன், அபிநயன், போதினி, லெவிந் ஆகியோரின் அன்புப் பேரனும் யவீனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (20.10.2019) காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஸ்கந்தபுரம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**076 170 2851, 077 118 7307**

## சிறுநீரகம் தேவை
B,O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
**T- 076 239 9874**

## வாடகைக்கு
பிறவுண் வீதி, நாவலர் வீதியில் ஆடியபாதம் வீதியில் வீடுகள் வாடகைக்கு உண்டு
**077 723 2535**

## தேவை
திருநெல்வேலி நல்லூர் கச்சேரி மற்றும் யாழ்மாநகர சபைக்கு 4 Km உட்பட்ட பிரதேசத்தில் சகல வசதிகளுடன் வீடு தேவை.
**076 801 5646**

## தேவை
ஹொட்டல் வேலைக்கு அனுபவம் உள்ளவர் தேவை. சிங்களம் பேசத் தெரிந்தவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
**077 882 2847, 077 691 3440**

## பெயர் மாற்றம்
ராதாகிருஷ்ணன் டினேஷ்குமார் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **ராதாகிருஷ்ணன் தினேஷ்குமார்** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் **தினேஷ்குமார்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக உறுதிப் படுத்துகின்றேன். **தினேஷ்குமார்**

## வேலையாள் தேவை
சுன்னாகத்தில் இயங்கும் பிரபல வியாபார நிறுவனத்திற்கு காசாளராக பணிபுரிவதற்கு பெண்பிள்ளை உடன் தேவை.
**தொடர்பு:- 076 628 4720**

## மாபிள் வேலை
உங்கள் வீட்டுக்கு அழகாகவும் தரமாகவும் மாபிள் பதித்துத் தரப்படும்.
1சதுர அடி - ரூ.45.00
**077 334 1281** (ANE/994) (11.17)

## விற்பனைக்கு
நல்ல இன தென்னங்கன்று, செவிளநீர் தென்னங்கன்று (மலேசியன்) சவுக்கு, தேக்கு, பாலை, முதிரை, மலை வேம்பு, நாவல், கொண்டல், சித்திரவேம்பு, வேம்பு, நாகமரம், இலுப்பை, கொன்றை, வாகை, வில்வம், மருது, புங்கை, கயு, சமண்டலை, அசோககன்று, கருங்காலி, கத்தாழை, மாங்கன்று, தேசி, தோடை, பலா, கொய்யா, கமுகு, இந்தியன்நெல்லி, ஊர்நெல்லி அரைநெல்லி, பெரியவிளும்பி,சிறிய விளும்பி, ஒட்டு பலா, விதை பலா, பசன் புறூட், ஜாவல், சீதாபழம், கறுவா, கராம்பு, ஈரப்பலா, அன்னமுன்னா, பட்டபுறூட், கோப்பி, முருங்கை, ரெட்லேடி, பப்பாகன்று, குறோட்டன் வகை, செவ்வரத்தை வகை, மங்குஸ்தான், றம்புட்டான், வெற்றிலை, மிளகு, மேலும் பல இன பூங்கன்றுகளும், பூஞ்சாடிகளும் விற்பனைக்கு (தொகையாகவும் பெற்றுக் கொள்ளலாம்)

077 612 9343

## சமையல் வேலையாள்கள் தேவை
முல்லைத்தீவு வீதியில் அமைந்துள்ள எமது உணவகத்திற்கு (Hotel) கொத்து றொட்டி, றைஸ்,றொட்டி வேலையில் திறமையும் முன் அனுபவமும் உள்ள வேலையாள் தேவை
**தொடர்பு**
**076 981 9241**

## காணி விற்பனைக்கு
பலாலி விமான நிலையத்திலிருந்து 1 Km தொலைவில் 12 பரப்பு காணியும் இயக்கச்சி A9 வீதியில் 58 ஏக்கர் காணியும் உடன் விற்பனைக்கு

## வீடு விற்பனைக்கு
தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு அருகிலும் மீசாலை தாளையடி வீதியிலும் வட்டுக்கோட்டையிலும் வீடு விற்பனைக்கு உண்டு

## கடை வாடகைக்கு
நெல்லியடி சந்தியில் வியாபார நோக்கத்துடன் கடை வாடகைக்கு உள்ளது.
**077 566 0000, 077 227 6310**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி கலந்துரையாடலைப் புறக்கணிக்க வேண்டும்!

## சூக்கா கோரிக்கை

கொழும்பு, ஒக். 20

கொழும்பில்நாளை ஆரம்பமாகவுள்ள காலிகலந்துரையாடல் மாநாட்டில் கலந்து கொள்ளும் பன்னாட்டுச் சமூகப் பிரதிநிதிகள், இலங்கைகடற்படையினரின் இரகசிய தடுப்பு முகாம்களில் இடம்பெற்ற சித்திரவதைகள் குறித்த விசாரணைகளிற்குகடற்படையினர்ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று பகிரங்கமாக வலியுறுத்த வேண்டும். இவ்வாறு பன்னாட்டுஉண்மைமற்றும் நீதிக்கானதிட்டம்என்றபன்னாட்டுஅமைப்புவேண்டுகோள் விடுத்துள்ளது.

கடற்படையினரின் புலனாய்வு பிரிவினர் இவ்வாறான சித்திரவதைகளில்ஈடுபட்டவேளைகடற்படையின் புலனாய்வு பிரிவின் இயக்குநராக பணியாற்றிய இலங்கை கடற்படையின் தற்போதைய பிரதானி நிசாந்த உலுகெட்டெனவின் அமர்வை பன்னாட்டுச் சமூகப் பிரதிநிதிகள் புறக்கணிக்க வேண்டும் எனவும் அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

2008 2009 இல் 11பேர் இலங்கைகடற்படையின் சிறப்புபுலனாய்வுபிரிவினரால்கடத்தப்பட்டுகாணாமலாக்கப்பட்டமை குறித்து இலங்கையின் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றுதெரிவித்துள்ள உண்மைமற்றும்நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்காகடற்படையினர்மேற்கொண்டகுற்றங்களில் இது ஒருசிறியபகுதியேஎனவும்தெரிவித்துள்ளார்.

கடற்படையினரின் பல முகாம்களில் இடம்பெற்ற சட்டவிரோதமாகதடுத்துவைத்தல்சித்திரவதைகள் காணாமற்போகச்செய்யப்படுதல் ஆகியவற்றுடன் கடற்படையின்பலதளபதிகளுக்குத்தொடர்புள்ளது அல்லது அவர்கள் அதனை அறிந்திருந்தனர் என்று தெரிவித்துள்ள ஜஸ்மின் சூக்கா இவர்கள் குறிப்பிட்டமுகாம்களின்தலைமை அதிகாரிகளாக விளங்கியதுடன் இந்தக் குற்றங்களில் ஈடுபடுமாறு உத்தரவையும் வழங்கியிருந்தனர் எனவும் தெரிவித்துள்ளார்.

மாநாட்டைநடத்துபவர்களில்ஒருவரான இலங்கை கடற்படையின்தற்போதையபிரதானிநிசாந்த உலுகெட்டென 2011 முதல் 2013 வரை கடற்படையின் புலனாய்வுபிரிவின் இயக்குநராகயிருந்தார்என்று தெரிவித்துள்ள சூகாவின் அமைப்பு, 2012 நடுப்பகுதி வரை குறிப்பிட்ட முகாமை கடற்படையின் புலனாய்வு பிரிவினர் இயக்கிவந்தனர், புலனாய்வு பிரிவின்இயக்குநர்என்றஅடிப்படையில்இலங்கை கடற்படையின்தற்போதையபிரதானிநிசாந்த உலுகெட்டென இது குறித்து தெரிந்திருக்க வேண்டும் ஆனால் அவர் நடவடிக்கை எடுக்க தவறிவிட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைகடற்படையினருடன்கடல்சார்பாதுகாப்பு குறித்தபேச்சுகளுக்காககொழும்புசெல்லும்உலக நாடுகளின்கடற்படை அதிகாரிகள்பன்னாட்டுநியாயாதிக்கத்தை கொண்ட சித்திரவதைக்கு எதிரான பிரகடனத்தில் தங்கள் நாடுகள் கைச்சாத்திட்டுள்ளதைமறந்துவிடக்கூடாதுஎனவும்ஜஸ்மின்சூக்கா வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ.5)

## கண்ணீர் அஞ்சலி



**A. முருகேசம்பிள்ளை**

(இளைப்பாறிய பொறியியலாளர் PW.D)

அவர்கள் நேற்று (19.10.2019) சனிக்கிழமை காலமானார். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னா குடும்பத்தினர்,
அன்னா தொழிலகம், இணுவில்.

## கண்ணீர் அஞ்சலி

எமது காரைநகர் பிரதேசசபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி விஜயமலர் மதியழகன் அவர்களின்** அன்புத்தந்தையார்



**மாதவர் கோவிந்தர்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
காரைநகர் பிரதேசசபை, காரைநகர்

## வேலையாள்கள் தேவை

**யாழ் நகரில் சைவ உணவகத்திற்கு ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

01. சப்பிளையர்
02. இடியப்பம் போடுபவர்
03. மரக்கறி வெட்டுபவர்
04. பில்கிளாக்
05. சுத்திகரிப்பு மேற்பார்வையாளர்.
06. அலுவலக உதவியாளர் (பெண்)
07. சுகாதார தொழிலாளிகள்
08. களஞ்சியக்காப்பாளர்
09. தேநீர் தயாரிப்பாளர்
10. உதவியாளர்கள் (வாகனம் ஓட்டுபவர்)


**077 791 7753, 021 222 2373**
**7/4, யாழ் வீதி, யாழ்ப்பாணம்**

## மரண அறிவித்தல்

C11519(16/17)

# மாணிக்கம் நாகேந்திரன்

(ஓய்வுநிலை தலைமைத் தபால் அதிபர் - யாழ் .மாவட்டம் )



**கொடிகாமம் கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் அல்வாய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் நாகேந்திரன் நேற்று (19.10.2019) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - முத்தம்மா தம்பதியினரின் அன்பு தலைமகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் ஞானகலாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நிஷாலினியின் பாசமிகு தந்தையும் சிவபாக்கியம், நவரத்தினம் (உரிமையாளர் பழமுதிர்சோலை- கெற்பேலி), பாலசிங்கம் ( பிரதி அதிபர், ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி - திருகோணமலை ), யோகேந்திரன் (சுவிஸ் ), காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு சகோதரனும் குமாரசாமி, விமலேஸ்வரி , பாலேஸ்வரி, குமுதினி (சுவிஸ் ), சந்திரோதயம், சகுந்தலாதேவி, ஞானேஸ்வரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்மரத்தினம் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், நேசதுரை ஆகியோரின் அன்பு சகலனும் நவநீதன் (அமெரிக்கா), நிதர்சன் (பெல்ஜியம்), நிதர்சினி காலஞ்சென்ற நிஷாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும் குபேந்தினி (அமெரிக்கா), சத்தியகௌரி, றஜீவன், நிவேதா-திலீபன், ராகுலன், நிரோஜன், நிதர்சனா, நிகிந்தா, தனுசன், நிதுஷன், யோசிகா (சுவிஸ்), திரிஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஸ்ரீரஞ்சனி (இத்தாலி),உதயகுமார்(சுவிஸ்), சுஜாத்தா(கனடா) ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2019) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அல்வாய் தெற்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அல்வாய் தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்** செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

தகவல்:- குடும்பத்தினர்
குமாரசாமி (மைத்துனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணமக்கள் தேவை**

1990 ஆம் ஆண்டு பிறந்த அரசதொழில் புரியும் மணமகனுக்கும், 1995 ஆம் ஆண்டு பிறந்த பல்கலைக்கழக மணமகளுக்கும் மணமக்கள் தேவை.

**077 233 6267**

**வீடு வாடகைக்கு**

K.K.S.வீதியிலிருந்து 100m தூரம் அரசடி வீதியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. களஞ்சிய பாவனைக்கு பயன்படுத்தலாம்.

(cs 28813) (13.17) **077 918 2733**

**வாடகைக்கு**

பஸ்ரியன் சந்திக்கு அருகில் கட்டடத்தொகுதி வாடகைக்குண்டு. வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 882 2847, 077 691 3440**

**பணிப்பெண் தேவை**

கொழும்பு பம்பலப்பிட்டி தொடர்மாடி குடிமனையில் தங்கியிருந்து வேலை செய்வதற்கும் வயோதிபப் பெண்ணை பராமரிப்பதற்கும் பெண் தேவை. சம்பளம் - 25000/= (ஆண்களற்ற வீடு) தனியான அறை, குளியலறை உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**076 547 2474**

**கடை வாடகைக்கு**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் (யாழ் நகரில்) கடை வாடகைக்கு உண்டு. நீண்ட கால வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 993 8348

**வாடகைக்கு**

**Science hall** மற்றும் **Science world** அருகாமையில் அறைகள் வாடகைக்கு உண்டு.(படிக்கும் பெண்களுக்கு மாத்திரம்)

தொடர்புகளுக்கு:- 077 753 1440

**விற்பனைக்கு**

கடைக்கு உரிய இரும்பு சுருக்கு கேற் மற்றும் கண்ணாடி சோக்கேஸ் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 077 993 8348

**தேவை**

வெள்ளவத்தையில் ஸ்தாபிக்கப்படவுள்ள புதிய சுப்பர் மார்க்கட் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. Data Entry 02, விற்பனையாளர் - 6, சுத்திகரிப்பாளர் - 4, காசாளர் - 3.(ஆண், பெண் இருபாலாரும்) திங்கள் முதல் வெள்ளி காலை 8.30 - 5.00 வரை தொடர்பு கொள்ளவும். தங்குமிட வசதியுண்டு.

இல.56, Galle Road, Colombo - 06

**5508035/076 1008886**

**சிகிச்சை நிலைய உதவியாளர் தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் பற்சிகிச்சை நிலையத்துக்கு உதவியாளராகப் பணிபுரிவதற்கு O/L, A/L வரை படித்த பெண்பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. ஐந்து மைல் சுற்றாடலில் வசிப்பவர்கள் சுயவிவரங்களுடன் நேரில் சமுகம் தரவும்.

**152, பலாலி வீதி (தபால் பெட்டிச் சந்திக்கு அருகில்) திருநெல்வேலி.** (CS/28820) (11.17)


**வேலைவாய்ப்பு**

கட்டட நிர்மாணத்துறையில் **CIDA** தரம் C 4 இல் உள்ள நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

**1. Technical officer (Civil)** (HND,NCT-or Equivalent with Building Experience)

**077 712 0945**
**Fax - 021 221 3663**
**Email: vacancynsc@gmail.com**


## மரண அறிவித்தல்கள்



**தோற்றம்** 13 . 10 . 1940

**மறைவு** 11 . 10 . 2019

### அப்பையா சிவபாதசோம சுந்தரலிங்கம்

**(பிரபல வர்த்தகர் – இருபாலை)**

யாழ் இருபாலையைப் பிறப்பிடமாகவும் கனடா **Toronto**வை வதிவிடமாகவும் கொண்ட அப்பையா சிவபாதசோம சுந்தரலிங்கம் கடந்த **(11.10.2019)** வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.


அன்னாரின் பூதவுடல் நேற்று **(19.10.2019)** சனிக்கிழமை மாலை **5.00** தொடக்கம் இரவு **9.00** மணிவரையும் இன்று **20**ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை **5.00** தொடக்கம் இரவு **9.00**மணிவரையும் **Eligin Mills Funeral Centre Located at 1591 Elgin Mills Road East, Richmond Hill, ONL4S1M9** இல் பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை **21**ஆம் திகதி காலை **9.00** மணி தொடக்கம் முற்பகல் **11.30** மணிவரை அதே இடத்தில் கிரியைகள் நடைபெற்ற பின்னர் இரவு **11.30**மணியவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

| | | |
|---|---|---|
| மைத்துனர் - | சி.முருகேசு | - 077 903 9066 |
| சகோதரி - | மு.ஜெகதீஸ்வரி | - 021 223 1291 |
| மருமகன் - | மு.மிரோஷன் | - 076 291 1261 |

CS24100(16/17)



**மலர்வு** 02 . 07 . 1940

**உதிர்வு** 17 . 10 . 2019

### சவிரிமுத்து சேவியர்தாஸ்

***(இளைப்பாறிய இ.போ.ச சாரதி)***

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சவிரிமுத்து சேவியர்தாஸ் கடந்த 17.10.2019 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - சவிராசி (தங்கம்மா) தம்பதிகளின் அன்பு மகனும் அனற் தவமணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான முத்துராசா - கௌரியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான மரியதாசம்மா, யேசுதாசன், சூசைதாசன் மற்றும் அன்ரனிதாசம்மா, ஜேம்ஸ்தாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஜோ ஜெயராஜ், ஜிற்றாஜீவராஜ், றெக்னோ றூபராஜ் மற்றும் ஜொய்லின் வசந்தி (கனடா), ஜினோ ஜெனிராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகஸ்டின் விஜயரட்ணம் (கனடா), ஷாமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பீற்றர் திசநாயகம், பெனடிற் இம்மனுவேல் மற்றும் புஸ்பதேவி, றெஜினா (சுவிஸ்), லில்லி ஆகியோரின மைத்துனரும் மிரியம்சந்திராஅருளானந்தம் (சுவிஸ்), ஸ்ரீபன் செகராஜசிங்கம் (நீர்கொழும்பு), எரிக்புவிராஜசிங்கம் (இந்தியா) ஆகியோரின் மனைவி வழி மைத்துனரும் ஜனந்தினி (கனடா), நிலக்ஷா (கனடா), வினோஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஸ்ரெபான் (கனடா), கபிலன் (கனடா) ஆகியோரின் புகுந்தவழிப் பேரனும் கேஷாலியா(கனடா), விகான் (கனடா), நிரோவின் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலித் திருப்பலி நாளை (21.10.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 28721) (14.17)


**தகவல் : குடும்பத்தினர்.**

**077 759 1400**

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் சுப்ரமணியம்

**(முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் - இலங்கை மின்சாரசபை)**



அரசடி வீதி இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுப்ரமணியம் நேற்று (19.10.2019) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும் சிவானந்தம் அன்னம்மா தம்பதிகளின் மருமகனும் திலகவதியின் அன்புக்கணவரும் சுகந்தினி (London), சுரேந்திரன், சுதர்சினி, சுரேஸ்குமார் (Software Engineer, Singapore) ஆகியோரின் அன்புத் தந்தையும் ச.வெங்கடேஸ்வரன், (Electrical Engineer - Australiya) Dr.S அபிராமி (Singapore) ஆகியோரின் மாமனாரும் வெ.காவியா, வெ.சயிந்தவி, சு.ஹரணியா, சு.சிவசுரமியன் ஆகியோரின் அன்புப் பேரனும் Lion Dr.V தியாகராஜா அவர்களின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.10.2019) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"ராஜபவனம்"**
**அரசடி வீதி, இருபாலை, கோப்பாய்**

**தகவல்: குடும்பத்தினர்**
**021 223 0264**

### தர்மலிங்கம் ஸ்ரீதரன்



பிறப்பு 02.08.1964 இறப்பு 14.10.2019

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், Kirchheim Unter Teck ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் ஸ்ரீதரன் 14.10.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தர்மலிங்கம் - இலட்சுமி தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி - முத்துரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், குலராதாவின் அன்புக் கணவரும், துர்க்காவின் அன்புத் தந்தையும், ஸ்ரீபாஸ்கரன் (செல்வா- சுவிஸ்), ஸ்ரீபரன் (குமார் - பிரான்ஸ்), ஸ்ரீவிக்கினராஜா (பாபு - சுவீடன்), ஸ்ரீமயூரன் (அருள் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரியா (சுவிஸ்), பவானி (பிரான்ஸ்), ஜோதி (சுவீடன்), பிரியந்தி (சுவீடன்), தேனுகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கீர்த்திகா, ஆதித்தியன், தேனுகா, அனித், ஓவியன், அனிசா, டிக்சனா, அக்சா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், தேஜர்ஸ்வியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.10.2019 திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் (ஜேர்மன் நேரப்படி) Notzinger Steige 100, 73230 Kirchheim Unter Teck, Germany இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுககொள்ளவும்.

**பிலிப்ஸ் வீதி,**
**மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.**

**தகவல் : தந்தை**
**குடும்பத்தினர்.**

(ACH 708)(6.17) **076 200 1942**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாம்...

அரச தலைவர் தேர்தல் தொடர்பில் 5 தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து பொது ஆவணத்தை தயாரித்துள்ளன. அந்த ஆவணத்திலுள்ள 13 விடயங்களை முன்வைத்தால் அவர்களுடன் பேச்சு நடத்தமாட்டேன் என்று அரச தலைவர் வேட்பாளர்களில் ஒருவரான கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். தமிழ்க் கட்சிகள் பொது ஆவணத்தை முன்வைத்து பிரதான வேட்பாளர்களிடம் பேசுவது என்று தீர்மானித்திருந்த நிலையில் கோத்தபாய ராஜபக்ச மேற்படி நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனிடம் வினவியபோது, கட்சிகள் கோரினால் நாம் பேச்சு நடத்தத் தயார். அவர்களின் பின்னால் நாங்கள் போகவேண்டியதில்லை. எங்களின் ஆதரவு தேவை என்றால் அவர்கள்தான் தேடிவரவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரச தலைவர் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நாளான எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தனது நிலைப்பாட்டை அறிவிக்கும்- என்றார். (ஒ.5)

## தேர்தல்...

ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய கூறியிருந்தார்.

இராணுவத் தளபதி தமது நிலைப்பாட்டை விளக்கி பாதுகாப்புச் செயலருக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இது குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா,

பரப்புரை விளம்பரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட படமும், கருத்தும் இராணுவத் தளபதியாக இருந்த போது பெறப்பட்டவையல்ல. கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புச் செயலராகவும், நான் 58 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகவும் இருந்த போது களுத்துறையில் நடந்த நிகழ்வில் வெளியிட்ட கருத்தும் படமுமே அது. தேர்தல் விளம்பரத்துக்கு எனது படமும், கருத்தும் பயன்படுத்தப்பட்டதற்கு நான் பொறுப்பேற்க முடியாது. அதனை வெளியிட்டவர்களுடன் தான் இந்த பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்- என்றார். (ஒ.5)

## ஸஹ்ரானுடன்...

கொண்ட தேர்தல் பரப்புரைக் கூட்டம் கண்டி, கலகெதர தேர்தல் தொகுதியில் ஹத்தரலியத்தவில் நேற்று நடைபெற்ற போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள ஊடகங்களில் என்னையும் தீவிரவாதி ஸஹ்ரானையும் தொடர்புபடுத்தி காணொலியொன்றை ஒளிபரப்பி, பொது மக்கள் மத்தியில் தவறான மனப்பதிவை ஏற்படுத்தக்கூடிய விசமத்தனமான செய்தி யொன்று பரப்பப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மகிந்த ராஜபக்சவின் தரப்பில் போட்டியிட்ட ஹிஸ்புல்லாஹ் படுதோல்வியடைந்தார். பின் கதவால் சென்று அவர் எதிர்த்துப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தேசியப்பட்டியல் ஆசனமொன்றை பெற்றுக்கொண்டார். அதன்பின், உடனடியாக குண்டர்களை கொண்டு அவரது அரசியல் எதிரிகளான முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களை தாக்கினார். பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளையடுத்து, ஹிஸ்புல்லாஹ்வின் அடாவடித்தனத்தினால் பாதிப்புக்குள்ளானவர்களை மருத்துவமனைக்குச் சென்று நேரில் பார்வையிட்டேன். அப்படிச்சென்ற இடமொன்றில் ஏனையவர்களுடன் ஒருவராக பயங்கரவாதி ஸஹ்ரானும் இருந்திருக்கிறான். அப்போது அவனைப்பற்றி எனக்கு தெரிந்திருக்கவில்லை.

இந்தச் செய்தி ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளிவந்து சில வருடங்கள் கடந்துள்ள நிலையில், அரச தலைவர் தேர்தலில் இப்போது அதை தூக்கிப்பிடிக்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸ் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதால், சிங்கள மக்கள் மத்தியில் இனவாத பரப்புரையை முன்னெடுப்பதற்காக இந்தக் கதையை மக்கள் மத்தியில் பரப்புகின்றனர் - என்றார். (ஒ.5)

## வடக்கில்...

காங்கேசன்துறை கடற்படையினர், பருத்தித்துறை கடற்பரப்பில் சந்தேகத்துக்கு இடமான படகைச் சோதனை செய்தனர். இதன்போது 220 கிலோ கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. படகில் பயணித்த மூவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மாதகல், தொண்டமனாறு, மன்னாரைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை, மன்னாரில் சொகுசு வாகனத்தைக் கடற்படையினர் சோதனை செய்துள்ளனர். வாகனத்தில் 180 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. வாகனத்திலிருந்த பொலிஸ் அலுவலர் உள்பட 2பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ.5,26,71)

## 13 அம்சக் கோரிக்கை...

மனம்விட்டுப் பேசுவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். இவ்வாறு அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உள்பட 5 தமிழ்க் கட்சிகள் ஓரணியில் நின்று அரச தலைவர் தேர்தலில் பொதுவான தீர்மானத்தை எடுக்கவுள்ளன என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அந்தக் கட்சிகள் எம்மைக் கூட்டாகச் சந்திப்பதற்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரம் கேட்டுள்ளன. தமிழ்க் கட்சிகளுடன் மனம் விட்டுப் பேச நாம் தயாராக இருக்கின்றோம்.

ஆனால், அந்தக் கட்சிகள் பிரதான அரச தலைவர் வேட்பாளர்களிடம் முன்வைக்கவுள்ள கோரிக்கைகள் என்று ஊடகங்களில் வெளியாகியுள்ள 13 யோசனைகளில் தொடர்பில் என்னால் இப்போதைக்குப் பதிலளிக்க முடியாது. ஏனெனில், அந்தக் கோரிக்கைகள் - யோசனைகள் இன்னமும் எம்மிடம் உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படவில்லை. அதேவேளை, தமிழ்க் கட்சிகளும் எம்முடன் இன்னமும் பேச்சுக்களை நடத்தவில்லை. இந்த நிலையில், அந்தக் கோரிக்கைகள் தொடர்பில் என்னால் உத்தியோகபூர்வமான கருத்துக்கள் எதனையும் வெளியிட முடியாது. முதலில் தமிழ்க் கட்சிகள் எம்முடன் நேரில் பேச்சு நடத்தட்டும் - என்றார். (ஒ.5,22)

## ராணுவத்...

திருப்தியளித்துள்ளதாகவும் தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தேர்தல் நடவடிக்கையில் இராணுவம் நடுநிலையுடன் செயற்படும் என நம்புவதாகவும் தெரிவித்தார். 'விளம்பரம் தொடர்பில் குறித்த கட்சி தொடர்புபடவில்லை என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது. தனது அனுமதி இல்லாமலே இது இடம்பெற்றுள்ளதாக ராணுவத் தளபதியும் கூறியுள்ளார். எந்தவொரு வேட்பாளருக்குச் சார்பாகவும் செயற்படமாட்டேன் என்று அவர் உறுதியளித்துள்ளார். இது தொடர்பில் நாம் திருப்தியடைகின்றோம்' என்றார் மகிந்த தேசப்பிரிய. (ஒ.5,61)

## சு.க...

ஜயசேகர மற்றும் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இருதரப்பின் கொள்கைகள் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சிக்கும், பொதுமக்கள் முன்னணிக்கும் இடையிலான பரந்துபட்ட கூட்டணி இம்மாதம் 10ஆம் திகதி இருதரப்பு பொதுச்செயலர்களின் கைச்சாத்திடலுடன் உதயமானது. (ஒ.5,31)

## பலாலி...

திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில், நவம்பர் 1ஆம் திகதி தொடக்கம் சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில், வானூர்திச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. நாளாந்த வானூர்தி சேவைகளை நடத்த அலையன்ஸ் எயர் நிறுவனம் முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம்- சென்னை இடையே வானூர்தி சேவையில் ஈடுபடுத்த மேலும் பல நிறுவனங்கள் முன்வரும் என்று நம்புகிறோம்- என்றார். (ஒ.5)

## 13 அம்சக்...

அந்தக் கோரிக்கைகளை முன்வைத்தால், அவர்களுடன் பேச்சு நடத்தவும் நான் தயாரில்லை. தமிழ்க் கட்சிகளின் ஆதரவில்லாமல், தமிழ் மக்களின் வாக்குகளை நான் பெற்றுக் கொள்வேன். இவ்வாறு அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். பன்னாட்டு ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அரச தலைவர் தேர்தலை தமிழ் மக்கள் ஓரணியில் எதிர்கொள்வதற்காக, தமிழ்த் தேசியக் கட்சிகள் இடையே பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. 5 தமிழ்க் கட்சிகள் பொது ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளன. 13அம்சக் கோரிக்கைகள் அந்தப் பொது ஆவணத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் இந்த ஆவணத்தை முன்வைத்துப் பேசுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் கோத்தபாயவிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலை முன்னிட்டு 5 தமிழ்க் கட்சிகள் இணைந்து பொது ஆவணத்தை தயாரித்துள்ளதாக அறிக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்குத் தயாராகவுள்ளேன். ஆனால், அவர்கள் தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள 13 கோரிக்கைகளை அடியோடு நிராகரிக்கின்றேன். அதை முன்வைத்து அவர்கள் பேச்சு நடத்த முன்வந்தால், நான் அவர்களுடன் பேசுவதற்குத் தயாரில்லை.

தமிழ்க் கட்சிகள் எனக்கு ஆதரவு வழங்காவிட்டாலும், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வேன். அதற்காக தமிழ்க் கட்சிகளின் ஆதரவு தேவையில்லை என்று சொல்லவில்லை. அவர்கள் முன்வைத்த விடயங்கள் பாரதூரமானவை-என்றார். (ஒ.5,22)

## பலாலியில்...

வெளியிட்டுள்ளார்.

'அரச மொழிக் கொள்கைக்கு அமைய, சிங்கள மொழியே பெயர் பலகைகளில் முதலில் இருக்கவேண்டும். ஆனால் இதற்கு மாறாக, யாழ். பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் முதலில் தமிழ் மொழியும் இரண்டாவதாக சிங்கள மொழியும் மூன்றாவதாக ஆங்கில மொழியும் இருப்பதாக பெயர்ப்பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது மொழிக் கொள்கைகள் இல்லாது போயுள்ளன' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட தேர்தல் பணிமனையின் பெயர்ப் பலகையில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விமல் வீரவன்சவின் கருத்துத் தொடர்பில், தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் கூறியதாவது, அரசமைப்பின் 16ஆம் திருத்தம் மூலம் தமிழ் மொழி வடகிழக்கின் நிர்வாக மொழி ஆகி விட்ட விடயம் அறியாத, படிக்காத முட்டாள் தற்குறி விமல் வீரவன்ச. அவருடன் கூட்டுக்குடித்தனம் செய்யும் டக்ளஸ், தொண்டமான், அதாவுல்லா போன்றோர் இவருக்கு எழுத படிக்க கற்றுக்கொடுத்து, அரசமைப்பையாவது வாசிக்க பழக்க வேண்டும். தமிழ் மொழி முழு இலங்கையின் இன்னொரு ஆட்சி மொழி என்பதையும், தமிழ் மொழி வடகிழக்கின் நிர்வாக மொழி என்பதையும் இந்த தமிழில் பேசும் மூன்று கோத்தா ஆதரவு கூட்டு குடித்தன அரசியல்வாதிகளும் அறிவார்கள் என்று நம்புகிறேன்- என்றார். (ஒ.5,61)

## சோறு...


கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

இப்போது உரங்களை இலவசமாக வழங்குவதாகவும் வரிகளை குறைப்பதாகவும் கூறுகிறார்கள். எனக்கு ஒன்றே ஒன்று தான் கேட்க வேண்டியிருக்கின்றது. உங்களின் ஆட்சி காலத்தில் ஏன் பொருள்களின் விலைகளை குறைக்க முடியாமல் போனது? நாட்டின் வாக்காளர்கள் ஒரேயொரு தீர்மானத்தைதான் மேற்கொள்ள வேண்டும். சோற்றை சாப்பிட வேண்டுமா அல்லது துப்பாக்கிச் சூடுகளை எதிர்கொள்ள வேண்டுமா என்று நவம்பர் 16 ஆம் திகதி நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்- என்றார். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியை சரிவில் இருந்து மீட்ட ரோகித்;
# போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் நிறுத்தம்




தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் ரோகித் சர்மா சதமடித்து அசத்தினார். போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

தென்னாபிரிக்கா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இதில் 2 டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. 3 ஆவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரோகித் சர்மா, மயங்க் அகர்வால் களமிறங்கினர். அணி 12 ஓட்டங்களைப் பெற்ற போது ரபாடா முதல் இலக்குச் சரிப்பை ஆரம்பித்து வைத்தார். மயங்க் அகர்வால் 10 ஓட்டங்களில் பவிலியன் திரும்பினார். அடுத்துளமிறங்கிய புஜாரா ஓட்டமெதனையும் பெறாது ரபாடாவின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் ரோகித் நிலைத்து நின்றார். அணி 50 ஓட்டங்களை எட்டுவதற்குள் 3 இலக்குகளை இழந்து தடுமாற ஆரம்பித்தது. அணித் தலைவர் கோக்லி 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் இணைந்த ரஹானே, ரோகித்துக்கு சிறந்த இணையாக களத்தில் நிற்க அணி ஓரளவு சரிவில் இருந்து மீண்டது. ரோகித் இந்தத் தொடரிர் மூன்றாவது முறையாக சதம் அடித்து அசத்தினார். இருவருக்குமான இணைப்பாட்டமாக 185 ஓட்டங்கள் பெறப்பட்டது.

முதல் நாள் ஆட்டத்தின் 58ஆவது பந்துப்பரிமாற்றத்தில் இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 224 ஓட்டங்கள் பெற்ற போது போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. சிறிது நேரத்தில் மழையும் பெய்தது. ரோகித் சர்மா 117 ஓட்டங்களுடனும், ரஹானே 83 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.




## தென்னாபிரிக்க வீரருக்கு 5 ஆண்டுகள் சிறை

சூதாட்ட வழக்கில் சிக்கிய தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் வீரருக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் வீரர் குலாம் போடிக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

46 வயதான அவர் 2 ஒருநாள் மற்றும் ஒரு ரி-20 போட்டிகளில் விளையாடி இருக்கிறார். குலாம் போடி மீது ஆட்ட நிர்ணய சதி குற்றச்சாட்டு கூறப்பட்டது.

2015ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடந்த உள்ளூர் போட்டியின் போது அவர் ஆட்ட நிர்ணய சதி எனும் சூதாட்டத்தில் சிக்கினார். இதற்காக குலாம் போடிக்கு 20 வருடம் தடை விதித்து தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை. அவர் மீது 8 விதமான ஊழல் முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த நிலையில் இந்த வழக்கில் குலாம்போடிக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## பார்சிலோனா சிறப்பாட்டம்

ஐரோப்பியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா போட்டித் தொடரில் நேற்று இடம் பெற்ற போட்டியொன்றில் பாரிசிலோனா அணி 3:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

பார்சிலோனா - எய்பர் அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் போட்டியின் முதல் பாதியாட்டம் ஆரம்பித்த 13ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் அன்ரன் கிரீஸ்மன் முதல் கோலைப் போட்டு போட்டிக் கணக்கை ஆரம்பித்து வைத்தார். முதல் பாதி ஆட்டத்தில் பார்சிலோனா அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த 13ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணிக்கு இன்னுமொரு பெறப்பட்டது. அந்த அணி வீரர் மெஸ்ஸி அந்தக் கோலைப் போட்டார். எய்பர் அணி வீரர்களும் கோல் போடுவதற்கான எத்தணிப்புக்களை மேற்கொண்ட போதிலும் பார்சிலோனா அணி வீரர்களில் அது தகர்க்கப்பட்டது. ஆட்டத்தின் 66ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணி வீரர் சுராஜ் ஒரு கோலைப் போட ஆட்டத்தின் இறுதியில் பார்சிலோனா அணி 3:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

எய்பர் அணிக்கு கோணர் முறையில் கோல் போடுவதற்கான இரு வாய்ப்புக்கள் இருந்த போதிலும் அவர்களை அதனை தவறவிட்டனர்.






## இந்திய அணியில் ஷாபாஸ் நதீம் இணைப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் ஷாபாஸ் நதீம் இடம் பிடித்தார்.

நேற்று ஆரம்பமான இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியில் சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் இடம் பிடித்திருந்தார்.

இறுதிப் போட்டிக்காக இந்திய வீரர்கள் பயிற்சிகளை மேற்கொண்டனர். அப்போது தோள்பட்டையில் வலி இருப்பயதாக குல்தீப் யாதவ் தெரிவித்துள்ளார். இதனால் அவருக்குப் பதிலாக ஷாபாஸ் நதீம் அணியில் இணைக்கப்பட்டார்.

இடது கை சுழற்பந்து வீச்சாளரான ஷாபாஸ்நதீம் உள்ளூர் கிரிக்கெட்டில் சிறப்பாக பந்து வீசி வருகிறார். அவர் முதல் தர கிரிக்கெட்டில் 424 இலக்குகளும், 'ஏ' போட்டியில் 145 இலக்குகளும், ரி-20 போட்டியில் 98 இலக்குகளையும் வீழ்த்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.20

மாலை சந்தை மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக அழைக்கப்பட்ட கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இரவு 8மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் வல்வெட்டித்துறை ஆதி சக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி வலைப்பாடு ஜெகமீட்பர் அணி மோதியது. இதில் கிளிநொச்சி வலைப்பாடு ஜெகமீட்பர் அணி 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (23)

- - - - - -

இலங்கை கராத்தே தோ சம்மேளனத்தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் ஜப்னா கராத்தே பாடசாலை 39 தங்கங்கப் பதக்கங்கள், 26 வெள்ளிப் பதக்கங்கள் 20வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தமாக 85 பதங்கங்களை வென்று தேசிய கராத்தே சுற்றுப்போட்டிக்கு தெரிவாகியுள்ளார்கள். (23)





# ஞானமுருகன் – பாடும்மீன் இறுதியில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.20

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்திய எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3,30 மணிக்கு அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்கள் பணிமனை தலைவர் பி.ஏ.எஸ்.சுபியான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (23)

# காணொலியால் சர்ச்சை

பாகிஸ்தானின் டெஸ்ட் மற்றும் ரி-20 அணிகளின் தலைமைப் பொறுப்பிலிருந்து சர்பிராஸ் அகமட் நீக்கப்பட்ட பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தனது ருவிற்றர் தளத்தில் பதிவு செய்த காணொலியால் சர்ச்சை உருவாகியுள்ளது.

சர்பிராஸ் அகமட் நீக்கப்பட்ட அறிவிப்பின் பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை தனது ருவிற்றர் பக்கத்தில் வீரர்கள் பயிற்சியின் போது நடனமாடுவதை காண்பிக்கும் காணொலியை வெளியிட்ட பின்னர் உடனடியாக அதனை அகற்றியது.

இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் ரசிகர்கள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு எதிராக கடும் எதிர்ப்பை வெளியிட்டதைத் தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மன்னிப்பு கோரியது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அதிகாரி தெரிவிக்கையில்;

இந்தக் காணொலி பொருத்தமற்ற தருணத்தில் வெளியாகியுள்ளது. இது ரி-20 உலக கிண்ணப் போட்டி விளம்பரங்களுக்காக நாங்கள் உருவாக்கியிருந்தோம். எனினும் தலைமைத்துவ மாற்றம் குறித்த அறிவிப்பு வெளியான தருணத்தில் அது வெளியாகிவிட்டது. அதற்காக மன்னிப்புகோருகின்றோம் – என்றார்.

### பாக். எதிரான போட்டியில்

# இளம் வீரர்களின் சிறப்பான ஆட்டம் மூத்த வீரர்களுக்கு கடும் அழுத்தம்

பாகிஸ்தானில் இலங்கையின் அனுபவமற்ற அணியின் ரி-20 வெற்றியை பாராட்டியுள்ள சகலதுறை வீரர் திசார பெரேரா அதேவேளை இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடியுள்ளமை தன்னை போன்ற மூத்த வீரர்களுக்கு அது அழுத்தத்தை உருவாக்கியுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையின் அணியின் ஒவ்வொரு மூத்த வீரரும் அழுத்தத்தை எதிர்கொள்ளுவார்கள். இது இலங்கை அணிக்கு சிறந்த விடயம். பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 வெற்றி இலங்கையின் திறமையின் அளவை வெளிப்படுத்தியுள்ளது. சக இளம் வீரர்கள் குறித்து பெருமிதம் அடைகின்றேன்.


ஒரு இலங்கையன் என்ற அடிப்படையில் நான் அவர்களின் வெற்றி குறித்து பெருமைப்படுகின்றேன். இளம் அணி ரி-20 தரவரிசையில் முதலாவதாக உள்ள அணியை தோற்கடித்துள்ளது. பல வீரர்கள் பாகிஸ்தான் செல்ல மறுத்ததன் காரணமாக [illegible] கள் அந்த [illegible] மிகச் சிறப்பாக பயன்படுத்தினார்கள் – என்றார்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 19.10.2019 | வெற்றி வாரம் 2652 | வர்ணம் இளம் நீலம்
மகரம்
வெற்றி இலக்கங்கள் 03 05 15 41
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,453,274/=
20.10.2019 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824834 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 766
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.10.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,004,995/-
வெற்றி இலக்கங்கள் 12 14 32 58 W
SEASON
விசேட வெற்றி இல. 9629
0114 825 825


சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3250 திகதி: 2019.10.19 சனிக்கிழமை
SATURDAY FORTUNE
பச்சை
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 28 30 68 73 H
போனஸ் இலக்கம் 33
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 65,681,720/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

கண்ணீர் அஞ்சலி



எமது கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராக கடமையாற்றும்
திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா ஜெயக்குமாரி
அவர்களின் பாசமிகு தந்தையார்
கிருஷ்ணபிள்ளை முத்துக்குமாரு
19.10.2019 அன்று சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சா்நதியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!
விரிவுரையாளர் கழகம்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.

சுவாசத்தை பாதுகாக்கும் சூழல் நட்புறவுமிக்க R32 வாயுவைக் கொண்ட Abans வளிச்சீராக்கிகள்



உங்கள் சுவாசத்திற்கு நிகரான சூழலை பாதுகாப்பதற்கு துணையாக இருக்கும் சூழல் நட்புறவுமிக்க R32 குளிர்பதன வாயுவை உள்ளடக்கிய Abans ஸ்பிலிட் வளிச் சீராக்கியை 9000 BTU, 12000 BTU, 18000BTU, 24000 BTU ஆகிய கொள்ளளவுகளில் பெற்றுக் கொள்ள முடியும்.
வளிமண்டலத்தில் வெப்பநிலை அதிகரித்து காலநிலைகள் மாறுவதற்கான சவால்களுக்கான தீர்வாக சூழல் நட்புறவுமிக்க R32 குளிர்பதன வாயு பயன்படுத்தப்படுகிறது. ஓசோன் படலம் பாதிப்படைந்து வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பதற்கான R410a குளிர்பதன வாயுவை பார்க்கிலும் R32 வாயுவின் சூழலுக்கான தாக்கம் 1/3 பகுதியாகும். குளிர்ச்சியூட்டும் செயல் திறனை அதிகரித்து அதிகமாக மின்சாரத்தை சேமிக்கும் ஆற்றல் R32 இடம் உள்ளது.
Abans வளிச்சீராக்கி 100% கொப்பர் கண்டென்ஸரில் பாதுகாக்கப்படுவதால் வளிச்சீராக்கியின் நீண்ட நாள் உழைப்பை உறுதி செய்கிறது. அதேபோல் குறைந்த நுகர்வில் இயங்குகிறது.
அதேபோல் இங்கு காணக்கூடிய Turbo Cooling சிறப்பம்சங்கள் தேவையான வெப்ப நிலையில் குளிர்ச்சியை மிகவும் துரிதமாக பெற்றுத் தருவதால் மின்சாரத்தை சேமிக்கும் ஆற்றல் இதற்கு உள்ளது. இதில் தூசி சுத்திகரிப்பை மேற்கொள்ளும் விசேட பில்டர் அமைப்பு உள்ளதோடு, உங்கள் இல்லத்தில் அல்லது சேவை நிலையத்தின் சுகாதாரத்தை சிறப்பாக உறுதி செய்கிறது.
Abans வளிச்சீராக்கிகள் நாடளாவிய ரீதியில் சகல அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் 12 மாதங்கள் வரை வட்டியற்ற கட்டண முறையில் பெற்றுக் கொள்ளமுடியும். (IN 13577)(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.